

கல்கி
KALKI
21.10.1962
30 காசு



உலகம் பூராவும் வனஸ்பதி வியாபித்திருக்கிறது!

வாழ்க்கைத்தரம் மிகவும் உயர்ந்துள்ள நாடுகள் உள்பட, உலகம் பூராவும், வனஸ்பதியும் வனஸ்பதி போன்ற கொழுப்புச் சத்துக்களும் உபயோகிக்கப்படுகின்றன. வெண்ணெய் ஏராளமாகக் கிடைக்கும் டென்மார்க், ஹாலந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட மக்கள் இக்கொழுப்புச் சத்துக்களையே பெரும் அளவில் உபயோகிக்கின்றனர்.

வனஸ்பதியின் தயாரிப்பு ஆரம்பமாவதற்கு முன் சமையலுக்குத் தாவர எண்ணெய்களும் பால் கொழுப்புக்களும், ஜீவக்கொழுப்புக்களும் மட்டுமே இருந்தன. பால் கொழுப்புகள் மற்றும் ஜீவக் கொழுப்புக்கள் தேவைக்கேற்ப கிடைக்கவில்லை. எண்ணெய்கள் திரவமாக இருப்பதால் எடுத்தான அசௌகரியம், அவற்றில் பலவித அசுத்தங்கள் கலந்திருக்கின்றன; மேலும் எண்ணெய்களில் விட்டமின்கள் கிடையாது. இதனால் விலை மலிவான, போஷாக்குள்ள, விழுதான, கொழுப்புச் சத்துக்காக உலகம் பூராவும் தீவிர ஆராய்ச்சி செய்யப்பட்டது. இதன் விளைவுதான் வனஸ்பதி!

தாவர எண்ணெய்களை சுத்திகரித்து, வாசனையை நீக்கி, "ஹைட்ரோஜனேட்" செய்து விட்டமின்கள் சேர்க்கப்பட்டதுதான் வனஸ்பதி. சுத்திகரிப்பினால், தாவர எண்ணெய்களிலுள்ள விரும்பத்தகாத கொழு கொழுப்பு, அழுக்கு, "ப்ரீ ஃபாட்டி ஆஸிட்கள்," நிறம் முதலியவை அகற்றப்படுகின்றன, வாசனை அகற்றப்படுவதன் மூலம் விரும்பத்தகாத மணம், ருசி, இவைகள் நீக்கப்படுகின்றன. "ஹைட்ரோஜனேட்" செய்வதால் திரவ ரூபமான எண்ணெய்கள் விழுது பதமாகக் கெட்டியாவதுடன் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கின்றன. விட்டமின்கள் சேர்க்கப்படுவதால் வனஸ்பதி, தாவர எண்ணெய்களை விட போஷாக்குச் சத்து வாய்ந்ததாயிருப்பது மட்டுமல்லாமல், பரிசுத்தமான பால் கொழுப்புக்குச் சரி சமானமாய் விளங்குகிறது.

வனஸ்பதி விலை மலிவான, விழுதான சமையலுக்கேற்ற கொழுப்புச் சத்து மட்டுமல்ல—அது ஒரு போஷாக்குள்ள உணவும் கூட! சரிக்குச்சரி அளவுள்ள அரிசி அல்லது கோதுமையிலிருந்து கிடைக்கும் சக்தியை விட 2½ மடங்கு சக்தி வனஸ்பதியிலிருந்து நமக்குக் கிடைக்கும். மேலும், வனஸ்பதி உற்பத்தியான பொழுதிலிருந்ததைப் போல் பரிசுத்தமாக, புத்தம் புதிதாக, பூரண சத்துடன், உங்களுக்கு வாங்கக் கிடைக்கும். ஒவ்வொரு கிராம் வனஸ்பதியிலும் உடலின் வளர்ச்சிக்கு அவசியமானதும், சருமம், கண்கள் இவற்றின் பாதுகாப்புக்குத் தேவையானதுமான விட்டமின் 'ஏ' தாராளமாகக் கலந்திருக்கிறது.

**வனஸ்பதி மற்றும்
வனஸ்பதி போன்ற
கொழுப்புச் சத்துக்கள்
உலகமெங்கும்
உபயோகிக்கப்படுகின்றன!**

இதர விவரங்களுக்கு கீழ்க்கண்ட
விலாசத்துக்கு எழுதுங்கள்:

தி வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ்
அஸோஸியேஷன் ஆப் இந்தியா
இந்தியா ஹவுஸ் போர்ட் ஸ்ட்ரீட், பம்பாய்-1

JWT/VHA-4017

சுபகிருது, ஐப்பசி 5உ.


கல்கி

அக்டோபர் 21, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்



தீயினால் சுட்ட வடு மாறுது

புகைபிடிப்போருக்கு அழகு, பற்ற வைத்த சிகரெட்டை மேஜை போன்ற சாமான்கள் மீதோ, அலங்காரப் பொருள்களை ஒட்டியோ வைக்காமலிருத்தலே. சாம்பலைப் போக்குவதற்கு ஆஷ்ட்ரே இருக்க, வீணே மேஜை மீது தீய்ந்த வடுக்களையும், பளபளப்பான தளங்கள் மீது பழுப்பு நிறக் கவடுகளையும் விளைவிப்பானேன்?

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க
இழுக்க
இன்பம்-
இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 410 TAM Greens' Advtg.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 12

நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு

ஏந்த ஒரு வல்லரசும் மற்ற வல்லரசின் இணக்கத்தை எதிர்பார்க்காமல், தன்னைப் பொறுத்தமட்டில் நியாயமாக நடந்துகொண்டு ஆயுத சோதனையை நிறுத்த வேண்டும் என்பதுதான் ராஜாஜியின் அறிவுரை.

ஒரு தலைப்பட்சமாக ஆயுதச் சோதனையை நிறுத்த அமெரிக்காவோ, ருஷியாவோ முன் வராததற்குக் காரணம் அவை பரஸ்பரம் கொண்டுள்ள அவநம்பிக்கையும், அச்சமுமேயாகும். தேசங்கள் ஏன் இவ்விதம் ஒன்றுக்கொன்று அச்சமும், அவநம்பிக்கையும் கொள்ள வேண்டும் என்ற வினாவை எழுப்பிச் சிந்தனையைத் தூண்டி இதற்குத் தெள்ளத் தெளிய விளக்கமும் தருகிறார் ராஜாஜி.

தனி மனிதர்கள் பரஸ்பரம் பயமும், சந்தேகமுமின்றி வீட்டிலும், வீதியிலும், வெளியிலும் பழகவில்லையா? சமூகம் எப்போதும் போலீஸ் பந்தோபஸ்தை நம்பியா செயல்படுகிறது? தனி மனிதர்கள் இவ்வாறு அந்நியோன்யமான அன்பினால் இசைந்து வாழ முடியுமானால் அந்தத் தனி மனிதர்கள் ஒன்றுசேர்ந்த தேசங்கள் மட்டும் ஏன் ஒன்றிடம் மற்றது ஐயமும், அச்சமும் கொள்ள வேண்டும்? சமுதாய விரோதமான செயலைப் புரிந்தால் போலீஸ் தண்டனை கிடைக்கும் என்பதற்காக மட்டுமா மக்கள் அன்பினால் இணைகிறார்கள்? மக்களுக்கிடையே பொருந்தும் நியாயம் நாடுகளுக்கிடையும் பொருந்தத்தானே வேண்டும்?


உலக நாடுகளின் விஸ்தீரணத்தையோ, அவற்றின் வளமையையோ, அந்த நாடுகளில் வாழும் மக்களின் ஆற்றலையோ நாம் ஒருபோதும் மாற்ற முடியாது. எனவே என்றைக்குமே உலகில் பெரிய நாடுகள் — சிறிய நாடுகள், வளமிக்க நாடுகள் — வறுமை மிகுந்த நாடுகள், வலிமை நிறைந்த நாடுகள் — பலவீனமான நாடுகள் என்ற பேதங்கள் இருக்கத்தான் செய்யும். இந்தப் பேதங்களை ஒருபோதும் போர்மூலம் தீர்க்க இயலாது. படை பலத்தால் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த முடியாது. எல்லா நாடுகளும் பரஸ்பரம் அன்பால் ஒன்றுவதுதான் நிரந்தரமான சாந்திக்கு வழியாகும்.

இந்த வழியை வகுக்க வேண்டியதே இன்று ஐ. நா. சபையின் முக்கியமான ஆக்கப் பணியாக வேண்டும். 'நமது நாடு' என்ற உணர்ச்சிக்கு மேலாக 'நமது உலகம்' என்ற உணர்ச்சியை ஐ. நா. தோற்றுவிக்க வேண்டும். நாடுகள் தங்களுக்கிடையே அச்சத்தையும் வெறுப்பையும் நிறையப் பரப்பியாயிற்று. இனி அபயம், அன்பு இவற்றை உலக ஸ்தாபனமாகிய ஐ. நா. பரப்ப வேண்டும்.

'ஸ்வராஜ்யா'வில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் ராஜாஜி இவ்வாறு கூறுகிறார்.

ராஜாஜி கூறும் அறிவுரை எந்த ஆயுதமுமே தேவைப்படாத இலட்சிய உலகுக்குப் பாதை வகுக்கிறது. மக்களின் அடிப்படையான அன்பு உணர்ச்சியில் ராஜாஜி கொண்டுள்ள நம்பிக்கை நமக்கே நம்மைப் பற்றிய நன்னம்பிக்கையை வளர்க்கிறது. நம்பினோர் கெடுவதில்லை என்று பாடிய பாரதியாரின் வாக்குப் பொய்யாகாது.

மக்களின் நம்பிக்கை மெய்யாவதற்குத் தேவையான உபாயத்தையும் ராஜாஜி அமெரிக்காவில் விளக்கி யிருக்கிறார். பரஸ்பர அச்சமும், ஐயமும் அரசாங்கங்களிடையே தான் நிலவுகின்றன. இதற்கு மாறாக வல்லரசுகளைச் சேர்ந்த மக்கள் சந்தேகம், பயம் இரண்டையும் உதறித் தள்ள வேண்டும். அதன் மூலம், ஒருதலைப்பட்சமாக நடவடிக்கை எடுக்கத் தயங்கும் தத்தம் அரசுகள் இந்த நல்ல காரியத்தைச் செய்யுமாறு மக்கள் அவற்றைத் தூண்ட வேண்டும் என்கிறார். அமெரிக்க மக்களுக்கு ராஜாஜி அளித்துள்ள நல்லுரை எல்லா நாட்டு மக்களுக்குமே பொருந்தும்.



என்ன சேதி?

ராஜாஜியின் வருகை

இம்மாதம் பதின்மூன்றும் தேதி அமெரிக்காவிலிருந்து லண்டன் வந்து சேர்ந்த ராஜாஜி அங்கு பதினெட்டாம் தேதி வரை தங்கக்கூடும். பிறகு ரோமா புரி சென்று, இருபத்திரண்டாம் தேதி பம்பாய் வந்து சேர்கிறார். இருபத்தி மூன்றும்தேதி இரவு தில்லிக்குச் சென்று, இருபத்தைந்தாம் தேதியன்று காலை தில்லியிலிருந்து புறப்பட்டுப் பகல் பதினொரு மணிக்குச் சென்னைக்கு விமான மார்க்கமாகத் திரும்பி வருகிறார்.

பகல் உணவுத் திட்டம்

இருக்கிற வரிச்சுமை போதாது என்று, புதிய வரி ஒன்று விதிக்க அரசாங்கத்திடம் பஞ்சாயத்துத் தலைவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். இது மிக நல்ல யோசனை என்று கல்வி மந்திரியும் பாராட்டியிருக்கிறார்.

தற்சமயம் பஞ்சாயத்தார்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும் பகல் உணவுத் திட்டத்துக்காக நிதி திரட்டி வருகிறார்கள். அவர்களுக்குப் பொழுது விடிந்தால் யாசகத்துக்குப் போவது கஷ்டமாக இருக்கிறது. அதனால் இந்தத் தொகையையும் ஒரு வரியாக்கி வசூலிக்கும் பணியைப் பஞ்சாயத்து ஆபீசில் வரி வசூலிக்கும் குமாஸ்தா தலையில் ஏற்றி விட நினைக்கிறார்கள். இப்படிச் செய்வது பஞ்சாயத்தின் கீழ் வாழும் ஏழை கிராம மக்களின் வரிப் பளுவை அதிகமாக்கி விடும்.

விலைவாசியும் மந்திரிகளும்

"விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தப் போகிறோம்" "அதைக் கட்டுப்படுத்தி விட்டுத்தான் மறு காரியம்" "இதோ இதற்கு ஒரு கமிட்டி போட்டு விட்டோம்" "பிரதமர் வெளி நாட்டு சுற்றுப் பயணத்திலிருந்து திரும்பி வருவதற்குள் அவருக்கு யோசனை தரப்படும்!" என்றெல்லாம் மந்திரிக்குப் பின் மந்திரிகள் நீட்டி முழக்கினார்கள். ஆனால் நடைபெற்றது என்ன?

விசேஷ பொருளாதார நிபுணர்களையும், திட்டக் கமிஷனைச் சேர்ந்தவர்களையும் கொண்டு, விலைவாசிப் பிரச்னையை ஆராயக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு கூடி ஒரு முடிவுக்கும் வராமல் கலைந்து விட்டதாம்!

விலைவாசி உயர்வுக்கு முக்கியமான காரணம் எதுவோ அதை விட்டு வேறு காரணம் கண்டு பிடித்துப் பொது மக்களின் கண்களைத் துடைக்க முயன்றால், அது எப்படிப் பலன் அளிக்கும்?

பத்தாண்டில் கிடைத்த பலன்

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறி மூன்றாவது திட்டத்தில் இரண்டாவது ஆண்டு நடைபெறும் போதும் கிராமப் பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்குத் திட்டங்களால் கணிசமான பலன்கள் ஒன்றும் ஏற்படவில்லை என்பதைத் திட்டக் கமிஷன் அங்கத்தினர்களில் ஒருவரான ஸ்ரீமன் நாராயண் சொல்லிக் குறைப்பட்டுக் கொள்ளுகிறார்.

'விருப்பு வெறுப்பின்றி உண்மையைக் கூறுவது போல் கூறிக் கண்டனங்களுக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்வது ஒரு யுக்தி. குறைகளைத் தீர்க்க ஒரு முயற்சியும் எடுக்காமல் தவற்றை ஒப்புக் கொள்ளும் 'பரந்த' மனோபாவத்தால் ஏதும் பயன் கிடையாது' என்று முன்பு ராஜாஜி எழுதினார். அதுதான் இப்போது நம் நினைவுக்கு வருகிறது.

கோவை வர்த்தக சங்கம்

கோவை வர்த்தக] சங்கத்தின் கட்டடக் கால்நாட்டு விழாவில் அதன் தலைவர் திரு ஜி. கே. சுந்தரம், "வர்த்தக சமூகம், தேவையில்லாத பிரிவு போல் நடத்தப்படுகிறது; படிப்படியாக ஒழிக்கப்படுகிறது. இந்தப் பந்தோபஸ்தற்ற நிலைமையிலும் வர்த்தகத்தைத் தேசிய மயமாக்கும் பேச்சு அடிக்கடி கிளம்புவது வர்த்தக சமூகத்தினருக்கு மிகவும் சோர்வு உண்டாக்குகிறது!" என்று கூறியிருக்கிறார்.

இப்படிச் சர்க்காரின் தவறான போக்குகளை எடுத்துக் கூறியதோடு ஓர் உருப்படியான யோசனையும் கூறியிருக்கிறார்.

"தென்னாட்டிலுள்ள எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து விற்பனை வரிச் சட்டங்களைத் திருத்தி ஒரே மாதிரிச் சட்டம் வகுத்தால் நல்லது" என்பதே அது.

காந்தி சமாதான கழகத்தின் சார்பில் அமெரிக்கா சென்றுள்ள தூது கோஷ்டியினர், செப்டம்பர் 28ந் தேதி அமெரிக்க ஜனாதிபதி கென்னடியை வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை எதிர்ப்புறத்தில் பிரசுரித்திருக்கிறோம். புகைப்படத்தில் ராஜாஜிக்கு வலப்புறத்தில் கென்னடி, திவாகர், சிவராஜ் ஆகியோரைக் காண்கிறோம். ராஜாஜிக்கு இடப்புறம் இருப்பவர் டாக்டர் சத்தியநாராயணா.

குதிரையும் கலைமானும்

குதிரை ஒன்றும் கலைமான் ஒன்றும் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன. செழிப்பான பகுதியில் யார் மேய்வது என்பதில் அவற்றுக்கிடையே போராட்டம் மூண்டது. நீண்ட, வலுவாய்ந்த கொம்புகளைப் பெற்றிருந்த கலைமான் குதிரையைக் குத்தி விரட்டி விட்டது. குதிரை மனிதனிடம் சரண் புகுந்து, 'என்னை ரட்சிப்பாய்' என வேண்டிற்று. குதிரைக்கு உதவி செய்ய மனிதன் ஒப்புக் கொண்டான். குதிரையின் உதவியுடனேயே கலைமானை வெல்ல உத்தேசித்தான். தான் உட்கார வசதியாகக் குதிரையின் முதுகில் சேணமும், முகத்தில் கடிவாளமும் போட்டு அதன் மீதமர்ந்து மேய்ச்சல் பூமிக்குச் சவாரி வந்தான். மானோடு சண்டையிட்டு அதைத் துரத்தி விட்டான்.

'நன்றி, ஆண்டவனே! கீழே இறங்கிச் சேணத்தையும், கடிவாளத்தையும் எடுத்து விடுகிறாயா? நான் சுதந்திரமாகப் புல் மேய்கிறேன்' என்றது குதிரை.

'அசட்டு மிருகமே! சுதந்திரமாவது ஒன்றாவது? நானா உன்னை விடுவேன்? நீ மனிதனுக்கு எவ்வளவு அடங்கியிருப்பாய், எவ்வளவு உதவியாய் இருப்பாய் என்பதை இப்போது கண்டுகொண்டேன். தெரியாதிருந்த எனக்கு நீயாகவே அதைத் தெரிவித்து விட்டாய். இனிமேல் நீ எனக்கு அடிமையாக உழைக்க வேண்டியதுதான்' என்றான் மனிதன்.


இது ஈசாப்புக் கதை.

வறுமையை ஒழிப்பதற்காக மக்கள் சர்க்காரிடம் அடிபணிந்து நின்றால் ஈசாப்புக் குதிரை மனிதனிடம் அடைந்த நிலையையே அடைவர்.

— 'ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது

ஊர் வம்பு

PK



ஜயப்பிரகாசரும் ஆட்சிமொழியும்

எல். கிருஷ்ணசாமி பாரதி

தலைமை அமைச்சர் நேரு அவர்கள் சில காலம் வெளிநாடு சென்றிருந்தார்கள். அது சமயம் பார்த்து வடநாட்டு இந்தி வெறியர் கூட்டம் மீண்டும் மொழிப் பிரச்னையைக் கிளப்பிக் குட்டையைக் குழப்ப முற்படலாயிற்று. தில்லியில் ஒரு மகாநாடு கூட்டி ஆங்கிலத்தை யூனியன் அரசின் அலுவலக மொழியாக நீடிக்கவே கூடாது, ஆங்கிலத்தை அறவே ஒழித்துக் கட்ட வேண்டும், இந்தி ஏகாதிபத்தியம் தனிக் கோலோச்ச வேண்டும் என்ற கூக்குரலைக் கிளப்பிற்று. மேலை நாட்டிலிருந்து திரும்பிய நேருஜி இந்தக் கிளர்ச்சியின் போக்கையும், நோக்கையும் கண்டு, மனம் நொந்து, நாட்டின் ஒருமைப்பாட்டு முயற்சிக்கு உலைவைக்கும் தன்மையை அறிந்து இதனை வன்மையாகக் கண்டித்தார். ஆங்கிலத்தை அறவே ஒழிக்க முற்படும் இந்தக் கிளர்ச்சி சுத்த மடமையானதாகும் என்றார். ஆங்கிலத்தை நீடிப்பதற்குக் கொடுத்த அரசின் வாக்குறுதி ஒரு நாளும் மாற்றப்படாது என்று ஆணித்தரமாக அறிவித்தார். இவ்வளவு தெளிவாகவும் மன உறுதியோடும் நேரு அவர்கள் கூறியதற்காகத் தமிழ் மக்களின் சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறேன்.

இந்த நிலையில் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். அவ்வறிக்கை மொழிக் குட்டையை மேலும் கொஞ்சம் குழப்பியுள்ளது. பொதுப் பிரச்னைகளைப் பற்றிய விவாதங்கள் சீரிய முறையில் நடத்தப்பட வேண்டும் என்றும், எந்தத் தனிமனிதனுமே, யாருமே தன்னை முட்டாள் என்று அழைக்கப்படுவதை விரும்புவதில்லை என்றும் அவர் கூறுகிறார். நேரு அவர்கள் யாரையுமே முட்டாள் என்று கூறவில்லையே! ஆங்கிலத்தை ஒழிக்க முற்படும் கிளர்ச்சியை "மடமையான கிளர்ச்சி" என்றுதான் அவர் கூறினார். கிளர்ச்சி மடமையானது என்பது யாரையும் மடையன் என்று கூறுவதாகுமா? இப்படி நேரு அவர்கள் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லித் திரிப்பதுதான் சீரிய வழியில் விவாதம் நடத்தும் முறையோ ?


'இப்பொழுதுள்ள விவாதத்தின் மையக் கூறு எல்லாம் ஆங்கிலம் இணை மொழியாகச் செயல்படுவதற்கு ஒரு காலவரையறை வேண்டுமா இல்லையா என்பதுதான்' என்று திரு நாராயணன் கூறுகிறார். இது சரிதான்.

எப்போதிலிருந்து ஆங்கிலத்தை நீக்கி, இந்தியை ஆட்சி மொழியாக்குவது என்பது குறித்துக் காலவரை ஒன்றும் சட்டத்தில் குறிப்பிட வேண்டியதில்லை என்றே இந்தி மொழி பேசாத வட்டாரத்தினர் அனைவரும் ஒருமனதாகத் திட்டவட்டமாகக் கூறுகிறோம். வடநாட்டிலும், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டில் உண்மையான நாட்டம் கொண்டுள்ள அறிவுள்ள தலைவர் பலரும் நாம் சொல்லுவதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். நமது மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்களும் இதனைப் பன்முறை எடுத்துக் கூறி வலியுறுத்தியுள்ளார்கள். ஆனால் ஜே.பி. நாராயணன் அவர்கள் சட்டத்தில் ஒரு காலவரையறை நிறுவுவது நியாயமானது என்கிறார். அதற்கு விநோபாஜி ஆதரவு தந்திருப்பது போல் கூறுகிறார். ஆனால் விநோபாஜி கூறி உள்ளதைப் படித்துப் பார்த்தால்,— காலம் குறிப்பிடுவதை விநோபாஜி ஆதரிக்கவில்லை, அதற்கு மாறாக அதை எதிர்க்கிறார் என்றே தெரிகிறது. திட்டக் கமிஷன் அங்கத்தினரான ஸ்ரீமன் நாராயணன் அவர்களிடம் விநோபாஜி கூறியதாக வந்த பத்திரிகைச் செய்தி வருமாறு:

"ஆங்கிலம் இணை மொழியாக வேண்டிய காலத்தை நிர்ணயிக்கும் விஷயத்தில், அந்தக் காலத்தை இந்தி பேசாத வட்டாரத்தினரின் விருப்பத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் விட்டு விடலாம் என்று விநோபாஜி நினைக்கிறார். அதற்கான காலவரையறையைக் குறிப்பிடாதிருந்தால், இந்தி பேசாத மக்களுக்குள்ள பொறுப்பு சற்றே அதிகமாகும்; பொதுவாக எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே, இந்தி ஒரே அலுவலக மொழியாக ஏற்படும் காலம் வர நேருவதாகலாம். ஒரு காலவரையறையைக் குறிப்பிட முற்படுவோமானால், இந்தி பேசாத மக்களிடம் சந்தேகம் ஏற்படுவதற்கு ஏது ஆவதோடு, அவநம்பிக்கையும் ஏற்படும். மேலும் இந்தி பரவுவதற்கு வேண்டாத அநாவசியமான எதிர்ப்புக்களும் கிளம்பி விடும் என்று விநோபாஜி கருதுகிறார்."

இதனைப் படித்தால் காலம் குறிப்பிடுவதற்கு விநோபாஜி எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்றே தெரிகிறது. அதற்குரிய காரணங்களையும் தெளிவாக விளக்குகிறார். முதல் வாக்கியத்தின் பொருள், இந்தி பேசாத மக்கள் இப்போது வரப்போகும் சட்டத்தில் காலம் குறிப்பிட வேண்டும் என்பதல்ல.





பிற்காலத்தில் உரிய நேரத்தில் ஆங்கிலத்தை இனி நீக்கிவிடலாம் என்று சொல்லும் உரிமையையே குறிப்பிடுகிறார். இப்பொருள் இல்லாவிட்டால் பின்னும் வரும் இரண்டு வாக்கியங்களுக்கும் பொருளே இல்லாமல் போய்விடும்? காலம் குறிப்பிடாததினால் வரும் நன்மைகளையும் இவ்வளவு தெளிவாக விநோபாஜி விளக்க வேண்டியதில்லையே!

அஃது எவ்வாறிருப்பினும் தமிழ் நாட்டு மக்களாகிய நாம் சட்டத்தில் காலம் குறிப்பிடுவதை எதிர்க்கிறோம். எப்பொழுது ஆங்கிலத்தை அலுவல்மொழி நிலையிலிருந்து நீக்குவதென்பது இப்பொழுது சொல்லக்கூடியதில்லை?


இந்த விவாதத்தின் குழப்பத்துக்கு ஒரு காரணம், இரண்டு ஆங்கிலச் சொற்களின் பொருள்களையும், அவற்றின் வேறுபாட்டையும் அறிந்து கொள்ளாமையே யாகும்; அவ்வறியாமையினால் அறிவிற் சிறந்த திரு ஜே. பி. நாராயணன் அவர்களே இக்குழப்பத்துக்கு ஆளாகிறார். 'தேசிய மொழி, அலுவலக மொழி ஆகிய இவ்விரண்டு சொற்களும் அடிப்படைப் பொருள்களில் வேறுபாடு உடையன. அரசியல் நிர்ணய சபையின் காங்கிரஸ் உறுப்பினன் என்ற நிலையில், தில்லியில் நடந்த காங்கிரஸ் கட்சிக் கூட்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் பேறு பெற்றவன் என்ற நிலைமையில் இவற்றைப் பற்றி அறிந்து கொள்ள அடியேனுக்கு வாய்ப்புகள் பல ஏற்பட்டன. ஆராய்ச்சிக்கும் நீண்ட நாள் சர்ச்சைக்கும் பின்னரே யூனியன் அரசின் மொழியை அழைப்பதற்கு, அலுவலக அல்லது நிர்வாக என்ற அடைமொழியைத் தேர்ந்தெடுத்தோம். இது அமைந்த அரசியல் சட்டத்திலுள்ள அடைமொழியாகும்.

இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையிலுள்ள பதினான்கு மொழிகளைத் தேசிய மொழிகள் என்று அழைப்பதே பொருந்தும். இந்திய நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ள பெரும் எண்ணிக்கை கொண்டுள்ள மக்களின் தாய்மொழிகள் அவை. ஆகவே அவை தேசிய மொழிகளாகும். அந்த எட்டாவது அட்டவணையில் இந்தியும் ஒன்று. எனவே, இந்தியும் ஏனைய பதின்மூன்று மொழிகளைப் போலவே ஒரு தேசிய மொழியாகும்: அதோடு இந்திய யூனியன் அரசின் அலுவலக மொழியாக இந்தியும் ஆங்கிலமும் உள்ளன. அலுவலக மொழியை, தேசிய மொழி என்று அழைப்பது தவறு. அலுவலக மொழி, தேசிய மொழி ஆகும் என்றால் ஆங்கிலம் தேசிய மொழியாகிவிடும் அல்லவா?

இந்திய நாட்டுக்குப் பதினான்கு தேசிய மொழிகள்.

யூனியன் அரசுக்கு இரண்டு அலுவலக மொழிகள். இந்தியாவில் உள்ள நாற்பது கோடி மக்களும் தங்கள் தாய்மொழியை இந்தியாக மாற்றிக் கொள்ளும் காலம் ஒன்று வருமானால் அன்று இந்தி ஒரே தேசிய மொழியாகலாம்! அதுவரை நாட்டுக்குப் பதினான்கு தேசிய மொழிகளே! ஆனால் யூனியன் அரசின் அலுவலக மொழி, இப்பொழுதுள்ள இரண்டுக்கும் பதிலாக ஒன்று என்ற காலம் வரலாம். அக்காலத்தை இப்பொழுதே வரையறுக்கக் கூடாது — வேண்டாம் என்று சொல்லுகிறோம். இந்த வேறுபாட்டை உணர்ந்து கொள்ளுவது நலம்.





வட்ட மேஜை

விஷம்போல் ஏறும் விலைகள்

சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற மாதர் கூட்டமொன்றில் பேசுகையில் இன்றுள்ள விலைவாசி ஏற்றத்துக்குக் காரணம் பெரிய வியாபாரிகள்தான் என்றும், அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு மந்திரிகள் பயப்படுகிறார்கள் என்றும் இலாகா இல்லாத யூனியன் மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரி யார் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

உற்பத்தி, விநியோக முறைகளில் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுகள், லைசென்ஸ் — கோட்டா விதிகள் போன்றவைகளே இன்று காணப்படும் விலை ஏற்றத்துக்குக் காரணம் என நம்பத் தக்க சான்றுகள் உள்ளன. இவைகளை நீக்கி விட்டால், விலை ஏற்றம் மாறி சகஜ நிலை ஏற்படும். இதைச் செய்யாமல் குற்றம் சாட்டுவதில் எந்தவித பயனும் இல்லை.

உண்மையைச் சொல்லப் போனால், சர்க்கார் நடத்தும் தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். செட்டிநாட்டில் சென்னை அரசாங்கம் ஒரு கோழிப் பண்ணை நடத்துகிறது. இந்தப் பண்ணையில் ஒரு முட்டை 25 நயா பைசாவுக்கு விற்கிறார்கள். ஆனால் இதே ஊரில் தனி நபர்கள் நடத்தும் கடைகளில் முட்டை ஒன்று 15 நயா பைசாவுக்குக் கிடைக்கிறது. விலைவாசியைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் என்பதே இன்றுள்ள பிரச்னை. உற்பத்தி பெருகினால்தான் விலைவாசி குறையும். உற்பத்தி பெருக, கன்ட்ரோல்களும், கோட்டாக்களும், லைசென்ஸ் முறைகளும் நீங்க வேண்டும்.

இதைத்தான் தலைவர் ராஜாஜி அடிக்கடி சொல்லி வருகிறார். ஆனால் ஆட்சி செய்வோரின் காதில் ஏற வேண்டுமே!

தேவகோட்டை
29-9-62

எஸ். கருணாநிதி

ஆயுத பூஜை

'கல்கி' அக்டோபர் 7-ம் தேதி இதழில் வெளியாகியுள்ள 'ஆயுத பூஜை' என்ற தலையங்கத்தைப் படித்து முடித்ததும் பாரதத்தின் முதல் சுதந்திர தினத்தன்று காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய நல்லுபதேசம் ஞாபகத்துக்கு வந்தது. ஆட்சிப் பொறுப்பிலுள்ளோர் வேதாந்திகளாக இருக்கவேண்டும் என்பதே அதன் சாராம்சம்.

"ஸ்ரீராமருக்கு வசிஷ்டர் ஞானவாசிஷ்ட மூலமாக அத்துவைத தத்துவத்தை உபதேசித்தார். ஜனகரும் ராமதாஸரும், 'நான் போதும்' என்னும் நூலை இயற்றி சிவாஜிக்கு அத்வைதானுபவம் சித்திக்கும்படி அருளினார்..... மீண்டும் உலகெங்கும் ஜனக ராஜ்யமும் ராமராஜ்யமும் நிலவ வேண்டுமானால் விருப்பும் வெறுப்புமின்றி அன்பும் அருளுமே உலகத்தைச் செழிப்புறச் செய்ய வேண்டுமானால் - உலகெங்கும் அத்வைத சாஸ்திரம் பரவ வேண்டும். ஆட்சிபீடங்களில் வேதாந்திகள் இடம் பெற வேண்டும். இவ்வாறு இருத்தற்கு எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக" என்பதே ஆசாரிய சுவாமிகளின் உரை.

அத்வைத வேதாந்தச் செல்வரான ஸ்ரீ ஆதிசங்கரர் அவதரித்த புனித நாட்டிலிருந்து ஊது சென்றிருக்கும் நம் ராஜாஜி அவர்கள் பயத்தையும், அவநம்பிக்கையையும் அகற்றுமாறு வல்லரசுகளுக்குக் கூறும் யோசனைகள் ஜீவராசிகளை ஒன்றாகக் காணும் அத்வைத நோக்கையே இறுதியில் அளிக்க வேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

சென்னை
4-10-62

வி. நாகராஜன்



அடுத்தாற்போல் என்ன?

பிளாஸ்டிக் கடை பெருமாள் செட்டியார் சற்றுச் சோர்ந்தாற் போல் உட்கார்ந்திருந்தார். வியாபாரத் துறையிலிருப்பவர்கள் சோர்ந்தாற் போல் உட்கார்ந்திருந்தால் அதற்குக் காரணம் வியாபாரம் மந்தமாகத் தானே இருக்க வேண்டும்? இரண்டு மாதங்களாக அவர் கடைப் பொருள்கள் ஏகமாகத் தேங்கிப் போய் விட்டன.

இப்படி இருக்கும்பொழுதுதான் ஒருநாள் காமாட்சிநாதன் அவர் கடைக்குள் நுழைந்தான்! காமாட்சிநாதன் யார் என்று உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! 'அனசூயா' என்ற பத்திரிகைக்கு விளம்பரம் சேகரிப்பவன்! அவனைப் பற்றித் தெரிந்து கொண்டதுமே செட்டியாருக்கு உடம்பெல்லாம் எரிந்தது! அவரே தினம் 'ஒளி'ப் பத்திரிகை வாங்கி ஒரு நிமிஷம் புரட்டி விட்டுக் கொடுப்பவர். அவரிடம் காமாட்சிநாதன் விளம்பரம் கேட்பதற்கு வந்தால் நடக்கிற காரியமா? செட்டியார் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்:

"இதோ பார், தம்பி! இந்தக் காலத்திலே யார் பத்திரிகை விளம்பரம் படிக்கிறாங்க? அதிலே எனக்கு நம்பிக்கையே யில்லே."

"நீங்க விளம்பரம் கொடுக்க வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தப் போவதில்லே. ஆனால் பத்திரிகையிலே வர விளம்பரங்களை யார் படிக்கிறாங்க என்று மாத்திரம் சொல்லாதீங்க! பத்திரிகையிலே வர விளம்பரங்களைப் படிக்கிறாங்க என்பதை வேண்டுமானால் நான் நிரூபித்துக் காட்டுகிறேன்!" என்று படபடவென்று பொரிந்து தள்ளி விட்டு வெளியேறினான் காமாட்சிநாதன்.

இது நடந்த ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் கடையில் செட்டியாரின் நண்பர்கள், அறிமுகமானவர்கள், ஓரளவு தெரிந்தவர்கள் என்று ஒருவர் பின் ஒருவராக வரத் தலைப்பட்டார்கள். "என்ன செட்டியார்! இன்று அனசூயா பத்திரிகையில் உங்கள் விளம்பரம் பார்த்தேன். அடுத்தாற் போல் என்ன செய்யப் போறீங்க?" என்று கேட்டனர். இதைக் கேட்டு முதலில் சிரித்தார் செட்டியார்.

இதே கேள்வியை ஒருவர் மாற்றி ஒருவர் கேட்பதைக் காண அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. நேரில் வந்து கேட்பவர்கள் போகக் கடிதங்கள் மூலமாகவும் டெலிபோன் மூலமாகவும் தொந்தரவு அதிகமாகப் போய் விட்டது! ஒளிப் பத்திரிகை ஒன்றை வாங்கிப் பார்த்தார். அதில் 'அடுத்தாற்போல் பிளாஸ்டிக் கடை பெருமாள் செட்டியார் என்ன செய்யப் போகிறார்?' என்று கொட்டை யெழுத்தில் மூன்றே வரியில் ஒரு விளம்பரம் பிரசுரமாகி யிருந்தது. உடனே அனசூயா காரியாலயத்தைக் கூப்பிட்டு, காமாட்சிநாதனைத் தம் கடைக்கு வரச் சொன்னார்.

காமாட்சிநாதன் கடையேறி வந்ததும், வராததுமாக, "என்ன ஐயா! உம்மாலே பெரிய பேஜாராகப் போச்சு!...." என்று ஏதோ கோபமாகச் சொல்ல வாயெடுத்தார்.

"அதிருக்கட்டும் செட்டியார், என்ன கடையே காலியாகக் கிடக்குதே! போன வாரம் வந்தபோது கடையில் நிற்க இடமில்லாமல் ஏகப்பட்ட சாமான்கள் இருந்தனவே! இப்ப ஒன்றையும் காணுமே!" என்றான் காமாட்சிநாதன்.

அப்பொழுதுதான் செட்டியாருக்குத் தம் கடைப்பொருள்கள் அத்தனையும் வியாபாரமாகி யிருப்பது தெரிய வந்தது. அவன் மீது வந்த கோபமெல்லாம் பறந்து போய் "தம்பி அதுவா? 'அடுத்தாற் போல் என்ன செய்யப் போறே?' என்று கேட்டுக் கொண்டு வந்தவர்கள் எல்லாம் ஒன்றிரண்டு பொருள்களையும் வாங்கிப் போயிருக்கிறார்கள். அதனால் இது வரையில் என்றுமில்லாதபடி இந்த இரண்டு மூன்று நாட்களில் வியாபாரமாகி யிருக்கிறது!" என்றார்.

"அப்ப, செட்டியார்! பத்திரிகையில் வருகிற விளம்பரப் பகுதியை யாரும் படிக்கிறதில்லே என்று இனிமேல் சொல்ல மாட்டீங்களே! எல்லாரும் படிக்கிறாங்க என்று நிரூபணமாகி விட்டதல்லவா?" என்று கேட்டான் காமாட்சிநாதன்.

"நல்லா நிரூபிச்சே போ? வர்றவங்க எல்லாம் 'அடுத்தாற் போல் என்ன செய்யப் போறீங்க?' என்று கேட்டுப் பிராணனை எடுத்துட்டாங்க! அந்த விளம்பரம் நான் போட்டதில்லே என்ற உண்மையைச் சொல்லிக் கொள்ளவும் எனக்கு வெட்கமாயிருந்தது!" என்றார் செட்டியார்.

"வெட்கமாயிருப்பானேன், கேட்டவர்களுக்கெல்லாம் அடுத்தாற் போல் 'அனசூயா' பத்திரிகையில் விளம்பரம் செய்யப் போகிறேன் என்ற உண்மையைச் சொல்லி விடுவதுதானே!" என்றான் காமாட்சிநாதன்.

செட்டியார் அந்த உண்மையை வார்த்தைகளால் சொல்லவில்லை. காரியத்திலேயே காட்டி விட்டார்.

— வெங்கு



மனைவி : நாம் போட்டிருக்கும் பந்தயத்தில் நான் ஜெயித்தால் நீங்க எனக்குத் தீபாவளிக்கு ஒரு நெக்லெஸ் வாங்கித் தரணும்!


கணவன் : நான் ஜெயித்தால்?

மனைவி : நீங்க எனக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கிக் கொடுத்தால் போதும்.

இந்தியா சூப்பர்



பத்திரமான,
வழவழப்பாகச்
செல்லும்
இன்பச்
சவாரிக்கு ஏற்றது





இந்தியா டயர் & ரப்பர் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

maa. IT 1089 A. TH



42. கோபக் கனல்

திடீரென்று தம்மைப் போலீஸ்காரர்கள் சிறை செய்வார்கள் என்று வைத்தியரய்யா எதிர்பார்த்தாரா? திகைப்பிலும் வேதனையிலும் போலீஸ்காரர்களின் பின்னோடு நடந்தார் அவர்!

குமுதவல்லியின் வீட்டுக்கு வந்து பார்த்தால், அங்கே குமுதவல்லியையும் காணோம்!

''என்ன வைத்தியரய்யா! தாயார் வீட்டில் மகள் வந்து சேர்ந்து விட்டாள் என்றீர்கள்! இங்கே வந்து பார்த்தால் இரண்டு பேரையுமே காணோமே!''

''இதில் ஏதோ பெரிய வில்லங்கம் இருக்கு எசமான்களே! வக்கீலையா வந்தாத்தான் எதுவும் புரியும்போலிருக்கு!'' என்றார் வைத்தியர்.

வைத்தியரய்யாவை அழைத்துக் கொண்டு திவான்பகதூரிடம் செல்வதா அல்லது போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்வதா என்று அவர்கள் தயங்கிக் கொண்டிருக்கும் போது, இன்னொரு போலீஸ் ஜவான் அங்கே வந்து சேர்ந்தார்.

குமுதவல்லி அம்மாளிடமிருந்து ஒரு மனு வந்திருப்பதாகவும், தமது மகளைக் காணோம் என்று அவள் கொடுத்த வழக்கு அவசரத்தில் செய்த ஒரு வீண் பதற்றம் என்றும், திருமணப் பருவம் அடைந்துள்ள தமது மகளை முறைப்படி ஒரு வாலிபர் கலியாணம் செய்து கொண்டு விட்டார் என்றும், தனக்கு யாரிடமும் எவ்விதமான சந்தேகமும் இல்லை எனவும், அந்த மனுவில் குறிப்பிட்டிருப்பதாக அந்தப் போலீஸ்காரர் சொன்னார்!

''சரி; போலீஸ் ஸ்டேஷனுக்கே போவோம்!'' என்று சொல்லி வைத்தியரையும் அழைத்துக் கொண்டு நகர்ந்தார்கள் அவர்கள்.

இந்த நேரத்திலேதான், மலைக்கு மேலே செண்பக நாயகி கோயிலின் சுவர் ஓவியங்களிலே கடைசிச் சித்திரத்தை முடித்து விட்டு வெளியே வரும்படி, வில்வநாதனிடம் சொல்லிக்கொண்டிருந்தான் வேணுலிங்கம்!

சித்திரத்திலே அவ்வையாரின் இதயத்தையும் தனது கசப்பையும் சேர்த்து வர்ணமாகக் குழைத்துப் பூசிவிட்டு வெளியே வந்த வில்வநாதன், வேணுலிங்கத்தை உள்ளே வந்து சித்திரத்தைப் பார்க்கும்படி கூப்பிட்டான்! அப்போது

மலையடிவாரத்திலிருந்து யாரோ சீட்டி ஊதுகிற ஓசை 'பளீர்' என்று கேட்டது.

''தம்பி! காதிலே விழுந்ததா ஓசை! நம்முடைய மாப்பிள்ளை கடலையாண்டி சீட்டி ஊதுகிறான். அப்படியென்றால் என்ன தெரியுமா? மனித நடமாட்டம் ஆரம்பித்து விட்டது, எச்சரிக்கை என்று அர்த்தம்! ஆகையினால் இனி ஒரு வினாடிகூட நாம் இங்கே தாமதிக்கக் கூடாது. புறப்படுங்கள் தம்பி!'' என்றான் வேணு.

''நீங்கள் பார்த்து அனுபவிக்க வேண்டிய சித்திரம் அது ஒன்றுதான்! அதை நீங்கள் பாராமல்—''

மீண்டும் சேர்ந்தாற் போல் மூன்று முறை 'சீட்டி' ஓசை கேட்டது.

''தம்பி! மனிதர்கள் வந்து விட்டார்கள், தாமதிக்காதீர்கள் என்பதற்கு அடையாளமாக மூன்று தடவை ஊதி விட்டான். புறப்படுவோம். என்ன செய்வது! அந்தக் கடைசிச் சித்திரத்தைப் பார்க்காமலேயே நான் புறப்பட வேண்டியிருக்கிறது. பரவாயில்லை. இன்னொரு முறை வந்து பார்த்துக் கொள்ளுவோம்!'' என்றான் வேணு. பாவம்! அந்த 'இன்னொரு முறை' இனி வரப் போவதில்லை என்பதை அவன் அறிவானா!

சீட்டி ஓசை மறுபடியும் கேட்டது. வேணு சொன்னான்: ''தம்பி! கலவரத்தோடு எச்சரிக்கை செய்கிறது சீட்டி ஓசை! ஆகையினால், மேற்குப் புறமாகத் திரும்புங்கள். இரகசியமான ஒற்றையடிப் பாதை இருக்கிறது. அது வழியாகத்தான் நாம் இப்போது போக வேண்டும்!''

வேணுலிங்கமும் வில்வநாதனும் குண்டு குழிகளையெல்லாம் தாண்டி ஒற்றையடிப் பாதை வழியாக வேகமாகச் சென்றார்கள். அந்த அவசரத்தில் வேணு சித்திரத்தைப் பற்றி எதுவுமே கேட்கவில்லை. வில்வநாதனும் தனது கடைசிச் சித்திரத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அந்தச் சித்திரத்தின் கருத்து என்ன என்பதை வேணு மட்டும் விசாரித்துத் தெரிந்து கொண்டிருப்பானாகில், அந்த ஓவியன் வில்வநாதனுடைய வாழ்வின் எதிர்காலம் எத்தகைய மகத்தான மாறுதலை அடைந்திருக்கும்! எத்தனை பெரிய விபரீதம் தடுக்கப்பட்டிருக்கும்!

வேணுலிங்கமும் வில்வநாதனும் செண்பகவனத்திலிருந்து சென்று கொண்டிருந்த போது சிங்கம்புத்தூரிலிருந்து ஜமீந்தாரின் கோச் வண்டி செண்பகவனத்தை நோக்கி வேகமாக வந்து சேர்ந்தது.

சித்திரங்களின் அற்புதத்தையும் கலை நேர்த்தியையும் அபரிமிதமாக வியந்த வண்ணம் அனவரதபுவனபதி அந்தக் கடைசிச் சித்திரத்துக்கு வந்தாரோ இல்லையோ, அப்படியே அவருடைய உடம்பெல்லாம் பதறியது. கையும் காலும் ஆடின. நிலத்திலே ஊன்றி நிற்க முடியவில்லை அவரால்!

''கப்பையா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தார்.

''கப்பையா! எவ்வளவு வேகமாக வண்டியை மறுபடி ஓட்டுவாயோ தெரியாது! இப்பவே புறப்படு!'' என்றார் ஜமீந்தார் அனவரதர். வண்டியில் ஏறி உட்கார்ந்தவர் ஒரு வார்த்தை பேசவில்லை. கண்கள் சிவந்திருந்தன. முகத்தில் ஏதோ விபரீதக் கோடுகள் வளைந்தன. நெஞ்சு படபடத்தது.

'கோச்' வண்டி வந்து நின்றதும் சிங்கம்புத்தூர் மாளிகையிலே எதிர்பாராத அதிர்ச்சி ஏற்பட்டது! ஜமீந்தார் அத்தனை வேகமாகத் திரும்பி வந்து விட்டது மட்டும் இல்லை, வந்த மறு வினாடி வல்லாளவேலரைத் தனியாக அழைத்துப் போய்ப் பேசிக் கொண்டிருந்தார். இது பலருக்கும் வியப்பைத் தந்தது. முக்கியமாகச் செல்விக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

கோவிலிலிருந்து திரும்பிய தந்தை தன்னிடம் வந்தல்லவா முதலில் எல்லாச் செய்திகளையும் சொல்லுவார்? அதற்குப் பதில் இப்போது வல்லாளவேலரைக் கூப்பிட்டு ஏதோ இரகசியம் பேசுகிறார்களே — என்று எண்ண எண்ணச் செல்விக்கு நிலை கொள்ளவில்லை. கப்பையாவைக் கூப்பிட்டு விசாரித்தாள். அவனுக்கும் விவரம் புரியவில்லை. ''சித்திரங்களைப் பார்த்துக் கொண்டேயிருந்த எசமான் திடீரென்று சிங்கம்புத்தூருக்குப் புறப்பட்டு விட்டாக'' என்று குழப்பத்தோடு சொன்னான் கப்பையா.

பொன்னுத்துரையிடம் ஓடி வந்தாள் தாமரைச் செல்வி.

''அப்பாவின் முகம் எப்படியோ இருக்கிறது. என்ன விபரீதம் நேரப் போகிறதோ தெரியவில்லை. கொஞ்சம் போய்ப் பாருங்களேன்!'' என்று ஒரே பதற்றத்தோடு குழந்தையைப் போல் கெஞ்சினாள் செல்வி.

பொன்னுத்துரை வேகமாக நடந்து வந்து அரண்மனையின் அலுவலக அறைக்குள்ளே ஜமீந்தாரும் வல்லாளவேலரும் பேசிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்தான். அவன் வருவதைக் கவனித்த ஜமீந்தாருக்கு முகத்தில் மின்னல் மின்னியது.

''துரை! நாங்கள் இருவரும் ஒரு முக்கிய மான இரகசியம் பேசிக் கொண்டிருக்கி ரும். நீ சற்று நேரம் கழித்து வருகிறாயா?''

தாட்சண்யம் என்பதே இல்லாமல் மாமா இப்படிச் சொல்லி விட்டார்களே என்று பொன்னுத்துரை யோசிப்பதற்குள் ஜமீந் தார் மேலும் தொடர்ந்து சொன்னார்:

''செல்வியிடம் சொல்லு. இன்று முழுதும் நான் இந்த இடத்தை விட்டு நகரப் போவ தில்லை. என்னவோ ஏதோ என்று செல்வி எண்ணிக் கொண்டிருப்பாள். அல்லது என் னிடமே கேட்பதற்கு வந்து விடுவாள். அதற்குமுன்பே நீ அவளிடம் சொல்லிவிடு!''

வல்லாளவேலரும் மாமாவும் பேசிக் கொண்டிருந்த அந்த இரகசியத்தில் பிரவே சிப்பதற்குச் செல்விக்கும் அதிகாரம் கிடை யாது என்றல்லவா சொல்லி விட்டார்கள் மாமா, என்று எண்ணியவாறு மாளிகைக் குள்ளே நடந்தான் பொன்னுத்துரை.

ஜமீந்தாரோ வல்லாளவேலரிடம் சில முக்கிய கட்டளைகள் கொடுத்து விட்டு, உடனே புறப்படும்படி சொன்னார். வல் லாளவேலரின் முகத்தைப் பார்த்தால் இது வரை இருந்த கலவரம் எல்லாம் பறந்தோடி விட்டது! வாழ்விலேயே இதுவரை இல்லாத முறையில் இப்போது ஒரு குதூகலமும் வெற்றிப் பெருமிதமும் முகத்தில் தாண்டவ மாடின. அலுவலறையிலிருந்து வெளியே வரும்போதே வல்லாள வேலர் பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டார்.

ஜமீந்தார் அனவரத புவனபதி அன்று முழுதும் அந்த அலுவலறையிலேயே இருக் கப் போவதாக அல்லவா சொன்னார் பொன்னுத்துரையிடம்? அவரால் அப்படி இருக்க முடியவில்லை. மகளைப் பார்த்துப் பேசாமல் இருப்பது எப்படியோ இருந்தது அவருக்கு. அறையிலே-இருப்புக் கொள்ளா மல் மாளிகைக்குள்ளே வந்தார், ''செல்வி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே.

ஜமீந்தாரின் எதிர்பாராத வரவினால் திகைப்படைந்தார்கள் பொன்னுத்துரையும் செல்வியும்!

''செல்வி!—பேச்சு மும்முரத்தில் ஏதோ சொல்லியனுப்பிவிட்டேன் துரையிடம்! ஆனு லும் உன்னிடம் விஷயத்தைச் சொல்லா மல் இருப்பது எப்படி? அதைச் சொல்வ தற்குத்தான் வந்தேன். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. நானாகச் சொல்கிற செய்தியைத் தவிர அதற்கு மேல் நீ எதுவும் என்னிடம் கேட்கக் கூடாது!''.

இவ்வாறு சொன்னார் ஜமீந்தார்.

''அப்பா! என்ன இப்படி யெல்லாம் புதிர் போடுகிறீர்கள்? உங்கள் முகத்தைப் பார்த்தால் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. தயவுசெய்து சொல்லுங்கள் அப்பா, என்ன விஷயம் என்று!''

''செல்வி! அதிர்ச்சியடையாமல் கேள்: பொன்னுத்துரை, நீயும் ஆச்சரியப்படாமல்

டாக்டர் மாப்பிள்ளை!



கேள். வல்லாளவேலனை வெளியே அனுப்பியிருக்கிறேன். எதற்குத் தெரியுமா? இன்னும் ஒரு வாரத்துக்குள் கோவிலைப் புதுப்பிக்கும்படி செய்ய! அதற்கு வேண்டிய வேலையாட்களோடு சென்பகவனத்துக்குப் போகும்படி சொல்லியிருக்கிறேன்!''

''என்ன! என்ன! கோவிலைப் புதுப்பிக்கவா? அதுதான் ஏற்கனவே—''

செல்வியின் உடம்பு பதறியது.

''செல்வி! பதறாமல் கேள்! நமது சென்பகநாயகி கோவிலின் சுவர்களிலே எழுதப்பட்டுள்ள புதிய சித்திரங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் அழிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறேன். செதுக்கிப் பெயர்த்து இடித்துப் போடும்படி கட்டளை போட்டிருக்கிறேன். அந்தச் சுவர்களிலே இனிமேல் சுண்ணாம்பு பூசிக் காவி அடிக்கும்படி ஏற்பாடு!''

செல்விக்குத் தலை சுற்றியது.

''மாமா!'' என்று கூப்பிடும்போதே பொன்னுத்துரையின் குரல் ஆடியது.

''மாமா! ஒரு காலத்தில் நீங்கள் அந்தச் சுவர்களிலே சித்திரங்களைத் தவிர வேறு எவ்வித வர்ணமும் பூசக் கூடாது என்று சொன்னீர்களே. இப்பொழுது ஏன் இப்படி ஒரு முடிவுக்கு வந்தீர்கள் மாமா?''

இவ்வாறு சுற்றி வளைக்காமல் நேராகக் கேட்டான் பொன்னுத்துரை.

''ஆமாம். ஒரு காலத்தில் நான் அப்படிச் சொன்னதற்கு அனுபவிக்க வேண்டியதெல்லாம் அனுபவித்தாகி விட்டது!''

அனவரத புவனபதி இப்படிச் சொன்னதும் செல்விக்கு அந்த வார்த்தைகளைக் கேட்க மிகவும் வேதனையாக இருந்தது.

''அப்பா! நீங்களாகச் சொல்லாத வரை நான் எதுவும் உங்களிடம் கேட்கப் போவதில்லை. ஆனாலும், காரணம் எதுவாக இருந்த போதிலும், எழுதிய சித்திரங்களை அழிக்கச் சொன்னது நியாயமில்லை. தயவுசெய்து கோபப்படாதீர்கள். ஒருவரைப் பிடிக்கவில்லையென்றால், அவர் எழுதியதைக் கூட வெறுக்க வேண்டுமா?''

''செல்வி! என்னோடு தர்க்கம் செய்யாதே. உனக்கு ஒரு நடப்பும் தெரியாது!'' என்று கோபத்தோடு சொன்னார் அனவரதர்.

இவ்வாறு சொல்லி விட்டு அங்கிருந்து நடந்தார் ஜமீந்தார்.

சிங்கம்புத்தூரில் இப்படிக் கோபக் கனல் எரிந்து கொண்டிருந்த போது, வளைவிட்டிலிருந்து வேணுலிங்கம் வெளியூர் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அப்போது சுந்தரியிடம் சொன்னான்:

''அம்மா! உன்னுடைய வீட்டுக்காரரைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்து விட்டேன் அல்லவா! இனிமேல் இன்னும் இரண்டு நாளைக்கு நீதான் அவரைப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் வெளியூருக்குக் கிளம்பிப் போகிறேன்!''

''வெளியூருக்கா?'' என்று கேட்டாள் சுந்தரி.

''ஆமாம். நான் இங்கே இல்லாவிட்டாலும் கடலையாண்டியும் மற்ற நண்பர்களும் வேண்டிய உதவிகள் செய்து பார்த்துக் கொள்ளுவார்கள். நீ செய்ய வேண்டிய காரியம் ஒன்றே ஒன்றுதான். அதில் நீ மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும்!'' என்றான் வேணுலிங்கம்.

''என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். அப்படியே செய்கிறேன்!'' என்றாள் சுந்தரி.

''நான் இங்கே திரும்பி வருகிற வரை நீயோ வில்வநாதனோ, தனித்தோ அல்லது ஒன்றாகவோ எங்கேயும் வெளியே போக வேண்டாம். இந்த வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் நீங்கள். இங்கு வந்து உங்களுக்கு யாரும் எந்தவிதமான தொந்தரவும் கொடுக்க முடியாது!''

இவ்வாறு கண்டிப்போடு அறிவிப்புக் கூறிவிட்டு வேணுலிங்கம் வில்வநாதனைத் தனியாக அழைத்துச் சென்று சொன்னான்:

''கல்கத்தாவில் ஒரு சித்திரப் பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே உன்னைக் குடியேற்றி விடலாம் என்று யோசித்திருக்கிறேன். எதற்கும் நான் திருநெல்வேலிவரை போய் வருகிறேன். அதன் பிறகு ஒரு முடிவுக்கு வருவோம். அதுவரை இங்கேயே நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள்!''

இவ்வாறு சொல்லிவிட்டுப் புறப்பட்டான் வேணுலிங்கம். ஏனோ அவனுடைய மனத்தில் நிம்மதி இல்லை. என்ன காரணமோ, வழக்கத்துக்கு மாறாக, அவனுடைய திடமான இதயத்திலும்கூட ஒரு வகையான சஞ்சலம் எழுந்து அலைத்தது! ஆனாலும் கட்டாயம் போய்த் தீர வேண்டிய காரியம் ஒன்று இருந்ததால், சஞ்சலத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு புறப்பட்டான் வேணு. அதற்குள் 'ஜாக்கிரதையாக

இருங்கள்!" என்று நூறு தடவைகள் சொல்லியிருப்பான்!

கலியாணத்துக்காகச் சிங்கம்புத்தூர் சென்றிருந்த ஜமீன் குடிமக்கள் எல்லாரும் அவரவர்களுடைய குடியிருப்புக்களுக்குத் திரும்பி விட்டார்கள். மலையடிவாரத்துக் கிராமத்திலும் செண்பக வனத்திலும் குடியானவர்கள் வீடு திரும்பியிருந்தார்கள். சுந்தரேசப்பட்டரும், சங்கர நமசிவாயக் கம்பரும் மலை மீது ஏறிச் சென்று சித்திரங்களைப் பார்க்கலாம் என்று போய்க் கொண்டிருந்த போது, என்ன ஆச்சரியம், கோவிலுக்கு வெளியே நூறு மனிதர்கள் கூட்டமாக நிற்பதைப் பார்த்தார்கள். வல்லாளவேலர் நடு மத்தியில் நின்று கொண்டிருந்தார்.

கம்பரையும் பட்டரையும் பார்த்ததும் வல்லாளவேலருக்கு ஒரு மன எழுச்சி உண்டாயிற்று. அவராகவே வலிய வந்து பேச ஆரம்பித்தார்.

"வளர்த்த கடா மார்பிலேதானே பாயும் பட்டரையா! பாஞ்சுட்டுது! பாம்புக்குப் பால் ஊத்திருக எசமான்! நல்லாப் போட்டு வாங்கிப்புட்டுது!"

பட்டருக்கும் கம்பருக்கும் வல்லாளவேலரின் பேச்சு புரியவில்லை.

"என்ன சொல்லுறீக நீங்க? புரியலையே!" என்றார் கம்பர்.

"புரியாது. இப்ப புரியாது கம்பரையா! இன்னும் கொஞ்ச நேரத்திலே இந்தச் சுவரிலே இருக்கிற சித்திரத்தை யெல்லாம் அழிச்ச பிறகு புரியும்—" என்று சொல்லிச் சிரித்தார் வல்லாளவேலர்.

"சித்திரங்களை அழிக்கவா?" என்று அதிர்ந்து போய்க் கேட்டார் பட்டர்.

"அழிப்பது மட்டுமில்லை. அழித்து மெழுகிச் சுவரைச் செதுக்கிச் சுத்தம் செய்து, கொத்தி, பிறகு பூசி, அதற்கு மேல் வெள்ளையடித்து, அதற்கு மேல் காவி பூசி—"

இப்படி அடுக்கிக்கொண்டே போனார் வல்லாளவேலர், அளவற்ற ஒரு பயங்கரமான உற்சாகத்தோடு!

இந்தப் பேச்சு வார்த்தைகளையெல்லாம் அங்கே மௌனமாகக் கேட்டுக் கொண்டே மரச் சோலைகளுக்கு மத்தியிலே, இரண்டு உருவங்கள் நகர்ந்தன.

வேணுலிங்கம் ஊரில் இல்லாத சமயத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கிறதே என்று மிகவும் வருந்திய அந்த இரண்டு மனிதர்களும் அவசரம் அவசரமாக அங்கிருந்து கிளம்பி வன வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். வேணுலிங்கம் திரும்பி வருகிற வரை இந்த அழிப்பு வேலையைத் தள்ளிப் போட முடிந்தால் போதும், பிறகு அவர் வந்து விட்டால் ஏதாவது இதற்கு வழி செய்வார் என்று பேசிக் கொண்டார்கள் அந்த இருவரும்.

ஆவலும் கவலையும் மோதியடித்துக் கொண்டிருந்த நிலையில் அவர்கள் இருவரும் வன வீட்டுக்கு வந்த போது கடலையாண்டியையும் அங்கே காணோம். வேணுலிங்கம் வெளியூரிலிருந்து திரும்பி வருகிற வரை கடலையாண்டி எங்கும் போக மாட்டாரே என்று நினைத்து, அங்கிருந்த மனிதர்களை யெல்லாம் எவ்வளவோ விசாரித்தும் கடலையாண்டி எங்கே என்ற விவரம் யாருக்கும் தெரியவில்லை!

சித்திரங்களுக்கு என்ன கதி ஆகுமோ என்ற கவலை அதிகரிக்க அதிகரிக்க அந்த மனிதர்களால் அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. நேரே வீட்டுக்குள்ளே போய்த் தங்கள் நண்பர்களிடம் சொன்னார்கள். அவர்களால் அந்தச் செய்தியின் அக்கிரமத்தைத் தாங்க முடியவில்லை. ஒரே ஆற்றாமையோடு இந்தச் செய்தியை விஸ்வநாதனிடமே ஓடி வந்து தெரிவித்தார்கள்!


"என்னுடைய சித்திரங்களை அழித்துச் சுவர்களிலே வெள்ளையடிக்கப் போகிறார்களா?" என்று கேட்டுக்கொண்டே சீறி எழுந்தான் விஸ்வநாதன்! (தொடரும்)



எஸ். ஆர். மயிலேறுவின் மறைவு

பேராசிரியர் எஸ். ஆர். மயிலேறு அவர்களின் மறைவு மாணவர் உலகுக்கும் தமிழ்நாட்டுக்குமே மகத்தான நஷ்டம். இவர் தம் இல்லத்தில் கன்னடம் பேசுபவராதலால் கன்னடியர். தொழில்முறையில் அண்ணாமலை சர்வகலாசாலை ஆங்கிலப் பேராசிரியர். அன்பும் பக்தியும் ஈடுபாடும் தமிழினிடத்தே. இவரது அபரிமிதமான தமிழ் ஈடுபாட்டைக் கண்டே சுவாமி விபுலானந்த அடிகள் 'மயிலேறு' என்று நாமகரணம் செய்தார். அன்றிலிருந்து இன்று வரை தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் இவரை மயிலேறு என்றே யாவரும் அறிவர். பேராசிரியர் எஸ். ஆர். மயிலேறு அவர்களின் மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் பொக்கே யின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக் கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக் கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றது மானது. நீங்கள் இருவருமே உபயோகிக் கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB-S-19-TAM

ஹளபேடு ஹொய்சலேசுவரர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

சமீபத்தில் ஓர் அன்பரது பேச்சைக் கேட்டேன். அவர் இவ்வுலகில் எல்லாமே காரணப் பெயராகத்தான் இருத்தல் வேண்டும் என்ற எண்ணம் உடையவராக இருக்கிறார். அது காரணமாக, அ, ஆ என்னும் தமிழ் உயிர் எழுத்து வரிசையானாலும் சரி, இல்லை ஏ, பி, சி, டி, என்னும் ஆங்கில எழுத்து வரிசையானாலும் சரி எல்லாமே ஒரு காரணத்தால் முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முறையைப் பற்றி அவர் பேசும்போது எல்லாம் விஸ்வாசமாகவே பட்டது எனக்கு. இன்னும் சொல்லப் போனால் நண்பர் மூளையில் ஏதோ ஒரு ஸ்குரு லூஸ் போலிருக்கிறது என்று என்னையும் தூண்டியது. இதைப் போலவேதான் நம் நாட்டில் பல காரியங்கள். எல்லாவற்றுக்கும் காரணம் இருந்தாக வேண்டும் என்ற நியதி இல்லை. அதனால் தானே இலக்கணம் வல்லார், காரணப் பெயர் என்று சிலவற்றைக் குறிப்பிட்டார்கள்.. இடுகுறி என்று சிலவற்றைக் குறித்தார்கள். இன்னும் காரண இடுகுறி என்றுமே சிலவற்றைக் கூறினார்கள். மைசூர் ராஜ்யத்தில் சில கோயில்களைச் சுற்றி நாம் வரும் போது அவை ஹொய்சலர் கோயில்கள் என்று சரித்திரம் நமக்குச் சொல்கிறது. ஹொய்சலர் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்று தெரிய விரும்புவீர்கள். அதற்கு விடை சொல்கிறது ஒரு விந்தையான கதை. பழைய கர்நாடக ராஜ்யத்தை 11 முதல் 14-ம் நூற்றாண்டு வரை சிறப்பாக ஆண்ட மன்னர்களையே ஹொய்சலர் என்று அழைக்கிறது சரித்திர ஏடுகள். இவர்கள் ஆதியில் இருஞ்சோலை இருந்து அரசு புரிந்த துவாரகையிலிருந்த யாதவர்கள் என்றும் கூறுகிறது. இவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவில் உள்ள சொசாவூர் என்ற இடத்தில் முதலில் வந்து குடியேறி யிருக்கின்றனர். இவர்கள் சமண சமயத்தைச் சார்ந்திருக்கின்றனர். இவர்கள் தலைவன் சாலா என்பவன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றிருக்கிறான். அங்குள்ள முனிவர் ஒருவரைக் கண்டு அவரை வணங்கி நிற்கிறான். அந்தச் சமயத்தில் ஒரு புலி அங்கு வந்து சேருகிறது. புலியைக் கண்ட முனிவர், அவர் பக்கத்தில் கிடந்த கழி ஒன்றை எடுத்துச் சாலாவின் கையில் கொடுத்து 'போய் சாலா' என்கின்றார். அதாவது அவரது பாஷையில், சாலா என்பவனே புலியைச் சாடு என்று அதன் பொருளாம். அதன்படியே புலியைச் சாடி இருக்கிறான். புலியைக் கொன்று தீர்க்க, கழி மட்டும் காணாது என்று தெரிந்த சாலா தன் உடைவாளையுமே உபயோகித்திருக்க வேண்டும். புலியைச் சாடும் வீரனை சாலாவைத் தானே நாம் அந்தப் பரம்பரையினர் கட்டிய கோயில்களில் சிலை வடிவில் காண்கிறோம். இப்படிப் 'போய் சாலா' என்று முனிவர் சொன்னதையே தங்கள் குலப் பெயராகவும் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் 'போய்சாலா' நாளடைவில் ஹொய்சலர் என்று மாறி யிருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இப்படி ஹொய்சலர் என்று பெயர் அமைந்தது விசித்திரம் தானே. அந்த ஹொய்சலர் என்ற பெயர், 'போய் சொல்வார்' என்ற நல்ல தமிழ்ப் பெயரிலிருந்தும் வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது எனக்கு. எது எப்படியானாலும் ஹொய்சலர்கள் கர்நாடக ராஜ்யத்தை ஒரு சில காலம் சிறப்பாக ஆண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆட்சியின் சின்னமாக அற்புதமான கலைக் கோயில்கள் கட்டி வைத்துவிட்டும் போயிருக்கிறார்கள். அவர்கள் கட்டிய கோயில்கள் இரண்டை நாம் நமது தல யாத்திரையில் பார்த்து விட்டோம்.



மஹிஷமர்த்தனி

ஆம்! சோமநாதபுரத்தையும் பேலூரையும் தான் குறிப்பிடுகிறேன். இனி அவர்களது தலைநகரான ஹளபேடில் கட்டியிருக்கும் பெரிய கோயில் ஒன்றையே பார்க்கப் போகிறோம். அந்தக் கோயிலே ஹொய்சலேசுவரர் கோயில் என்று பெயர் பெற்றிருக்கிறது. அது இருக்கும் இடமே ஹளபேடு. அந்த ஹளபேடு என்னும் தலத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்த ஹளபேடு செல்லப் பங்களூர் பூனா செல்லும் ரயில் பாதையில் பாணவர் ஸ்டேஷனில் இறங்கி இருபது மைல் மேற்கே செல்ல வேணும். பஸ் வசதி உண்டு. இல்லை காரி



ஹொய்சலர் முத்திரைச் சின்னம்

லேயே செல்வதானால் மைசூரிலிருந்து ஹாஸன் போய் அங்கிருந்து பேலூர் சென்று அங்குள்ள சென்னக்கேசவரை வணங்கிவிட்டு, கிழக்கு நோக்கிப் பத்து மைல் வந்தால் ஹலேபேடு வந்து சேரலாம். ஒரு காலத்தில், ஆம். கி. பி. 11 முதல் 14-ம் நூற்றாண்டு வரை இது ஹொய்சல மன்னர்களின் தலைநகரமாக இருந்திருக்கிறது. இதனையே துவார சமுத்திரம், துவாரவதி புதர் என்றெல்லாம் அழைத்திருக்கிறார்கள். ஆனால் இன்றோ பாழ் அடைந்த ஒரு சிறு ஊராகவே காட்சி யளிக்கிறது. மன்னர் மாளிகை இருந்த இடம் என்று ஒரு சிறு குன்றினைச் சொல்கிறார்கள். அதனையே பெண்ணெகுட்டா என்கிறார்கள். அந்தக் குன்றின் பக்கத்திலே ஆனை குந்தி என்று ஓர் இடம் இருக்கிறது. அங்குதான் ஹொய்சல சாம்ராஜ்யம் உன்னத நிலையில் இருந்த போது யானைகள் கட்டி வைத்திருந்திருக்கிறார்கள். ஹலேபேடில் உள்ள கோயிலுக்குச் செல்லுமுன் ஹொய்சல மன்னர்களைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்துகொள்வது நல்லது.

ஹொய்சல மன்னர்களது சரித்திரமே 1220 முதல் 1234 வரை ஆண்ட இரண்டாம் நரசிம்மனது வாழ்வில்தான் ஆரம்பிக்கிறது என்று சொல்லலாம். அவனே சோழ தேசத்தின் மீது படையெடுத்து ஸ்ரீரங்கம் வரை வந்தவன். தமிழ்நாட்டோடு நல்ல தொடர்பு கொண்டவன். சோழ மன்னனை ராஜராஜதேவன் என்பவனைப் பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் சிறைப் பிடித்து, சேந்தமங்கலத்துச் சிறையில் வைத்திருக்கிறான். அந்தக் கோப்பெருஞ் சிங்கனோடு இந்த வீர நரசிம்மன் போரில் வென்று ராஜராஜனைச் சிறைமீட்டிருக்கிறான். இவனே ஸ்ரீரங்கம் வரை வந்து அங்கு கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதன் கோயிலில் ஒரு மண்டபம் கட்டியிருக்கிறான். இந்த வீர நரசிம்மன் மகனே சோமேசுவரன். இவன் ஸ்ரீரங்கத்தை அடுத்த சமயபுரத்தையே தலைநகராகக் கொண்டு, தமிழ் நாட்டில் தான் வெற்றி பெற்ற இடங்களை ஆண்டிருக்கிறான். அந்த நகரத்துக்கு விக்கிரமபுரம் என்றும் பெயர் சூட்டியிருக்கிறான். அந்த விக்கிரமபுரமே இன்று சமயபுரம் பக்கத்திலுள்ள கண்ணனூர் என்கின்றனர். இன்னும் இவன் திருவானைக் காவிலுள்ள ஜம்புகேசுவரர் கோயிலில், தனது குடும்பத்தினர் ஞாபகார்த்தமாகப் பல லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறான். அவைகளே வல்லாள ஈசுவரர், பதுமாளி ஈசுவரர், வீரநரசிங்க ஈசுவரர், சோமாளி ஈசுவரர் என்பவை என்று சொல்லப்படுகிறது. ஜம்புகேசுவரர் கோயில் வாயிலில் உள்ள ஏழு நிலை கொண்ட கோபுரமும் இந்தச் சோமேசுவரனாலேயே கட்டப்பட்டிருக்கிறது. கண்ணனூரில் அவன் கட்டிய கோயிலே போஜேசுவரர் கோயில். இவன் சார்வ பௌமன், துலா புருஷன், ரத்னதேனு என்று பல அபிஷேகப் பெயர்களையும் சூட்டிக் கொண்டிருந்திருக்கிறான் என்று சரித்திர ஏடுகள் சொல்கின்றன. இந்தச் சோமேசுவரனது மகனே வீரராமநாதன். இவன் காலத்திய கல்வெட்டுகள் மூன்று உண்டு. அவை 1267, 1270, 1271-ம் வருஷங்களில் வெட்டப்பட்டன. அவை ஸ்ரீரங்கத்திலும் கண்ணனூரிலும் இருக்கின்றன. திருவெள்ளறையில் உள்ள நாலு மூலைக் கேணி என்ற வாவிகள் இவனது பழுது பார்க்கப் பட்ட விவரம் ஒரு கல்வெட்டில் கூறப்படுகிறது. இவனே ரங்கநாதருக்கு ஒரு மணி மகுடத்தையும், இரண்டு கவரியையும், ஒரு காளாஞ்சியையும் கொடுத்திருக்கிறான். இந்த வீரராமநாதன் மகனே வீர விசுவநாதன். இவன் 1293 முதல் 1334 வரையே ஆண்டிருக்கிறான். இவனுக்குப் பின்னும் ஹொய்சல சாம்ராஜ்யம் விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்குள் வந்திருக்கிறது. இந்த ஹொய்சல மன்னர்களில் ஒருவனே மூன்றாம் வல்லாளன். அவன் கண்ணனூரை விட்டுத் திருவண்ணாமலைக்கே சென்றிருக்கிறான். அங்கு உண்ணாமலைப் பட்டினம் என்று ஒரு நகரை நிர்மாணித்து அங்கிருந்தே ஆண்டிருக்கிறான். இப்படித் தான் ஹொய்சல மன்னர்கள் சரித்திரம் வளர்ந்து தேய்ந்திருக்கிறது.

இனி, நாம் வீரநரசிம்மன் கட்டிய ஹொய்சலேசுவரர் கோயிலுக்குச் செல்லலாம். காரில் சென்றால் கோயிலின் வடக்குவாசலிலே போய் நிற்கும். அங்கு காரை விட்டு இறங்கி உள்ளே நுழைந்தால் கோயில் பிராகாரம் முழுதும் சிதைந்த சிற்பங்கள் எண்ணிறந்தவை கிடக்கும். புதை பொருள் ஆராய்ச்சியாளர் அவைகளை எடுத்து ஒழுங்காய் அடுக்கி வைத்திருப்பார்கள். இந்தப் பிராகாரத்தைக் கடந்தே கோயிலுக்குச் செல்ல வேணும். இங்கு இரண்டு கோயில்கள் உண்டு. ஒன்று ஹொய்சலேசுவரர் கோயில்; மற்றொன்று கேதாரேசுவரர் கோயில். சோமநாதபுரத்திலும், பேலூரிலும் கேசவனுக்குக் கோயில் கட்டிய ஹொய்சளர்கள் தங்கள் தலைநகரிலே சிவபெருமானுக்கே இரண்டு கோயில்களை அடுத்தடுத்துக் கட்டியிருக்கிறார்கள். இரண்டு கோயில்களுக்கும் எதிரே நந்தி மண்டபங்கள் இரண்டைக் கட்டி, பெரிய நந்திகளை

வும் கல்லில் உருவாக்கி இருத்தி வைத்திருக்கிறார்கள். நந்தி மண்டபத்துத் தூண்கள் எல்லாம் நல்ல சிற்ப வேலைப்பாடு அமைந்தவை.

ஹொய்சலேசுவரர் கோயிலுக்கு நான்கு வாயில்கள். கிழக்கே இரண்டு, வடக்கே ஒன்று தெற்கே ஒன்று. கோயிலுக்குத் தென்புறமே மன்னனது மாளிகை இருந்திருக்கிறது. அதனால் மன்னன் வரும் வழியான தெற்கு வாசல் மிகச் சிறப்பாய் அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில் வாயிலின் மேல் முகப்பில் சிற்ப வடிவங்கள் சிறப்பாய் இருக்கின்றன. ஆடும் பெருமானே வாயில் முகப்பில் அமைந்து இரண்டு பக்கமும் மகர வளைவுகள் அமைத்திருக்கிறார்கள். வருணன் அவன் துணைவியோடு வடிக்கப் பெற்றிருக்கிறான். நந்தி மண்டபத்துக்கு அருகே சூரிய சந்திரர்களுக்கும் தனித்தனிக் கோயில் அமைத்திருக்கிறார்கள். புலியைக் கொல்லும் சாலாவின் சிற்பம் தானே ஹொய்சல மன்னர்களின் முத்திரை. இந்தச் சிற்ப வடிவம் ஒவ்வொரு வாயிலிலுமே இருக்கிறது. கேதாரேசுவரர் கோயில் சுவர்கள் முழுதுமே ஒரே சிற்ப வடிவங்கள் தாம். கோயிலின் வெளிச்சுவர்களில் வரிசை வரிசையாக யானைகள், யாளிகள், அன்னங்கள் இன்னும் எண்ணற்ற தெய்வ வடிவங்கள். கோயிலின் தென்புறத்தில் அழகான நர்த்தன விநாயகர் ஒருவர் பெரிய வடிவிலே நிற்கிறார்.


கோயில் உள்ளேயும் எண்ணற்ற வடிவங்கள். எல்லாம் பேலூர் மாளிகை சிற்ப வடிவங்கள் போல் சிறந்தவை அல்ல என்றாலும், நல்ல அழகு வாய்ந்தவைகளே. இரணியனை உடல் கிழிக்கும் நரசிம்மன், கோவர்த்தன மலையையே குடையாக எடுத்து ஆநிரையைக் காக்கும் கண்ணன், துவாரபாலகர் வடிவங்களெல்லாம் சிற்ப உலகில் பிரசித்தி பெற்றவை. ஆனால் எல்லாவற்றையும் தூக்கியடிக்கும் வகையில் அமைந்திருக்கும் நர்த்தன சரஸ்வதி, கலை உலகிலேயே ஓர் அற்புதம். இத்தனை சிற்ப வடிவங்களிடையே தான் ஹொய்சலேசுவரரும் கேதாரேசுவரரும் லிங்கவடிவில் கருவறையில் உருவின்றி நின்ற உருவாய், கருவின்றி நின்ற கருவாய் எழுந்தருளியிருக்கின்றனர். இக்கோயில்கள் கட்டுவதற்குக் கல் எல்லாம் பக்கத்திலுள்ள புஷ்பகிரி என்ற மலையிலிருந்தே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவை யெல்லாம் கடினமான கருங்கல் அல்ல. சிற்றுளி வேலைக்கு ஏற்ற மெதுவான கற்களே. ஹொய்சல மன்னர்கள் கட்டிய கோயில்களிலெல்லாம் அளவில் பெரியது இந்த ஹொய்சலேசுவரர் கோயிலே. இந்த ஹொய்சலேசுவரரும் சமய குரவர்களால் பாடப் பெற்றவர்கள் அல்ல. என்றாலும் கேதாரேசுவரரை நினைத்தால் சுந்தரர் பாடிய கேதாரப் பதிகம் ஞாபகத்துக்கு வராமல் போகாது. அதிலும் அந்த,

வாழ்வாவது மாயம் இது
மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல்
பசிநோய் செய்த பறிதான்
தாழாது அறம் செய்ம்மின்
தடங்கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்
கேதார மெனீரே.


என்ற பாடல் படிக்கப் படிக்கச் சுவையுள்ள தாயிற்றே. மனிதனது வாழ்வு அநித்தியம் தான் என்றாலும் அந்த மனிதன் அமைத்த கலைக் கோயிலும் மூர்த்தியும் நித்யத்துவம் வாய்ந்தவைகளாக நிலைத்து விடுகின்றனவே!

இந்த ஹலேபீடில் இன்னும் பார்க்க வேண்டிய கோயில்கள் பல உண்டு. அவை யெல்லாம் சமணக் கோயில்களே. அன்று எண்ணிறந்தவை இருந்த இடத்தில் இன்று ஒரு சில கோயில்களே சிதிலமானவையாக நிற்கின்றன. அவைகளில் முக்கியமானவை ஆதிநாத சுவரர், சாந்திசுவரர், பார்சுதேசுவரர் கோயில்களே. இவைகளிலுள்ள தூண்கள் எல்லாம் கண்ணாடி போல் பளபளக்கும்படி செய்து அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள ஆதிநாத பஸ்தியின் முன்புள்ள கம்பம் ஒன்றைப் பிரம்மகம்பம் என்கின்றனர். இந்தக் கம்பத்தின் மேற்பக்கத்தில் குதிபோட்டுக் கொண்டு ஓடும் குதிரை ஒன்றிருக்கிறது. அதுவே சமண சிற்பத்தின் பிரம்மனைக் குறிக்க அமைந்தது என்று அறிகிறோம். சமணம் ஆனாலும் சரி, சைவம் ஆனாலும் சரி, வைஷ்ணவம் ஆனாலும் சரி கலை அழகு நிரம்பியிருப்பது ஹொய்சளரது சிற்பக் கலை என்று தெரிந்து கொண்டோமானால் அது போதும் நமக்கு.



murphy radio
Delights the home
மர்பி ரேடி




மாடல் 0452
6 வால்வ், 9 வகை செயல் திறனுடன்
ஆல்-வேவ், 3 பாண்ட்
பியானோ-கீ ஸ்விட்ச், AC அல்லது AC/DC
விலை ரூ. 330.00
சுங்க வரி ரூ. 30.00
உள்ளூர் வரிகள் தனி



மாடல் 0704
வால்வ், ஆல்-வேவ் 2 பாண்ட் AC/DC
விலை ரூ. 125.00
உள்ளூர் வரிகள் தனி



மாடல் 0298
ஆல்-வேவ், 6-வால்வ்
3-பாண்ட், AC/DC மற்றும்
மாடல் 0299: (டிரை பாட்டரி)4-வால்வ்
விலை ரூ. 200.00
சுங்க வரி ரூ. 15.00
உள்ளூர் வரிகள் தனி



மாடல் [0752]
5-வால்வ், ஆல்-வேவ்
3-பாண்ட், AC அல்லது AC/DC
(இரு மாடல்கள்)]
மற்றும் மாடல் 0751 : 5-வால்வ்
விலை ரூ. 250.00
சுங்க வரி ரூ. 15.00
உள்ளூர் வரிகள் தனி

ல்லத்திற்கு இன்பமளிக்கிறது !



பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் பதினைந்து

அநந்தமதியின் சங்கடம்

தேவத்துறைக்கும் பல்லவபுரத்துக்கும் இடையே, இரண்டு குரோசம் தொலைவில், இருபத்தைந்து பூமிப் பரப்பளவு கொண்ட ஆலம்பாக்கம் என்னும் அழகிய சிற்றூர் அமைந்திருந்தது. அச் சிற்றூரின் தெற்கு எல்லையில் பெரியதோர் ஏரியும், அந்த ஏரியின் மேலண்டைக் கரையை அடுத்துப் பல்லவபுரத்துக்குச் செல்லும் கிளைச் சாலை யொன்றும், அதன் மருங்கே ஒரு தென்னந்தோப்பும், தோப்பின் பசுமைச் சூழலில் பழைமை யான வீடு ஒன்றும் இருந்தன. வீட்டின் கதவு உட்பக்கம் தாழிடப்பட்டிருந்தது.

ஜன நடமாட்டம் அற்றுக் கிடந்த அந்தச் சாலையில், அவ்வப்போது சில சளுக்கிய வீரர்கள் குதிரைமீது போவதும் வருவதுமாக இருந்தனர். அவர்கள் ஒருவரோடொருவர் செய்துகொள்ளும் சமிக்ஞைகளிலிருந்து, யாரோ மதிப்பு வாய்ந்த ஒருவரை எதிர் சென்று அழைத்து வரும்படி பல்லவபுரத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பது புலனாயிற்று.

முற்பகல் முதிரும் வேளை. கடுமையான வெய்யில் வறுத்துக் கொட்டும் அந்த மதிய வேளையில், ஊரின் ஒவ்வொரு தெருப் பக்கமிருந்தும் பெண் மக்கள் ஓலமிட்டு அழும் ஒலி இடைவிடாது கேட்டுக்கொண்டேயிருந்தது. சில சமயம் ஆண்கள் சச்சரவிட்டுக் கூப்பாடு போடும் ஒலியும் எழுந்து அடங்கியது.

சளுக்கியப் படை வீரர்களாயிருந்து அதிகாரிகளாக மாற்றப்பட்டவர்கள் போல் தோன்றிய மூன்று பேர்கள் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டே அந்தத் தென்னந்தோப்பு வீட்டின் எதிரே வந்து நின்றனர். அவர்களில் பெரிய மூட்டையொன்றைச் சுமந்து கொண்டிருந்த ஒருவன் செருக்காக முன்சென்று, சாத்திக் கிடந்த கதவைத் தட்டினான்.

சில விநாடிகளுக்குப் பின் கதவு திறக்கப்பட்டது. உள்ளிருந்து ஒரு மூதாட்டி, ''யாரது?'' என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தாள்.

அந்த மூதாட்டி? — ஆமாம்; பெருவள நல்லூரிலே சேதியக் கலைஞர் பரவாதி மல்லரின் சமையற்காரியாகப் பார்த்த அநந்தமதி என்பவள்தான் அவள்!

''ஆடுகோபதி இளங்காரிக் குடையான் இல்லம் இதுதானே?'' என்று அமர்த்தலாகக் கேட்டான் கதவைத் தட்டிய சளுக்கியன்.


''ஆம், ஐயா!'' என்றாள் அநந்தமதி.

''அவர் உங்களுடைய மைந்தரா?''

''ஆமாம்; .... உங்களுக்கு என்ன வேண்டும்?''

''நாங்கள் அவரைப் பார்க்க வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே வீட்டினுள் புக முயன்றான் சளுக்கியன்.

அநந்தமதியின் முகத்தில் கலவரம் படர்ந்தது. வாசல் நிலையோரம் நின்றிருந்த அவள், அவனை உட்புகாமல்



தடுப்பதுபோல் சற்றே முன்னால் நகர்ந்து வந்து, ''என் மகன் வெளியூர் போயிருக்கிறான். விஷயத்தைச் சொன்னால், வந்ததும் அவனிடம் தெரியப்படுத்துகிறேன்'' என்றாள் அமைதியான குரலில்.

ஒரு கணம் ஏதோ யோசித்த சளுக்கியன் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, ''பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையிலுள்ள எங்கள் சளுக்கியக்காவல் வீரர்களின் உணவுக்காக வெள்ளாடுகள் சஞ்சயம் பண்ணி வருவது உங்கள் மைந்தர்தானே?'' என்று அடித் தொண்டையில் கேட்டான்.

''இருக்கலாம், ஐயா! ஆனால் எனக்கு அந்த விவரம் தெரியாது.''

''ஓகோ!'' என்று முனகிக்கொண்ட இன்னொரு சளுக்கியன், ''அது சரி; உங்கள் மைந்தர் இப்போது எந்த ஊருக்கு, என்ன காரியமாகப் போயிருக்கிறார்?'' என்று தன் கழுத்தை நீட்டி மிகவும் அக்கறையாக விசாரித்தான்.

''அநேகமாக, அவன் சந்தையில் ஆடுகள் பிடித்து வருவதற்காகப் போயிருக்கலாம்.....'' என்று இழுத்தாள் அநந்தமதி.

சளுக்கியர்கள் ஒருவரையொருவர் பார்த்து ஏமாற்றத்



துடன் முகத்தைச் சுளித்துக் கொண்டனர். கதவைத் தட்டியவன் தன் சகாக்களை நோக்கி ஏதோ கண்ஜாடை காட்டி விட்டுத் திரும்பி, ''சரி, அம்மணி! நாங்கள் மிகவும் களைத்து வந்திருக்கிறோம். பருகுவதற்கு இளநீர் வேண்டும். பறித்துத் தர இயலுமா?'' என்று கேட்டான்.

முடிச்சு முடிச்சாகக் குலைகளைச் சுமந்து நின்ற தென்னை மரங்களையும் அந்தச் சளுக்கியர்களையும் மாறி மாறிப் பார்த்த அநந்தமதி, ''இளநீர்தானே? காய் ஒன்றின் விலை இரண்டு மாடைக் காசு ஆகும். எத்தனை வேண்டுமோ அத்தனைக்குரிய அக்கத்தை எண்ணி வைத்துவிட்டு, நீங்களே மரத்தில் ஏறிப் பறித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், என் வீட்டில் இப்போது ஆண்பிள்ளைகள் யாரும்இல்லை'' என்றாள் புன்னகையுடன்.

சளுக்கியனின் முகம் வறண்டது. துணியிட்ட கரும்பொன் காசுகளைக் கொத்தாகச் சேர்த்துக் கட்டி இடுப்பில் செருகி வைத்திருந்த அவன், அதை எடுத்து எண்ணிப் பார்த்து விட்டு அநந்தமதியின் கையில் தூக்கிப்போட்டான். உடனே மற்றச் சளுக்கியர்கள் தென்னந் தோப்பை நோக்கி விரைந்தனர். அடுத்த சில விநாடிகளில், போர்க்களத்திலே மனிதத் தலைகள் வெட்டுண்டு உருள்வதைப் போலத் தென்னங் குலைகள் கீழே சரிந்தன. விடாய்த்துக் கிடந்த அவர்கள் ஆவலுடன் உட்கார்ந்து தம் குறுவாளால் இளநீர்க் காய்களைச் சீவிச் சீவிப் பருகத் தொடங்கினர்.

தேவைக்கு அதிகமான தென்னங் குலைகளை வெட்டிச் சாய்த்து வீணடித்துக் கொண்டிருக்கும் அந்த முரட்டுச் சளுக்கியர்களை வெறித்துப் பார்த்தவாறு வாசல் திண்ணையோரம் மலைத்து நின்றிருந்த அநந்தமதி, தொலைதூரத்திலே சிறுமணிகள் குலுங்கியெழும் ஒலி கேட்டுச் சட்டென்று திரும்பினாள்.

அந்த இல்லத்தின் வலப் பக்க வேலிக்கு அப்பால், ஏரிப் புலனிலிருந்து வரும் கொடிப் பாதையொன்றில், ஏழெட்டுப் பசுக்களும் ஐந்தாறு கன்றுகளும் மந்தையாகக் குழுமி முன்னே வர, அவற்றின் பின்னால், ஆயர்குலப் பெண் போல் தோற்றமளித்த எழிலார்ந்த இள நங்கையொருத்தி, தண்டுத்தாளோடு பறித்துச் செண்டாகச் சேர்த்த நீலோற்பல மலர்க்கொத்துக்களைத் தன் மார்பில் அணைத்துக்கொண்டு, குதூகலத்துடன் துள்ளிக் குதித்து ஆடியவாறு வந்து கொண்டிருந்தாள்.

இந்தக் காட்சியைக் கண்ட அநந்தமதியின் கண்களில் மகிழ்ச்சியொளி மின்வெட்டியது. ஆனால், மறுகணமே அவள் கலவரமடைந்தவள் போல் அங்குமிங்குமாகப் பார்த்து விழித்தாள்.

இளநீரைப் பருகி விடாய் தீர்ந்த சளுக்கியர்கள் பெரிதாக ஏப்பம் விட்டுத் தம் வயிற்றைத் தடவியபடி வந்தனர்.

''அம்மையாரின் உதவிக்கு நன்றி! இனி எங்களுடைய அடுத்த கோரிக்கையைத் தெரியப்படுத்தலாமா?'' என்று விஷமச் சிரிப்புடன் கூறினான் ஒரு சளுக்கியன்.

ஆவினங்களின் பின்னால் அழகுநடை பயின்று வந்த அவ்விளம் பெண்ணைத் தவிப்புடன் பார்த்துக்கொண்டு நின்ற அநந்தமதி அவசரமாகத் திரும்பினாள்.

''இந்தத் தென்னந்தோப்பு உங்களுக்குச் சொந்தம்தானே அம்மணி?''

''இது என்ன கேள்வி ஐயா? எனக்குச் சொந்தமல்லாத பொருளை விலைக்கு விற்பேனா?''

''நல்லது: இந்தத் தோப்பில் எத்தனை தென்னைகள் இருக்கின்றன?''

''சுமார் இருநூறு மரங்கள் இருக்கலாம் ....''

''இருநூறு மரங்களா? அதற்கு மேலும் இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே அண்ணாந்து பார்த்த சளுக்கியன், கண்ணைச் சுருக்கி மூக்கின் மேல் விரலை வைத்தவாறு ஏதோ யோசிப்பவன்போல் சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு, ''ம் .... இருநூறு! .... இருநூறு கால்?....ஐம்பது!....ஆமாம்; ஐம்பது கழஞ்சுப்பொன் காசுகளை எண்ணிக் கொடுங்கள் அம்மணி?'' என்றான் வினயச் சிரிப்புடன்.

ஒன்றும் புரியாமல் விழித்த அநந்தமதி, ''ஐம்பது கழஞ்சுப் பொன்னா? எதற்காக ஐயா, இவ்வளவு பெரிய தொகை?'' என்று குழறிய குரலில் கேட்டாள்.

''தென்னைக் கானமாகச் செலுத்த வேண்டிய தொகை அம்மணி! சீக்கிரமாகப் போய் எடுத்து வாருங்கள், நேரமாகிறது!'' என்று அடித்தொண்டையில் கரகரத்தான் சளுக்கியன்.

திகைப்புற்ற அநந்தமதி, ''நீங்கள்.. நீங்கள்.... யார்?'' என்று கண்களை இடுக்கிக்கொண்டு கேட்டாள்.

''நாங்களா? யுத்த சக்கர இரணரசிகர் விக்கிரமாதித்த வல்லபரின் கட்டளையைச் சிரமேல் தாங்கி வந்திருக்கும் வரித் தண்டல் அதிகாரிகள்!''—மமதையுடன் நெஞ்சைத் தட்டிக் காட்டிச் சொன்னான் சளுக்கியன்.

இன்று காலை முதல் ஊரின் உள்ளே வீட்டுக்கு வீடு அழுகுரல் எழுந்து கொண்டிருப்பதன் காரணம் இப்போதுதான் புரிந்தது அநந்தமதிக்கு.

கைகளைப் பிசைந்தபடி சற்று நேரம் தலை குனிந்திருந்த அவள், ''மன்னிக்க வேண்டும், ஐயா! நீங்கள் விவரம் தெரியாமல் இந்த ஊரிலே வரி வசூலிக்க வந்திருக்கிறீர்கள்....'' என்று தயவான குரலில் இழுத்தாள்.

''என்ன! விவரம் தெரியாமல் வந்திருக்கிறோமா?'' என்று கண்களை உருட்டி விழித்துக் கேட்டான் சளுக்கியத் தண்டல்காரன்.

''ஆம், ஐயா! இது மறையவர்களுக்குப் பிரமதேயமாக விடப்பட்ட ஊரானதால் தென்னைக் காணம் வசூலிப்பதில்லை. இங்குள்ள தென்னை மரங்களிலிருந்து கள்ளோ சாறோ இறக்கப் படுவதில்லையாகையால் ஈழம்பூட்சி வரியும் தண்டுவதில்லை.''

இதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தான் சளுக்கியன். ''பிரமதேயமாவது. தேவதானமாவது! அதெல்லாம் அந்தப் பைத்தியக்காரப் பல்லவ ஆட்சியோடு மலையேறி விட்டது அம்மணீ! இப்போது நீங்கள் நின்று கொண்டிருக்கும் மண், எங்கள் சளுக்கிய மாமன்னர் விக்கிரமாதித்தருக்குச் சொந்தமானது. அவருடைய வராகக் கொடியின் குளிர் நிழலிலே உயிர் வாழும் ஒவ்வொரு பிரஜையும் அவரால் விதிக்கப் பெறும் எந்த வரியையும் இல்லையென்னுமல் செலுத்தியே ஆக வேண்டும்.''

ஏதும் பேசத் தோன்றாமல் கற்சிலையாய்ச் சமைந்து நின்ற அநந்தமதி, மாடுகளை ஓட்டிக்கொண்டு வரும் அவ்வழகிய இளம் பெண்ணைத் திகிலுடன் திரும்பிப் பார்த்தாள். அதே சமயம், சளுக்கிய அதிகாரிகளும் அவளைக் கவனித்து விட்டனர்.

''யார் அந்தப் பெண்? உங்கள் மகளா ?''

''இல்லை, ஐயா! அவள் என் தம்பி மகள்....''

தலையைப் பலமாக ஆட்டி மோவாயை வருடிக்கொண்ட சளுக்கியன், ''அவளுடைய கையில் இருப்பது என்ன? ஏரிப் புலனில் பறித்த நீலோற்பல மலர்தானே?'' என்று மிகவும் கரிசனமாக வினவினன்.

'ஆம்' என்று மெல்லத் தலையசைத்தாள் அநந்தமதி.

''அப்படியானல், நீலோற்பலக் காணமாக ஐந்து கழஞ்சுப்பொன் சேர்த்துச் செலுத்த வேண்டும்! இதுவும் எங்கள் மன்னர்பிரான் விதித்திருக்கும் புதிய வரியாகும்!''

அரசாங்க ஆணை ஏதுமின்றிச் சளுக்கியப் படை வீரர்களே தான்தோன்றித்தனமாக வரி வசூல் என்ற பெயரில் மக்களைப் பயமுறுத்தி அவர்களது சொத்துக்களைச் சூறையாடக் கிளம்பியிருக்கும் நிலைமை நாட்டிலே உருவாகியிருக்கிறது என்பதையும்,

---

பொதுநலத் தொண்டையே தமது மூச்சாகக் கொண்டு எத்தனையோ தேசபக்தர்களுக்கும், கலைஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் விழா நடத்தி அதிலேயே உள்ள நிறைவைப் பெற்று வரும் ஆக்கூர் அனந்தாச்சாரியார் அவர்களைத் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். அத்தகைய அரும் பெருந் தொண்டருக்கு 27-10-62 அன்று அறுபதாண்டு நிறைவெய்தியது. தியாகராய நகர், வாணி மகாலில் மணிவிழாக் கூட்டம் நடந்தது. ம. பொ. சிவஞான கிராமணியார் தலைமை வகித்தார். முதல் அமைச்சர் காமராஜர், கி. வா. ஜகந்நாதன், க. சந்தானம், நீலாவதி ராமசுப்பிரமணியம், பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் ஆகியவர்கள் வாழ்த்துரை வழங்கினர். பரிசாக வந்த பொருள்களையும், நன்கொடைகளையும் தமக்கெனத் துளியும் வைத்துக் கொள்ளாமல் அந்த இடத்திலேயே வாலாஜாபாத் தீனபந்து ஆசிரமத்துக்கு வழங்கி விட்டார், ஆக்கூர் அனந்தாச்சாரியார். இந்தப் பாராட்டு விழாவை ஒட்டி வெளியிடப்பட்டிருக்கும் ''ஆக்கூர் அனந்தாச்சாரியார் மணி விழா மலர்''ல் பல அரிய கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன.



அதனால்தான் இவர்கள் இப்படிக் கண்ணில் படும் பொருள்களுக்கெல்லாம் காணம் கேட்கிறார்கள் என்பதையும் புரிந்து கொண்ட அநந்தமதி உள்ளூறப் பொங்கிக் குமுறினாள்.

''என்ன தாயே, எங்களுக்கு நேரமாகவில்லையா?'' என்று கடுகடுத்த சளுக்கியன், தன் முதுகில் சுமந்திருந்த மூட்டையைக் கீழே இறக்கி வைத்தான். அதில் ஏராளமான கழஞ்சுப் பொற்காசுகளும், பல வகைப் பொன்னாபரணங்களும் வரிசையாக வகுத்துக் கட்டி வைத்திருப்பது தெரிந்தது.

''மன்னியுங்கள், ஐயா! என் கையில் இப்போது ஒரு கழஞ்சுப் பொன்னும் இல்லை; இளநீர்க் காய்களுக்காக நீங்கள் கொடுத்த இந்தக் கரும் பொற்காசுகள் தாம் இருக்கின்றன. இவற்றை வேண்டுமானால் பெற்றுக் கொள்ளுங்கள்.''

சளுக்கிய வரிமிண்டுகள் இதைக் கேட்டுக் 'கொல்'லென்று நகைத்தனர். ''அந்தக் காசுகளை நாங்கள் கொடுப்போமே தவிர திரும்பப் பெறமாட்டோம்!'' என்று குறும்பாகக் கூறினான் ஒருவன்.

அநந்தமது தன கையிலிருந்த காசுக் கொத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. அந்த நாணயங்கள் அனைத்தும் பல்லவ அரசாங்கத்தின் விடேல் விடுகு முத்திரையோ நந்தி இலச்சினையோ பொறுத 'கறை கொள் காசு'கள் என்று!

கலங்கிய கண்களுடன் வானத்தை அண்ணாந்து நோக்கிய அவள், ''இறைவா! எங்களை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்?'' என்று பொருமிக் கொண்டே தன் கழுத்தணிகளையும் காதணிகளையும் கழற்றி வரித் தண்டல் அதிகாரிகளிடம் கொடுத்தாள்.

''ஐம்பத்தைந்து கழஞ்சுப் பொன்னுக்கு இவை ஈடாகாதே! சரி; மீதத் தொகையை உங்கள் மைந்தரிடம் வசூலித்துக் கொள்கிறோம். அவர் ஊரிலிருந்து திரும்பியதும் நேரே பல்லவபுரத்துக்கு வந்து எங்களைப் பார்க்க வேண்டும்'' என்று அதிகார தோரணையில் சொன்ன சளுக்கியர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

நெஞ்சின் ஆழத்திலிருந்து நெம்பியெழுந்த பெருமூச்சுடன் அவர்களை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள் அநந்தமதி.

''ஓ.......இளங்காரிக் குடையான் அம்மையா? நீங்கள் எப்போது வந்தீர்கள்? நான் பார்க்கவே இல்லையே!'' என்று மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டே துள்ளிக் குதித்து ஓடி வந்த அந்தப் பெண், அப்போதுதான் சாலையில் இறங்கிப் போய்க்கொண்டிருந்த சளுக்கிய அதிகாரிகளைப் பார்த்துத் துணுக்குற்று நின்றாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு அவசரமாகத் திரும்பிய அநந்தமதி, ''வாருங்கள், இளவரசி! நலம்தானே?'' என்றாள் அன்பும் பணிவும் கலந்த புன்னகையுடன்.

அத்தியாயம் பதினாறு

இளங்கோப்பிச்சி

யார் இந்த இளவரசி? பழையாறைச் சோழரின் செல்வக் குமாரியான இளங்கோப்பிச்சியா? ஆமாம்! ஆனால், இப்போதைய அவளது கோலத்தில் பழையாறைச் சோழரே வந்து பார்த்தாலும் அவளைத் தம் மகள் என்று அடையாளம் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் அத்தனை எளிமையிலும் எளிமையாய்த் தோற்றம் அளித்தாள் அவள்.

''இவர்கள் ஏன் இங்கு வந்து போகிறார்கள்?'' என்று குழப்பத்துடன் கேட்டுக்கொண்டே மெல்லத் திரும்பினாள் சோழ இளவரசி இளங்கோப்பிச்சி.

அவள் கேட்ட வினாவுக்கு விடை பகராமல் அவளுடைய மலர் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அநந்தமதி, ''இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்கள் இளவரசி? ஊரிலிருந்து வந்ததும் உங்களை இங்கு காணாமல் நான் என்னென்ன எண்ணித் தவித்து விட்டேன், தெரியுமா?'' என்றாள் உள்ளடங்கிய பதற்றத்துடன்.

மெல்லத் தலைகுனிந்த இளங்கோப்பிச்சி, ''கோபித்துக் கொள்ளாதீர்கள் அம்மா! என்னுடைய பணிப்பெண்ணுக்கு இன்று உடல் நலமில்லை. வீட்டினுள் தன்னந்தனியே அடைந்து கிடப்பது கஷ்டமாக இருந்தது. மாடுகளுக்கு மேய்ச்சல் காட்டும் சாக்கில் ஏரிப்புலன் பக்கம் போய் வந்தேன்'' என்று தணிந்த குரலில் கூறிக் கொண்டே ஒல்கி ஒசிந்து நடந்து போய், வில்லாக வளைந்திருந்த ஒரு

தென்னை மரத்தின்மீது ஒயிலாகச் சாய்ந்து நின்றாள்.

''என்ன இருந்தாலும் இப்போதுள்ள சூழ்நிலையில் இப்படியெல்லாம் நீங்கள் தனியே எங்கும் போகக் கூடாது இளவரசி!'' என்று பரிவுடன் சொல்லிக்கொண்டே அவள் அருகில் வந்த அநந்தமதி, ''என் மகன் இளங்காரிக்குடையானும் வீட்டில் இல்லையே! அவன் எங்கே சென்றிருக்கிறான்?'' என்று கேட்டாள்.

''உங்கள் மைந்தர்தானே? சந்திரலேகைச் சிற்றரசர் பெரும்பிடுகு முத்தரையரிடம் போயிருக்கிறார்! அவர் மட்டுமல்ல; எங்கள் ஆபத்துதவித் தலைவர் சம்புவராயரும் பழையாறைக்குப் போயிருக்கிறார்.''

அநந்தமதி வியப்புற்றவளாய்க் கண்களை அகல விரித்தாள்.

''ஏனம்மா! சற்று முன் இங்கு வந்து போனார்களே, அவர்கள் சளுக்கிய வீரர்கள்தாமே?''

விரக்தியுடன் பெருமூச்சு விட்ட அநந்தமதி கசந்த குரலில் கூறினாள்: ''ஆம், இளவரசி! அவர்கள் வெறும் வீரர்கள் மட்டுமல்ல, வரித் தண்டல் அதிகாரிகளும்கூட.''

''அப்படியானால் இங்கே, வரி வசூல் செய்யவா வந்தார்கள்?''

''தென்னைக் காணம், நீலோற்பலக் காணம் என்று ஏதேதோ புது வரிகளைச் சொல்லிக் கேட்டார்கள். ஆனால், அவர்களுடைய ஆரம்பப் பேச்சையும் கடைசியாகச் சொல்லிப் போனதையும் சேர்த்து நினைத்துப் பார்த்தால் அவர்கள் வரி வசூலுக்காக மட்டும் வரவில்லை; வேறு ஏதோ ஒன்றை அறிந்து போவதற்காகவும் வந்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. இளங்காரிக்குடையானைப் பற்றித் துருவித் துருவி விசாரித்தார்கள். பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையைக் காவல் காக்கும் சளுக்கிய வீரர்களுக்கு அவன் வெள்ளாடுகள் சஞ்சயம் பண்ணினானாம். அவ்விஷயமாக அவனிடம் ஏதோ விசாரணை செய்ய வந்தார்கள் என்று நினைக்கிறேன்.''

''நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

''எனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாதென்று கூறி, அவன் ஆடுகள் பிடித்து வர வெளியூர்ச் சந்தைக்குப் போயிருக்கிறான் என்று ஒரு பொய்யையும் சொல்லி வைத்தேன்.''

இளங்கோப்பிச்சி இதைக் கேட்டு முகம் மலர்ந்தாள்.

''இளங்காரிக்குடையான் சளுக்கிய வீரர்களுக்கு வெள்ளாடுகள் சஞ்சயம் பண்ணியது உண்மைதானா இளவரசி? அவன் ஏன் அந்தத் தகாத காரியத்தைச் செய்தான்?'' என்று வெறுப்பும் வேதனையும் கலந்த குரலில் கேட்டாள் அநந்தமதி.

''நான்தான் அவருக்கு அப்படியொரு யோசனையைச் சொல்லிக் கொடுத்தேன்!'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்தாள் இளங்கோப்பிச்சி. ''உங்கள் மைந்தர் செய்த சாகசச் செயலைக் கேளுங்கள், அம்மா! சளுக்கிய வீரர்களின் உணவுக்காக, இவ்வூர் இடையன் ஒருவன் வாரந்தோறும் இருநூறு ஆடுகளைப் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டைக்குக் கொண்டு போய் விற்பனை செய்து வந்தான். இதையறிந்த இளங்காரிக்குடையான் அந்த இடையனைக் கண்டு பேசி அவனிடமே அதிகவிலை கொடுத்து ஆடுகள் வாங்கிச் சளுக்கியர்களுக்குக் குறைந்த விலையில் விற்கும் தொழிலை மேற்கொண்டார். இதற்கு ஏற்றாற்போல் தம் பெயருக்கு முன்னால், 'ஆடுகோபதி' என்னும் தொழிற்பெயரொன்றையும் புதிதாகச் சேர்த்துக் கொண்டார். இதனால் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டைக்குள் சகஜமாகச் சென்றுவர அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. சளுக்கிய வீரர்கள் அவர் மீது சந்தேகப்படாத அளவுக்கு நிலைமை உருவாகியதும், அரண்மனையிலுள்ள ஆடுவெட்டியொருவனைக் கையில் போட்டுக்கொண்டு, அவன் மூலம் தமது திட்டத்தைக் கோட்டைக்குள் சிறைப்பட்டிருந்த பல்லவ இளவரசர் கோவிந்தவர்மருக்குத் தெரிவித்து அவருடைய சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார். குறிப்பிட்ட நாளன்று, தேவைக்கு இருமடங்கு அதிகமாக நானூறு ஆடுகளை வாங்கி ஓட்டிக்கொண்டு பல்லவபுரம் அரண்மனைக்குச் சென்றார். சளுக்கிய வீரர்களுக்குச் சஞ்சயம் பண்ண வேண்டிய இருநூறு ஆடுகளைக் கொடுத்து விட்டு மீதமுள்ள இருநூறு ஆடுகளுடன் வீடு வந்து சேர்ந்தார். இங்கு வந்தபின் ஆடுகளை எண்ணிப் பார்த்த போது அவற்றில் ஓர் ஆடு அதிகமாய் இருப்பதைக் கண்டோம். ஆட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டு ஆடுகளோடு ஓர் ஆடாக அரண்மனைக் கோட்டையிலிருந்து வெளியே தப்பி வந்த பல்லவ இளவரசர் கோவிந்தவர்மர்தான் அந்த இருநூற்றோராவது ஆடு.''

இளங்கோப்பிச்சி தன் பூவுடல் துவளக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். ஆச்சரியத்தால் பிரமித்து நின்ற அநந்தமதி ''அப்படியானால் இப்

போது கோவிந்தவர்மர் எங்கே இருக்கிறார், இளவரசி?'' என்று இரகசியமாகக் கேட்டாள்.

இதுவரை நிறைமதிபோல் விகசித்திருந்த இளங்கோப்பிச்சியின் எழில் வதனம் சட்டென்று வெளிறிச் சிறுத்தது. ''அரண்மனைக் கோட்டையிலிருந்து தப்பி வந்த இளவரசர் இங்கேதான் இரண்டு தினங்கள் தங்கியிருந்தார் அம்மா! பிறகு என் தந்தையாரையும் பெரும்பிடுகு முத்தரையரையும் சந்தித்து, அவர்கள் உதவியால் தலை மறைவாக இருக்கும் தமது சகோதரரான மாமன்னர் பரமேசுவரவர்மரைப் பார்க்க வேண்டுமென்பதற்காக, இளங்காரிக்குடையானைச் சந்திரலேகைக்கும் சம்புவராயரைப் பழையாறைக்கும் ஓலை எழுதிக் கொடுத்து அனுப்பி விட்டுத் தாமும் புறப்பட்டுப் போய் விட்டார். அம்மூவரும் போய் ஆறு நாட்களாகியும் ஒரு தகவலும் தெரியவில்லை.''—அவள் குரல் கம்பிக் கரைந்தது.

குழம்பிக் கலங்கிய அநந்தமதி சற்று நேர மௌனத்துக்குப் பின் சட்டென்று திரும்பி, ''இளவரசர் அவர்களிருவரையும் சந்தித்திருந்தால் அவர்களை அழைத்துக்கொண்டு பெருவளநல்லூர் பரவாதி மல்லரின் இல்லத்துக்கு வந்திருப்பார்களே! நேற்று மாலை வரை அங்கு யாருமே வரவில்லையே.....!'' என்று பீதிக் குரலில் இழுத்தாள்.

''அவர்கள் ஏன் அந்தச் சேதியக் கலைஞரின் இல்லத்துக்கு வர வேண்டும் என்கிறீர்கள்?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டாள் இளங்கோப்பிச்சி.

ஒருகணம் தயங்கிய அநந்தமதி மிகத் தணிந்த குரலில் கூறினாள்: ''அந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதா, இளவரசி? பல்லவ மன்னர் பரமேசுவரவர்மர் இப்போது பெருவளநல்லூர்ச் சேதியக் கலைஞரின் இல்லத்தில்தான் தங்கியிருக்கிறார்.''

இதைக் கேட்டுப் பெருவியப்புற்ற இளங்கோப்பிச்சி அவளைப் பரபரப்புடன் நோக்கினாள்.

''ஆம், இளவரசி! பரமேசுவரவர்மர் அங்கு இருப்பதால்தான் அவருடைய பாதுகாப்புக்காகவும் அவருக்குத் தேவையான உபசரணைகள் செய்வதற்காகவும் என்னைக் கொண்டு போய்ப் பரவாதிமல்லரின் சமையற் பணிப்பெண் என்ற பெயரில் அமர்த்தி வைத்திருக்கிறார் சந்திரலேகைச் சிற்றரசர்.''

''அவ்வாறானால் இன்று ஏன் இவ்வூருக்கு வந்திருக்கிறீர்கள்?''

''நேற்றுக் காலை, வேங்கி இளவரசி உத்தமசீலி என்பவளும், சளுக்கியத் தளபதி வில்வேலியும் எதிர்பாராத விதமாகப் பரவாதிமல்லரின் இல்லத்துக்கு வந்து விட்டார்கள்; அவ்விருவரும் சேதியக் கலைஞருடன் பேசிக் கொண்டிருக்கும்போது, வாசலில் இறக்கி வைக்கப்பட்டிருந்த சிவிகை எங்கோ மாயமாய் மறைந்து விட்டது. இதனால் வேங்கி இளவரசியின் பயணம் தடைப்பட்டு, வேறொரு சிவிகை வரும் வரையில் அங்கேயே தங்கும்படியாயிற்று. இந்நிலையில் அந்தப் பெண், அங்கு புகலடைந்திருக்கும் பரமேசுவர வர்மரை எப்படியோ பார்த்து, அவரைப் பற்றி உள்ளூற ஏதோ சந்தேகப்பட்டிருக்கிறார்கள்; அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள, அவள் என்னிடம் சாமர்த்தியமாகப் பேச்சுக் கொடுக்க முயன்றதை அறிந்த பரவாதிமல்லர், உடனே என்னை ஊருக்கு அனுப்பி விட்டார். இனி, அவருடைய அழைப்பு வரும் வரையில் நான் இங்கேதான் இருக்க வேண்டும்.''

இந்த விவரங்களைக் கேட்டு இளங்கோப்பிச்சியின் அழகிய ஓவியக் கண்கள், நசுங்கிய நாவல் பழம்போல் சுழன்று நீரை வழிய விட்டன. அவளுடைய அழுகையின் காரணத்தைப் புரிந்து கொண்ட அநந்தமதி பெருமூச்செறிந்தாள்.

சோழ இளவரசிக்கும் பல்லவ இளவரசன் கோவிந்தவர்மனுக்கும் இடையே உள்ள ஆழ்ந்த அன்பின் தொடர்பை அவள் நன்கு அறிவாள். அவர்களுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்ட சமயத்தில் தான் பல்லவ - சளுக்கியப் போர் மூண்டது. எதிரிகளால் சிறைப்படுத்தப்பட்ட தன் காதலனை எப்படியும் மீட்டுவிட வேண்டும் என்பதற்காகத் தான் அவள் அரண்மனைச் சுகபோகங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு இந்தச் சின்னஞ் சிறு ஊரில் இந்தச் சிறிய இல்லத்திலே வந்து, இத்தனை எளிய — நிம்மதியற்ற — வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறாள்.

கண்ணீர் சோர நின்ற இளங்கோப்பிச்சி சட்டென்று தலை நிமிர்ந்து, ''ஏனம்மா! சளுக்கிய அதிகாரிகள், இளங்காரிக்குடையானைப் பற்றி விசாரித்ததன் காரணம் என்ன? கோட்டையில் சிறைப்பட்டிருந்த பல்லவ இளவரசர் தப்பிச் 'செல்ல அவர்தான் உதவி செய்தார் என்பதைத் தெரிந்து கொண்டு இங்கு வந்திருப்பார்களா?'' என்று துடிக்கும் குரலில் நாக்குழறக் கேட்டாள்.

அநந்தமதி ஏதும் மறுமொழி கூறாமல் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு விம்மிப் பொருமினாள்.

இந்தச் சமயம், அந்தச் சிறிய சாலை வழியே போன ஒரு கூண்டு வண்டியிலிருந்து கூலவாணிகன் போலிருந்த வாலிபன் ஒருவன் இறங்கி அநந்தமதியின் வீட்டை நோக்கி வந்தான். (தொடரும்)



யார் இவர் அறிவாயோ ?

வெகு காலத்துக்கு முன்னே ஓர் ஏழைப் பையன் வாழ்ந்து வந்தான். அவன் அப்பா செருப்பு, பூட்ஸ்கள் தைத்து விற்று வாழ்பவர். இந்தப் பையன் ஒருநாள் அந்தநாட்டு இளவரசரைப் பேட்டி காணச் சென்றான். ஆடிப் பாடினான். இளவரசர் மகிழ்ந்து அவனுக்கு என்ன தேவை என்று கேட்டார். இந்தப் பையன் சொன்னான்: ''நான் நாடகங்கள் எழுதவும் அரசாங்க நாடக மேடைகளில் அதை அரங்கேற்றிப் பார்க்கவும் ஆசைப்படுகிறேன்'' என்றான். இளவரசர் பையனை ஏற இறங்கப் பார்த்தார். பெரிய குடமிளகாய் மூக்கு, பரிதாபம் சொட்டும் கண்கள். இளைத்த உடல். அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''தம்பி, நாடகம் எழுதுவது ஒரு கலை. அதை மேடை ஏற்றி நடிக்கச் செய்வது மற்றொன்று. நான் சொல்வதைக் கேள். உருப்படியாக ஏதாவது செய்து பிழைக்கும் வழியைப் பார். தக்க வேலை செய்யக் கற்றுக் கொள்ளேன்'' என்றார். ஆனால் பையன் இளவரசர் சொன்னதைக் கேட்கவில்லை.

அசட்டுப் பையன்! வீட்டுக்கு ஓடினான். தனது மண் கலய உண்டியலை உடைத்தான். சிதறிய காசுகளைப் பொறுக்கிக் கொண்டு, ''அம்மா நான் அதிர்ஷ்டத்தைத் தேடிப் போகிறேன்'' என்று சொல்லிக் கிளம்பி விட்டான். அப்படியே அதிர்ஷ்டத்தையும் கண்டு பிடித்துத் தனதாக்கிக் கொண்டான்.

கதை நன்றாக இருக்கிறதல்லவா? ஏதோ கட்டுக்கதை என்றுதானே நினைக்கிறீர்கள். ஆனால் கட்டுக்கதைகளை நம்பி அதேபோன்ற கட்டுக்கதைகளை, இனிமையாக உயிருள்ளவைகளாகச் சிருஷ்டித்த ஒருவருடைய வாழ்க்கைதான் இது. இவருடைய தகப்பனார் பூட்ஸ் செய்பவர். தம் தொழிலை வெறுப்பவர். மன ஆறுதலுக்காக இரவு வேளையில் மனைவிக்கு அரபுக் கதைகளை வாய் விட்டுப் படித்துக் காட்டுவார். மனைவிக்கு அதெல்லாம் புரியாது. ஆனால் மகனோ தூங்குவது போலப் பாசாங்கு செய்தபடியே அந்தக்கதைகளை அப்படியே ஜீரணித்து வந்தான். எந்தக் கதையை யார் சொன்னாலும் ஆவலோடு கேட்பான் இவன்.

கதை எழுத வேண்டுமென்ற துடிப்பு நாளுக்கு நாள் வளர்ந்தது பையனிடம். எழுத ஆரம்பித்தான். ஒரே எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை! இதனாலெல்லாம் இவன் தான் எழுதுவதைக் கைவிட்டானா? அதுதானில்லை. பள்ளிக்குச் செல்லாமல் எப்படி இலக்கண சுத்தமாக எழுத வரும்? இவனது எழுத்தார்வத்தைக் கண்ட ஒருவர் இவன் மீது பரிவு கொண்டு வயது வந்த பையன்கள் படிக்கும் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கு உதவினார். இவர் ஒரு நாடகக் கம்பெனியின் அதிபர். பையனிடமுள்ள கவிதா சக்தியும் ஆர்வமும் அவரைக் கவர்ந்தன.

பையன் ரொம்பவும் நம்பிக்கையோடு பள்ளிக்குப் போக ஆரம்பித்தான். இவன் துரதிருஷ்டம் அங்கும் துரத்தி வந்தது. திறமையில்லாத கவிஞர் ஒருவர் இவனுக்கு வாத்தியாராக வாய்த்தார். பையனின் எழுத்துத் திறமையைக் கண்ட அவருக்குப் பொறாமையாக இருந்தது. பையனை வகுப்பறையிலே கொடுமையாக நடத்தினார். பையனின் கண்ணீரைச் சிந்த வைத்தார். ஆனால் அந்தப் பள்ளி மாணவர்கள் இவனைச் சூழ்ந்து கொண்டு இவன் கூறும் விநோதக் கதைகளைத் திறந்த வாய் மூடாமல் கேட்கலானார்கள்.

அந்த வாத்தியாரின் கொடுமை வெளிப்படவே, பையன் படிக்க உதவிய நாடக மேடை அதிபர் அவனை வேறு ஊரில் கொண்டு போய்ப் படிக்க வைத்தார். பெரிய பையனான இவன் இங்கும் படிப்பை விடக் கதை சொல்லுவதில் தான் ஆர்வம் காட்டினான். எங்கு சென்றாலும் குழந்தைகள் இவன் மீது ஏறிக் கொண்டு கதை சொல்லும்படி கெஞ்சுவார்கள். சொன்ன கதைகளையே மறுபடியும் மறுபடியும் கேட்பதில் அவர்களுக்கு அலுப்பே



உங்கள் ஆல்பத்துக்கு

இவர் ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோ நாட்டுக்காரர். இவரது இந்த விசித்திர உடையலங்காரம் எதற்காகத் தெரியுமா? யுத்தத்துக்கு முன்பு, யுத்த தேவதையைத் திருப்திப்படுத்த ஆடும் நடனத்துக்கான உடைதான் இது. பல வண்ணங்களில் வனப்போடு விளங்குவார் இந்தப் பூசாரி. உங்கள் வர்ணப் பெட்டியைத் திறந்து கொண்டு இவரை அழகுபடுத்த ஆரம்பிக்கலாமே!

ஏற்படவில்லை. அத்தனை அற்புதமான கதைகளை அழகாகச் சொல்லத் தெரிந்திருந்தது அவனுக்கு. குப்பைக் காகிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு அது சொல்லுவதாக ஒரு கதை சொல்லுவான். ஒரு பாப்பாவின் கையில் உள்ள உடைந்த பொம்மைக்கு ஒரு கதை பிறந்து விடும். ஓர் உடைந்த பாட்டில், சாக்கடை நீரில் மிதந்து செல்லும் பிய்ந்த ரப்பர் பந்து எல்லாம் கதாநாயகர்களாகி விடுவார்கள், இவனது திறமையினால்.

அன்றாட வாழ்க்கையின் உண்மைகளை, துன்பங்களை ஒளிவு மறைவின்றிக் கற்பனை கலந்து வடிப்பதில் வல்லவனானான் இந்தப் பையன்—பிற்காலத்தில். இவன் அம்மா சின்னக் குழந்தையாக இருக்கும் போது, அவளை வீதியில் சென்று பிச்சை வாங்கி வரும்படி கட்டாயப்படுத்தி அனுப்புவார்களாம் அவள் பெற்றோர். ஆனால் அவளோ பிச்சை எடுக்க மனமின்றி, ஆனால் திரும்பி வீட்டுக்குப் போகப் பயந்து கொண்டு பாலத்தின் அடியிலே பகலெல்லாம் பட்டினியோடு ஒளிந்துகொண்டிருப்பாளாம். தன் தாயாரின் இளமை வாழ்வை அவள் மூலம் கேள்விப்பட்ட இந்தப் பையன் பிற்காலத்தில் தனது தாயையே கதாநாயகியாக வைத்து உள்ளத்தைத் தொட்டு உருக்கும் ஓர் அற்புதமான கதையை உருவாக்கி விட்டான்.

வயதாக ஆக இவன் கைப் பேனா மந்திரக் கோலாக மாறியது. எந்தச் சிறிய விஷயத்தையும் அற்புதமான கதையாக உருவாக்கியது. இவருக்கு இளமையில் ஆதரவு தந்த ஒரே ஒருவரான நாடகக் கொட்டகை அதிபர் கூட ஒரு சமயம் "கதை எழுதும் இந்தப் பைத்தியக்காரத் தொழிலை விட்டு விட்டு அரசாங்கத்தில் ஏதாவது ஒரு உத்தியோகத்தைப் பாரேன்" என்றார். அவருடைய இந்தப் புத்திமதியையே பின்னால் ஒரு கதையாக்கி விட்டார் இவர். "அழகற்ற வாத்துக் குஞ்சு" என்ற உலகப் புகழ்



பெற்ற கதை இவருடைய சொந்த வாழ்க்கைக் கதையேதான்!


பல வருடங்கள் சிங்காரக் கதைகளும் பாடல்களும் எழுதிக் குவித்தார் இவர். ஆனால் உலகம் இன்று அதையெல்லாம் மறந்து விட்டது. முப்பதாவது வயதில் குழந்தைகளுக்கென இவருடைய முதல் அதிசயக் கதைப் புத்தகம் வெளி வந்தது. எங்கே விற்கப் போகிறது என்று அலட்சியமாகத்தான் இருந்தார்கள் வெளியிட்டோர். ஆனால் குழந்தைகள் இந்தக் கதைகளை விரும்பிப் படித்தார்கள். மேலும் மேலும் வேண்டும் என்று தங்கள் பிஞ்சுக் கரங்களை நீட்டினர். ஆகவே சிங்காரக் கதைகள் எழுதுவதை விட்டுச் சிறுவர்களுக்கான கதைகள் எழுதலானார். நம்மைச் சூழ்ந்துள்ள உலகியலின் உண்மை நிலையை உள்ளபடி, உள்ளத்தைத் தொடும்படி படம் பிடித்துக் காட்டுவார் இவர்.

பெயரும் புகழும் பெற்ற பின்னும் அதே இளகிய குழந்தை உள்ளம் இவரை விட்டுப் போகவில்லை. இவரைக் கொடுமைப்படுத்திய உபாத்தியாயர் ஒரு சமயம் இவரைத் தெருவில் சந்தித்துத் தம் செய்கைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அவரை அப்படியே தழுவிக் கொண்டு, தாம் அன்றைக்கே அவரை மன்னித்து விட்டதாகக் கூறினார் இவர்.

தக்க வேலை கற்றுக் கொள்ளச் சொன்ன இளவரசர் இந்த மேதையைக் காண வேண்டி அழைப்பு அனுப்பிக் காத்துக் கிடந்தார். மன்னருக்கு இவரது பேட்டி கிடைத்து அளவளாவிய பின்னர் இவருக்கு ஏதாவது அரசாங்க மரியாதைகள் செய்ய விரும்பினார். ஆனால் இவரோ அடக்கமாக, "அதெல்லாம் எனக்கொன்றும் வேண்டாம். நான் எனக்காகக் கொஞ்சம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

இவர் சம்பாதித்துக் கொண்டிருந்தது என்ன தெரியுமா? உலக மக்களின் அன்பைத்தான். இவரது விசித்திரக் கதைகள் ஐரோப்பிய மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டன. உலகத்துக் குழந்தைகளெல்லாம் இவரது கதைகளைப் படித்து விட்டு மனம் விட்டுச் சிரித்தன, கண் கலங்கின, விம்மி அழுதன. அந்தக் காலத்துச் சிறந்த பேனா மன்னர்களெல்லாம் இவரைத் தங்களில் ஒருவர் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டார்கள்.

பூட்ஸ் தைப்பவரின் மகனாகப் பிறந்த இவர் தான் உங்கள் முகங்களில் புன்னகை தவழ வைக்கும் இறவாத கதைகளை உருவாக்கிய ஆண்டர்ஸன். 'ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸன்' என்பது இவர் பெயர். டென்மார்க் தேசத்தில் ஓடென்ஸி என்ற ஊரில் 1805ம் ஆண்டு பிறந்தார். இவர் எழுதிய எத்தனை எத்தனையோ சிங்காரக் கதைகளை எல்லாம் நீங்கள் படித்திருப்பீர்கள் — படிக்கப் போகிறீர்கள்.



வழக்கப்படி, இங்கு கட்டமிட்டு வரையப்பட்டுள்ள மாதிரியைக் கவனமாக நகல் எடுத்துக் கொள்ளுங்கள். கட்டங்களை அரை அங்குல அளவுக்கு வரைந்து கொண்டால் உங்களுக்கு ஆறரை அங்குல உயரத்துக்கான ஆந்தைப் பொம்மை கிடைக்கும். உருவங்களைத் தனித் தனியே வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். புள்ளிக் கோடிட்ட பகுதிகளில் இலேசாகக் கீறிக் கொள்ளுங்கள். 'P' என்று குறித்துள்ள ஆறு இடங்களிலும் ஒரு குண்டூசியால் சிறிய துவாரமிட்டுக் கொள்ள வேண்டும்.


தலைப்பகுதியைக் காதுகளின் வழியாக முன் பக்கமாக வளையுங்கள். உடலையும் சுருட்டி வளைத்துக் குழல் போலாக்கி 'B' என்ற முனையில் பசை தடவி உட்புறமாக ஒட்டிவிடுங்கள். காதுகளை மேல் நோக்கி விரைப்பாக இருக்கு மாறு சுருட்டி இழுத்து விட வேண்டும். காது, முகம் இவைகளோடு சேர்த்து ஆந்தையின் கண்ணை (இது இரண்டு கத்திரித்துக் கொண்டிருக்க வேண்டும்) பதிக்க வேண்டும். பித்தளைக் குமிழ் கொண்ட காகிதங்களைப் பொருத்துவதற்கு உன் அப்பா வைத்திருப்பாரே 'பேப்பர் பாசனர்' அதுதான் ஆந்தையின் விழிகளாகப் பயன்படும். 'P' என்று குறிப்பிட்டுள்ள ஆறு துவாரங்களையும் மூன்று மூன்றாக ஒன்று சேர்த்து இந்த விழிகளைக் கொண்டு சேர்த்துவிட வேண்டும்.


இனி இறகுகளைப் பொருத்து. இரண்டு வெட்டிக் கொண்டிருக்கிறாயல்லவா? உடலின் உருட்சிக்கு ஏற்றபடி இலேசாக இதையும் சுருட்டி மடித்து, அதை உடலின் இரண்டு பக்கங்களிலும் பொருத்தமாக ஒட்டி விடு.

ஆந்தையை உட்கார வைப்பதற்கான பீடத்தைத் தயார் செய்வது சுலபம். நான்கு பக்கங்களையும் சீராக மடித்து அடியில் கோந்து தடவி ஒட்டி விடுங்கள். இனி ஆந்தையை அம்புக் குறியிட்ட திசையில் ஆந்தையின் முகம் பார்த்திருக்கும்படி வைத்துப் பசைக் காகிதத்தால் ஒட்டி விடுங்கள்.

கடைசியாக ஆந்தையின் நகங்களும் (A), (மறக்காமல் இதில் ஒரு ஜோடி கத்திரித்துக் கொண்டிருப்பாயே!) மரக்கிளையும் தான் பாக்கி, இல்லையா? மரக்கிளை செய்வது ரொம்பச் சுலபம். காகிதத்தைக் குழல் போலச் சுருட்டி ஒட்டிக் கொண்டு இரண்டு முனைகளிலும் கத்திரிக்கோலால் முறிந்த கிளை போலக் கோணல் மாணலாகக் கத்திரித்து விடுங்கள். அவ்வளவு தான். கிளை ரெடி! இதன்மீது ஆந்தை நகங்கள் இரண்டையும் ஒட்டி, இதை அப்படியே பீடத்தின் மீது பொருத்தியுள்ள ஆந்தையின் முன்னால் வைத்து ஒட்டிவிடு. இப்போது நீ தயாரித்துள்ள ஆந்தை உன்னையே பார்த்து விழிக்கும் - இல்லை சிரிக்கும்!

ஆந்தையின் இறகுகள், கண்கள், நகங்கள் இவைகளைச் சாம்பல் நிறக் காகிதத்திலும் உடலை வெள்ளைக் காகிதத்திலும் வெட்டிக் கொண்டு பொம்மை தயாரித்தால் சிறப்பாக அமையும். செய்து பாருங்களேன்.





பாமாலிவ் உபயோகத்தினால் வளரும்
நீண்ட அடர்த்தியான கேசம்
மிக அழகிய கூந்தல்
அலங்கரிப்புக்கு
இயற்கையாக அமைகிறது!
பாமாலிவ்
பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
மூன்று வசீகரிக்கும் வாசனைகள்: லவண்டர்-மல்லிகை-ரோஜா



அத்தியாயம் 16

தாராவின் கடிதங்கள்

'பத்தே நாட்களில் உடல் நலம் பெற்று விடுவேன்' என்று வடிவேலு மார்தட்டிய போதிலும் உண்மையில் வலி குறையவே அத்தனை நாட்களாயின அவனுக்கு. பதினைந்தாம் நாள் அவனை நடமாட அனுமதித்தார்கள். மூன்று வாரங்களுக்குப் பின் அவன் மீண்டும் பழைய வடிவேலுவாகவே மாறி முகாமுக்குத் திரும்பவும் சம்மதம் பெற்றான். சலிப்பு மிக்க அந்தத் தினங்களில் சிரிப்பூட்டவென்று சில நிமிஷங்களேனும் குமாரி வந்து போய்க் கொண்டிருந்ததால்தான் அவன் சித்தம் கலங்காமல் இருந்தது. நோய்நொடியென்று அன்று வரையில் படுத்து அறியாத வடிவேலு இந்தண்டை அந்தண்டை அசைய முடியாதபடி அடிபட்டிருந்த காலைக் கட்டிலோடு சேர்த்துக் கட்டிப் போட்டு வைத்திருந்ததைப் மிகப் பெரிய உபத்திரவமாக எண்ணினான்.

மகளுடன் கதிரேசனும் ஒருமுறை வந்து போனார். சிங்கை வாழ் இந்திய வர்த்தகச் சமூகத்தைச் சேர்ந்த செல்வந்தர் என்பதைப் பார்த்தவுடனேயே புரிந்து கொள்கிற மாதிரியாகத் தோற்றமளித்தார் அவர். தலையில் கறுப்பு வெல்வெட் குல்லாயும் நேரு பாணியில் நீண்ட மேலங்கியும் கால் சராயும் சுற்றுச் சட்டமில்லாத மூக்குக் கண்ணாடியும் அணிந்து, "நான்தான் கதிரேசன், குமாரியின் அப்பா" என்று தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டு அவர் உள்ளே நுழைந்தார். மூன்று வாரங்கள் படுத்த படுக்கையாகக் கிடக்க நேர்ந்தும் கூட நஷ்ட ஈடு ஏதும் கோரப் போவதில்லை என்று அவன் பெருந்தன்மையுடன் கூறிவிட்டதற்காகத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். "வேற்று மனிதர்களாக எங்களை நினைக்காதே! சௌகரியப்பட்ட போது வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிரு" என்றவர் அவன் சீக்கிரமே பூரண குணம் அடைந்து விடுவான் என்று தமது நம்பிக்கையை வெளியிட்டார். வந்து உட்கார்ந்த இரண்டு நிமிஷங்களுக்குள்ளாகவே தங்கச் சங்கிலியில் பிணைக்கப்பட்டிருந்த தமது பாக்கெட் கடிகாரத்தை உருவி எடுத்து நோக்கினார். அதிக நேரம்


...ாமதித்து விட்டதற்காகத் தம்மைத் தாமே நொந்து கொள்கிறவரைப் போல் அவசரம் அவசரமாகக் கரம் கூப்பி விடைபெற்றுச் சென்றார்.

அவர் பின்னாலேயே பதுங்கிக்கொண்டிருந்த குமாரி வாய் திறக்கவில்லை. 'இவள் சிரிப்பும் கும்மாளமும் கிண்டலும் கேலியும் எங்கே போய் ஒளிந்து கொண்டன?' என்று அதிசயித்தான் வடிவேலு. 'அத்தனை பயமா இவளுக்குத் தன் அப்பாவிடம்? பரமசாது போல் அவரைப் பின்தொடருகிறாளே?' ஒரே ஒரு விநாடி தாமதித்துத் திரும்பிப் பார்த்து அவள் புன்னகை புரிந்த போது, 'இரு, இரு! உன் போக்கிரித்தனத்தை யெல்லாம் அவரிடம் உடைத்துக் கூறி விடுகிறேன்' என்பது போல் விரலசைத்து அச்சுறுத்தினாள்.

அவர்கள் தலை மறைந்ததும் ஏனோ அவனுக்குத் தாராவின் நினைவு எழுந்தது. 'நாங்கள் இருவரும் சரளமாகப் பேசிப் பழகுவதைக் கண்டால் அவள் என்ன முடிவுக்கு வருவாள்? இதென்ன அசட்டுச் சந்தேகம்? அவளும் சுவாரசியத்துடன் பேச்சில் கலந்துகொண்டு சுவையூட்டுவாள். மனத்துக்குள்ளாக வேணும் அவளுக்கு நான் துரோகம் செய்து விட்டதாகக் கருதுவாளோ? சீச்சீ! அதெல்லாம் ஒன்றும் இல்லை. சிறு பிள்ளைத்தனம் மாறாத ஒரு பெண்ணிடம் போய்ப் பொறாமைப் படும் அளவுக்குத் தாரா குறுகிய மனப்பான்மை கொண்டவள் அல்ல. அயல் நாட்டுக்கு வந்த இடத்தில் நம்மவர் என்று நட்புரிமை கொண்டாடி அன்யோன்ய பாவத்துடன் சல்லாபிக்க எனக்கு இங்கேவேறு யார்இருக்கிறார்கள்? கிடைத்த ஒருவாய்ப்பையும் நான் இழக்க வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கவே மாட்டாள். முதலாவது அவளுக்கு இந்தச் சில்லறை விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கவே பொழுது இருக்காது. தாய் நாட்டின் வருங்காலம் பற்றிய பெரும் கவலை அவளை ஆட்கொண்டிருக்கும் போது வேறு எதிலுமே சிரத்தையோ ஆர்வமோ இருப்பதற்கு நியாயமில்லைதான். தேச சேவையில் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தீர்மானித்த ஒரு வருஷத்துக்குள்ளாகக் காலன் அவளுடைய தன்னிகரற்ற தலைவரைக் கொண்டு போய் விட்டானென்றால் அவளுக்கு ஏற்படக் கூடிய மனச் சோர்வுக்குக் கேட்கவா வேண்டும்? சுபாஷ் பாபு இறந்து போன செய்தி கேட்டுத் துடிதுடித்திருப்பாளே அவள்?'

விபத்து நேருவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் சுபாஷ் பாபுவின் மறைவு பற்றி வடிவேலு வானொலியில் கேட்டான். அகில இந்திய ரேடியோவின் செய்தி அறிக்கை அந்த ஆச்சரியகரமானதும் துயரகரமானதுமான — நிகழ்ச்சியைச் சிங்கப்பூரிலிருந்த அவன் காதுகளுக்கும் எட்ட வைத்தது. பத்திரிகைகளிலும் பத்தி பத்தியாக விவரங்கள் வெளியாயிருந்தன.

இந்தியா விடுதலை பெற அரியதொரு வாய்ப்பாக உலக யுத்தத்தைக் கருதிய சுபாஷுக்குப் பொன்னான ஒரு சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடுகிற குருட்டு ஸ்தாபனமாகக் காங்கிரஸ் தென்பட்டது. அதனை நம்பிக் கொண்டிருந்தால் நாட்டுக்குக் கதிமோட்சம் ஏது என்று எண்ணியவராகத் தாமே நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்தார். 'இங்கிலாந்தைக் காப்பாற்றுவதற்காகக் கொடியபூதங்களுடன்கூட நான் கைகுலுக்கச் சித்தமாக இருக்கிறேன்' என்று சர்ச்சில் அலறிக் கொண்டிருக்கையில் அதே பாணியில் சுபாஷ் பாபுவும் தம் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டார். அந்நிய ஆதிக்கத்தைத் தாய் நாட்டிலேயிருந்துவிரட்டி அடிக்க பிரிட்டனுடைய எதிரிகளின், முக்கியமாக ருஷ்யாவின் உதவியைக் கோரிப் பெறுவதானாலும் பரவாயில்லை என்கிற நோக்கத்தில் ரகசிய ஏற்பாடுகளில் முனைந்தார் அவர். சுபாஷ்



போஸின் சிந்தனை செயல்படுகிற விதத்தை உணர்ந்த ஆட்சி பீடம் இரண்டாவது பெரும் போர் ஒரு தீவிர கட்டத்தை அடைந்த பிறகும் அவரை வெளியே விட்டு வைக்க அஞ்சியது. ஏதேதோ காரணங்கள் காட்டி அவரைக் காராக்கிருகத்திலேயே காலம் கழிக்கச் செய்தது. இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் அடைந்து கிடக்கிற காலம் அதிகரித்துக் கொண்டே போனால் தன் இட்டங்களையெல்லாம் யார் எவ்வாறு நிறைவேற்றி வைக்கப் போகிறார்கள்? சிறைக் கதவுகள் திறந்து கொள்ள வழியென்ன என்று யோசித்து வங்க கவர்னருக்குக் கடிதம் வரைந்தார் அவர். ''....இந்தப் பிரபஞ்சத்தில் சகலமும் அழியக் கூடியதுதான்; அழியவும் செய்யும். ஆனால் எண்ணங்கள் — லட்சியக் கனவுகள் இவை அழிவதில்லை. ஒரு கருத்துக்காகப் பாடுபடும் தனி மனிதன் இறந்து விடலாம். ஆனால் அவன் மறைந்தபிறகு அந்தக் கருத்து ஆயிரம் உயிர்களிடத்தில் தன்னால் ஆழப் பதிந்து கொள்ளும்....1940 நவம்பர் 29ந் தேதி நான் உண்ணாவிரதத்தைத் தொடங்குகிறேன்....''

பலவந்தமாக அவருக்கு உணவு புகட்டி விடலாம் என்று ஜெயில் காப்பாளர்கள் நினைத்தார்கள். அம்முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை. அன்ன ஆகாரமின்றிச் சாகுமாறு அவரை விடவும் அவர்களுக்குத் துணிவில்லை. அசம்பாவிதமாக ஏதேனும் நேர்ந்து விட்டால் பிறகு மக்களுக்கு யார் என்ன பதில் சொல்வது? இருதலைக் கொள்ளி எறும்பாக ஆறு நாட்கள் அவதிப்பட்டார்கள் சிறை அதிகாரிகள்.

நீதி விசாரணை நாளை ஏற்கனவே நிர்ணயித்து விட்ட அரசாங்கம் சிறையிலிருந்து அவரை வெளியேற்றி வீட்டுக் காவலில் வைத்தது. 1941 ஜனவரி 26ந் தேதியன்று அவரை நியாயஸ்தலத்தில் ஆஜராக்க வீடு தேடி வந்த போலீஸார் அவரை அங்கே காணாமல் திடுக்கிட்டனர். நாலாபுறமும் ஸி. ஐ. டி.கள் சூழ்ந்திருக்க அவர் எங்கே மாயமாய் மறைந்தார்? எப்படி, எந்த வழியாகப் போனார்?

பத்து நாட்களுக்கு முன்னால் சுபாஷைக் காண ஒரு மௌல்வி மோட்டாரில் வந்தார் என்பது போலீசுக்கு நினைவு வந்தது. அன்று காரில் ஏறித் திரும்பிச் சென்றவர் மௌல்வியல்ல; அந்த வேஷத்திலிருந்த சுபாஷ் பாபு தான்! கடந்த சிலதினங்களாக அவர்கள் கண்காணித்து வந்தது போஸை அல்ல; அவரைப் போலவே தாடி வளர்த்துக் கொண்டிருந்த அவருடைய சகோதரரைத்தான்! வீட்டினுள்ளே புகுந்து சென்ற மௌல்வியும் உண்மையில் மௌல்வியே அல்ல; அந்த வேஷம் புனைந்திருந்த சுபாஷின் ஆருயிர் நண்பர் பகத்ராம்தான்! விரைவிலேயே அவர் சுயரூபமெடுத்துச் சுபாஷுடன் சேர்ந்து கொண்டார்! இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டதும் வெட்கித் தலை குனிந்தனர் போலீசார்.

ஆனால் தப்பியோடிய அந்தத் தீரர் இப்போது எங்கே?

ஸயாம் வழியாக ஜப்பானுக்குச் சென்றுவிட அவர் முற்பட்டார் என்றும் பாங்காக்கிலிருந்து டோக்கியோ செல்கையில் விமான விபத்தில் சிக்குண்டு மாண்டார் என்றும் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்ததை உலகம் நம்பி விட்டது.

வடிவேலு மனம் புழுங்கித் தவித்தான் என்றாலும் ஒரு படி அதிகமாகவே அவனுக்குத் தாராவைப் பற்றிய விசாரம்தான். இந்தப் பேரதிர்ச்சியை அவள் எவ்வாறு தாங்கியிருக்கப் போகிறாள்? அவளிடமிருந்து கடிதங்கள் வருவதும் அடியோடு நின்று விட்டன. அதற்குக் காரணம் ராணுவத் தணிக்கையாளர்.

இந்தியாவில் பயிற்சி முகாமில் அவன் வீரனாவதற்கு வேண்டிய நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டிருந்த சில மாதங்களில் அவனுக்குத் தாராவிடமிருந்து இரண்டு மூன்று கடிதங்கள் வந்தன. அவற்றுள் ஒன்றில் ராம்கரில் காங்கிரஸ் கூடியபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வேறொரு மகாநாட்டில் சுபாஷ்போஸ் கலந்து கொண்டது பற்றி உற்சாகத்துடன் பேனாவை ஓடவிட்டிருந்தாள். இன்னொரு கடிதத்தில் சென்ற ஆண்டின் மையத்தில் நடைபெற்ற பார்வர்டு பிளாக் மகாநாட்டைப் பற்றிக் கதை கதையாக அளந்திருந்தாள். 'ஐரோப்பாவில் பிரிட்டன் வாங்குகிற ஒவ்வோர் அடியும் இந்தியாவின் மீது அதன் பிடியைத் தளர்த்தும்' என்று தன் தலைவர் பட்டவர்த்தனமாகப் பகர்ந்ததை விவரித்திருந்தாள். ''ஆங்கிலேயனுடைய ஆணவத்தை ஆழப் புதைக்கக் குழி பறிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அவன் சார்பில், பதுங்கிப் போராடக் குழி வெட்டுகிறீர்களே நீங்கள்! அவன் மமதை மண்ணாக ஆவன செய்யாமல் அவன் மண்ணாசைக்குப் பாதுகாவலராய் விளங்குகிறீர்களே! அந்தோ பரிதாபம்!'' என்று குறும்புத்தனமாக இடித்துக் காட்டி

அவன் கடிதத்தை முடித்திருந்தது. ஆபத்தாகப் போயிற்று.

வடிவேலுவைக் கூப்பிட்டுக் கடிதத்தைக் காட்டிக் குறுக்குக் கேள்விகள் போட்டுக் குடைந்தார்கள் ராணுவத் தணிக்கையாளர்கள்.

தாரா தனக்கு மிகவும் வேண்டியவள் தான் என்றாலும் கொள்கை அளவில் தங்களுக்கிடையில் நிறைய வேற்றுமை இருப்பதைத் தெளிவாக்கினான் வடிவேலு. நாடு விடுதலை பெற வேண்டுமென்கிற அந்தரங்க ஆசை இருக்கத்தான் செய்தது அவனுக்கும். ஆயினும் ஆபத்து சமயத்தில் அகப்பட்டதைச் சுருட்டுவதும் பற்றி எரிகிற வீட்டில் கொள்ளை அடிப்பதும் அவனுக்குப் பிடிக்காதவை; நீசத்தனமென அவன் கருதுபவை. பிரிட்டனுடைய காலனி ஆதிக்கத்தைவிடப் பிரபஞ்சமே தன் காலடிகளில் கிடக்க வேண்டுமென்கிற ஹிட்லரின் அதிகார வெறியை அவன் அதிகமாக வெறுத்தான். இந்தத் தருணத்தில் பிரிட்டனுடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்தால் ஆங்கிலேயரிடம் அவசியம் மனமாற்றம் உண்டாகும் என்று எதிர்பார்த்தான். அவ்விதத்தில் மகாத்மாவின் போக்குத்தான் நியாயமானதாகப்பட்டது அவனுக்கு. இவ்வளவு தூரம் அவன் அந்தரங்க சுத்தியோடு பேசியதிலும் பயனில்லை. பட்டாளத்தில் அரசியல் புகுவதைச் சற்றும் விரும்பாத அதிகாரிகள் தாராவின் கடிதங்களைத் தயங்காமல் தீக்கிரையாக்கினர். அந்தச் சம்பவத்துக்குப் பிறகு தாரா தபாலில் சேர்த்திருக்கக் கூடிய கடிதங்களுள் ஒன்றுகூட வடிவேலுவின் கைகளுக்குக் கிடைக்கவில்லை. அவளுக்குத் தான் எழுதிய பல கடிதங்களின் கதி என்னவாயிருக்கும் என்பதையும் அவனால் நிச்சயிக்க முடியவில்லை.

அத்தியாயம் 17

பொழுதுபோக்கு

முகாமுக்குத் திரும்பலாம் என்று டாக்டர் அனுமதி கொடுத்ததும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுகிற ஆனந்தம் ஒருபுறமிருந்தாலும் குமாரியுடன் கலகலப்பாக அளவளாவுகிற இன்பம் இனி தனக்கு இல்லையே என்று வருந்தவும் செய்தான் வடிவேலு. துப்பாக்கியைத் துருப்பிடிக்காமல் துடைத்துத் துடைத்து வைத்த அவனுக்குக் குமாரியுடன் வாய்ச் சண்டை போடுகிற வாய்ப்பாவது இருந்தது. இனி அதுவும் அவனுக்கு எளிதில் கிடைக்கப் போவதில்லை. 'சௌகரியப்பட்ட போதெல்லாம் வந்து போய்க் கொண்டிரு' என்று கதிரேசன் அழைப்பு விடுத்திருந்தார் என்பது உண்மைதான். ஆனால் ஓய்வு தினங்களில்தானே தன்னால் நகருக்குச் சென்று வர முடியும்? அவ்விதத்தில் அகப்பட்ட முதல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு குமாரி கொடுத்திருந்த விலாசத்தைத் தேடிப் போனான் வடிவேலு.

வசதி படைத்தவர்கள் வாழும் இடம் அது. வரிசை வரிசையான சாலைகளும் பெரிய பெரிய பங்களாக்களுமாய் நிறைந்திருந்த விஸ்தாரமான அந்த நகர்ப் பகுதியில் ஒரு வழியாக வீட்டைக் கண்டுபிடித்துக் கதவைத் தட்டினான்.

மாடிப்படிகளில் மெல்லிய பாதங்கள் நர்த்தனமாடியபடியே இறங்கி வருகிற ஒலி கேட்டது. கதவு திறந்தது. அழகு சுந்தரியாக நின்றாள் குமாரி.

அவனைக் கண்டதும், 'ஐய்யோ!' என்று எதையோ பறி கொடுத்துவிட்டவள்போல் தலைக்கு மேலே கரங்களைக் கோத்து முழங் கைகளைக் கீழ் நோக்கித் தொங்க விட்டாள்.

''ஏன்? ஏன்?'' என்று கதறினான் வடிவேலு.

''தோசைக்கு அரைக்க வில்லையே? நீங்கள் இங்கே நாக்கைத் தீட்டிக் கொண்டு வந்திருப்பீர்களே!''

''போனால் போகட்டும்! இந்தத் தடவை உன்னை மன்னித்து விடுகிறேன். வேறு ஏதாவது டிபன் பண்ணிக் கொடு, சாப்பிடுகிறேன்.''

''ஐயய்யோ!'' என்று இம்முறை கன்னங்களில் கைகளை முட்டுக் கொடுத்தவாறே சோபாவில் இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள் அவள்.


''என்ன? என்ன?'' என்று பரபரப்புடன் கேட்டான் வடிவேலு.

''எனக்குப் பலகாரம் பண்ணத் தெரியாதே!''

''ஆஸ்பத்திரியில் நான் இருந்த போது விதம் விதமான பலகாரங்கள் எடுத்து வருவாயே? அவற்றை யார் தயாரித்தது?''

''சமையல்காரன்.''

''அவனை விட்டே இப்போதும் அடுப்பை மூட்டச் சொல்லு. உன் கண்களில் புகை ஏற வேண்டாம்!''



''ஐயய்யோ! அது நடக்காத காரியமாயிற்றே!''

''ஏன்?''

''இரண்டு நாட்களுக்கு முன்னால் சொல்லிக் கொள்ளாமல் அவன் கப்பலேறி விட்டான், ஜப்பான்காரன் வரப் போகிறான் என்பதால். சுத்தப் பயந்தாங்கொள்ளி! இப்போதெல்லாம் ஓட்டல் சாப்பாடுதான் எனக்கும் அப்பாவுக்கும்!'' என்றாள் குமாரி.

''நாசமாய்ப் போச்சு!'' என்று வடிவேலு ஏமாற்றமடைந்த வயிற்றைத் தடவிக் கொடுத்துச் சமாதானப் படுத்தியவாறே ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். ''சரி, அப்பா எங்கே? நான் வந்திருப்பதாய் அவரிடம் சொல்லு!''

''அவர் வெளியே போயிருக்கிறார்'' என்றாள் குமாரி.

''நீ இவ்வளவு ரகளை பண்ணுவதிலிருந்தே அதை ஊகித்திருக்க வேண்டும் நான். ஆஸ்பத்திரியை விட்டு எப்போது வெளியே கிளம்புவோம் என்று என்னை ஏங்க வைத்துவிட்டது, நீ அங்கே செய்த அட்டகாசம்!''

''சுத்தப் பொய்! நீங்கள்தான் என்னை அங்கே வருமாறு வருந்தி வருந்தி அழைத்துப் பிராணனை வாங்கினீர்கள்!''

''ஐயய்ய! உன்னை எதிர்பார்த்துத் தவம் கிடந்தேன் என்று நினைத்தாய்? தினம் தினம் நீ வாய்க்கு ருசியாக எதையாவது கொண்டு வருவாயே என்பதால் வழி மேல் விழி வைத்துக் காத்திருப்பேன். அவ்வளவுதான்!''


பட்டென்று அவள் எழுந்து விட்டாள். வெண்டாவெறுப்பாக, ''நீங்கள் என்னோடு பேசிச் சிரமப்பட வேண்டாம். நான் போய் வருகிறேன்! நீங்கள் உள்ளே நுழையும் போது தண்டபாணி கோயிலுக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததாக்கும்!''

''அடி அம்மாடியோவ்! ஆபத்தான பாதையில் போகிறீர்களே!''

''சாலையின் வலப் பக்கமாகக் காரை ஓட்டிப் போனால் அதுதான் ஆபத்தான பாதை!''

''இன்றைக்குத் தண்டபாணியிடம் நான் என்ன வேண்டிக் கொள்ளப்


கிளியர்டோன்
பிளாஸ்டிக் வடிதட்டு
கிளியர்டோன்
இரட்டை ஹாட் ப்ளேட்
Kleertone
கிளியர்டோன்
இஸ்திரி மேஜை
இம்பீரியல் இஸ்திரிப்
கிளியர்டோன்
தெர்மல் ஜார்
கிளியர்டோன்
எலக்ட்ரிக் கெட்டில்
கிளியர்டோன்
விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள கிளியர்டோன்
அல்லது நேஷனல்-எக்கோ ரேடியோ டீலரை அணுகுங்கள்
GRA ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பாட்னா
பெங்களூர் . ஸெகந்திராபாத்

போகிறேன், தெரியுமா? 'ஆண்டவனே இவருடைய ஆணவத்தை அடக்கு' என்றுதான்!''

''புரிந்த குற்றத்தைச் சுட்டிக்காட்டினும் அந்தத் தவறை இழைத்தவர்களுக்கு எப்போதுமே பொறுக்காது. மமதையுடன் மற்றவர்கள் பேசுவதாகத்தான் தோன்றும்.''

''அப்படியே எண்ணிச் சந்தோஷப் படுங்கள். எனக்கு அக்கறையில்லை. போகட்டும், தெய்வங்களை வணங்குவதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே? அல்லது ஒரு வேளை யுத்த அரக்கனைத் தவிர வேறு யாரையும் நீங்கள் வழிபடுவது இல்லையாதோ?''

''அரக்கனை அழிக்கும் வடிவேலனையே வணங்குவோம் வா!''

அவள் ஒரு துள்ளுத் துள்ளிக் குதித்து உள்ளே ஓடிச் சென்றாள். மீண்டும் அவளுடைய இளமை மாறாத இனிய உருவம் அவன் கண்களுக்குத் தென்பட்டபோது, அவள் கையில் ஏந்தியிருந்த தட்டில் பழம் பாக்கு வெற்றிலை தேங்காய் புஷ்பம் ஆகியவை இருந்தன. கார் ஷெட்டை நோக்கி நடந்தார்கள்.

''உங்களுக்குத்தான் கார் ஓட்டுகிற என் திறமையில் நம்பிக்கை இல்லையே? நீங்களே ஓட்டி வாருங்கள்'' என்றாள் அவள், செவர்லெட்டின் முன் ஸீட்டில் அமர்ந்து கொண்டு. வடிவேலுவும் அவள் பக்கத்தில் உட்கார்ந்து வண்டியைப் பின்நோக்கி நகரச் செய்தான்.

வீட்டின் சுற்றுச் சுவரைத் தாண்டிச் சாலையை அடைந்ததும், ''ஆர்ச்சர்டு ரோடுக்குப் போக வேண்டும்'' என்றாள் குமாரி.

''எனக்கு ஆர்ச்சர்டும் தெரியாது. வயல்காடும் தெரியாது'' என்றான்.

வழியைக் காண்பித்துக் கொண்டே வந்தவள் திடீரென்று நினைவுக்கு வந்ததுபோல, ''நேற்று மறுபடியும் அதே இடத்தில் ஒரு விபத்து நேர்ந்தது!'' என்றாள்.

''அப்படியா?'' என்று தன் வியப்பை வெளியிட்டான் வடிவேலு.

''ஏறக்குறைய அதே மாதிரியான விபத்தும்கூட. மிலிட்டரி வானில் தமிழ் நாட்டிலிருந்து வந்த வீரன் ஒருவனும் ஆங்கிலேயக் காப்டனும் இருந்தார்கள். மோட்டாரில் தகப்பனும் பெண்ணும் பின்ஸீட்டில் ஏறியிருக்க டிரைவர் கார் ஓட்டிச் சென்றான். ராணுவ வாகனத்தை ஓட்டி வந்த சிப்பாய் தாறுமாறாகச் சந்து திரும்பியிருக்கிறான். பிறகுதான் எதிரே வந்து கொண்டிருக்கும் காரைக் கவனித்திருக்கிறான். வலப் பக்கமாகத் தான் வந்தது பிசகு என்று உணர்ந்து காரில் மோதிவிடாதிருக்க எக்கச்சக்கமாய் ஸ்டியரிங்கை ஒடித்திருக்கிறான். ரோடு ஓரமாக இருந்த ஆலமரத்தை அந்த மிலிட்டரி வான் வேகமாகத் தாக்கியது. அந்த அதிர்ச்சியில் கதவுகள் திறந்து கொள்ள அதிலிருந்து இருவருமே தூக்கி யெறியப்பட்டார்கள். தெரு ஓரத்தில் விழுந்து மூர்ச்சையானார்கள்.''

''அடடா!'' என்று அனுதாபம் தெரிவித்தான் வடிவேலு. அவள் எதை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறாள் என்று அவனுக்குப் புரியாமல் குழப்பமா யிருந்தது.

அவள் தொடர்ந்தாள்: ''காரிலிருந்து அந்தக் கனவான் மகளுடன் கீழே இறங்கினார். மோட்டாரின் முன் விளக்கு ஒளியில் மயங்கிக் கிடந்த இருவரையும் பார்த்தார். உயிருக்கு ஆபத்தில்லை என்று கண்டுகொண்டார். உடல் நலம் பெற்ற பின்னரேனும் தவறு செய்ததற்காக அந்தத் தமிழன் தண்டனை அடையாமல் போக மாட்டான் என்பதையும் உணர்ந்தார். ஆங்கிலேயக் காப்டனைத் தன் அஜாக்கிரதையினால் படுகாயப் படுத்திவிட்ட அவனுக்குக் கடுமையான சிட்சை நடக்

சலிக்காமல் உழைப்பவர்கள் உபயோகிப்பது

நிவியா

பலவிதப் பயனுள்ள, இயற்கையழகைப் பாதுகாக்கும் இந்த கிரீம் சருமத்தை மிருதுவாக்கி, போஷிக்கிறது. மற்ற கிரீம்களாலாகாத காரியத்தைச் சாதிக்கிறது நிவியா - ஆம், களைப்புற்ற சருமத்துக்குத் தெம்பூட்டுகிறது. அதுமட்டுமா? உங்கள் சருமம் இளமையாக ஆரோக்கியத்துடனும், மிருதுவாகவும் இருக்க உதவுகிறது. குடும்பத்திலுள்ள ஆண், பெண், குழந்தைகள் யாவருக்குமே அதன் அரவணைப்பு மேன்மை தருகிறது.



சருமத்திற்கு நிச்சயமாக வேண்டுவது நிவியா.

குமே என்று பரிதாபப் பட்டார். தயாள சித்தம் கொண்டவர் அவர். அந்தத் தமிழ் வீரனைத் தப்புவிக்க எண்ணினார். நல்ல வேளையாகப் பிரிட்டிஷ் காப்டனும் நினைவிழந்து கிடந்ததால் கண் விழித்ததும் நடவாத ஒன்றை நடந்ததாக அவனை நம்ப வைப்பது சுலபமாக இருக்கும். எல்லாவற்றையும் யோசித்துச் சட்டென்று அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

''தமது டிரைவரைக் கூப்பிட்டுப் பத்து டாலர் நோட்டை அவன் கரத்தில் திணித்தார். 'நீதான் வலப் பக்கமாக வந்ததாகவும் தவறு உன்னுடையது தான் என்றும் ஒப்புக் கொள். அபராதம் ஏதேனும் விதித்தார்கள் என்றால் அதை நான் கட்டி விடுகிறேன்' என்றார்.

''டிரைவர் பயந்தான். 'இவர்கள் பிழைத்து விட்டால் பரவாயில்லை. தப்பித் தவறி ஒருவன் இறந்து போய் விட்டால்? குற்றம் என்னுடையது என்னும் பட்சத்தில் லைசென்ஸைப் பறிமுதல் செய்து வருஷக் கணக்கில் சிறையிலும் தள்ளி விடுவார்களே! பிழைப்பும் கெட்டுப் போகும், குடும்பமும் அனாதரவாக விடப்படும். நான் பொய் சொல்ல முடியாது' என்றான்.

''அந்தத் தனவந்தர் அவனை வற்புறுத்தவில்லை. 'சரி, இந்தப் பத்து டாலர்களை எடுத்துக் கொண்டு நீ வீட்டுக்குப் போ. இன்றைக்கு உனக்குப் பாதி நாள் லீவு கொடுத்திருக்கிறேன் நான். மத்தியானத்துக்கு மேல் எனக்கு வண்டி ஓட்ட வந்ததாகவே யாரிடமும் கூறாதே!' என்றார். டிரைவர் இதற்குச் சம்மதித்தான். வெள்ளையனைக் காரின் பின்ஸீட்டிலும் தமிழனை முன் பக்கத்திலும் படுக்க வைக்க எஜமானருக்கு உதவி விட்டுக் கம்பி நீட்டினான் டிரைவர்.

''அந்தக் கனவான் கார் ஓட்டக் கற்றுக் கொண்டதே யில்லை; ஆனால் மகள் லைசென்ஸ் எடுத்திருந்தாள். ஆகவே அவர் தமது மகளை நோக்கி, 'நீ என்ன சொல்கிறாய்?' என்றார்.

'' 'இவருக்கு அவசியம் உதவுவோம்' என்றாள் மகள். 'காரை நான் ஓட்டி வந்ததாகவே இருக்கட்டும்!'

''எல்லாம் ஒரு சில விநாடிகளுக்குள் முடிந்து விட்டன. நகரின் எல்லைப் புறமானதால் ஜன நடமாட்டம் ஏதுமில்லை. அந்தத் தமிழ் வீரனுடைய தலையைக் கதிரேசன் தாங்க, ரத்தம் சொட்டுகிற கால்களைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு வண்டியைக் குமாரி ஆஸ்பத்திரிக்குச் செலுத்திப் போனாள். சிகிச்சை நடைபெறுகையில் போலீசாரும் வந்தார்கள். முன்கூட்டியே திட்டமிட்டிருந்தபடி அப்பாவும் பெண்ணும் கற்பனையை உண்மை என்று சாதித்தார்கள். தன் தலையிலேயே எல்லாப் பழியையும் சுமத்திக் கொண்டாள் மகள். போலீஸார் குமாரியின்பேரில் 'கேஸ்' பதிவு செய்து கொண்டு திரும்பினார்கள்.''

ஒரு பாட்டில் விளக்கெண்ணெயை அப்படியே வாயில் கவிழ்த்துக் கொண்டது போல் இருந்தது வடிவேலுவுக்கு. கார் ஓட்டத் தெரியாத கற்றுக்குட்டி என்று அவளை எத்தனை தடவைகள் கேலி செய்திருக்கிறான் அவன்? அதை எண்ணிய போது அவனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.

''முன்பின் அறிமுகமில்லாத என்னிடம் உங்களுக்குத் திடீரென்று அத்தனை பரிவு ஏற்படுவானேன்? உங்கள் டிரைவர் யோசித்தது போல் எங்கள் இருவரில் ஒருவர் மரணம் அடைந்திருந்தால் பெரிய குற்றச்சாட்டுக்கு அல்லவா நீ பதில் கூற நேரிட்டிருக்கும்? என்னைத் துன்பத்திலிருந்து மீட்க விஷப் பரீட்சைகளில் இறங்கலாமா?''


''அப்பாவுக்கு இதெல்லாம் ஒரு பொழுதுபோக்கு.''


''பொழுது போக்கா?''

''ஆமாம் ஏதோ ஒரு வேகம் துணிச்சலான காரியங்களில் ஈடுபடுமாறு அப்பாவை உந்தித் தள்ளுகிறது: அதிலே அவருக்கு அலாதியான ஓர் இன்பம். மேற்கொண்ட முயற்சியில் வெற்றி பெற்று விட்டாலோ புகழ் மாலைகளுக்குக் கேட்கவே வேண்டாம். மாலை நேரத்தில் கிளப்பில் சீட்டாட்டத்துக்கு இடையில் சுற்றுவட்டத்தில் நாற்பது பேர்களை வைத்துக் கொண்டு ஒரு நண்பர் கேட்கிறார்: 'கதிரேசன்! அந்த அப்பாவிச் சிப்பாயை ஓர் இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றினாயே, அந்தக் கதையை இன்னொருதரம் சொல்லேன், கேட்போம்' என்று. அப்போது அப்பாவுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்? அந்தச் சமயத்தில் ஏற்படுகிற கர்வத்தில் நூறு டாலர்களைத் தோற்றாலும் பொருட்படுத்த மாட்டார். சாதாரணமாக நன்றாக விளையாடக் கூடியவர் அன்று அசிரத்தையாக இருந்து பணத்தைப் பறி கொடுத்து விட்டு வருவார்.''

தகப்பனார் மீது குறை கூறுவது போல் பேசி விட்டதால் பரிதவிப்பவன் மாதிரியாக அவனை விநாடிப் போது ஏறிட்டு நோக்கினாள் குமாரி. அப்போது கார் தண்டபாணி கோயிலருகே நின்றது. விருட்டெனக் கதவைத் திறந்து கொண்டு இறங்கிக் கோயிலை நோக்கி நடந்தாள் குமாரி. (தொடரும்)

தலைவலியால் தொல்லைப்படும்போது...





ஸாரிடான் 'ரோஷ்'

வலியைப் போக்குகிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது

ஸாரிடான் வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும், துரிதமாக, நிச்சயமாக, கெடுதல் எதுவுமின்றி, நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடல்வலி, ஜுரம் வரும்போதிருப்பது. சாதாரண உடல் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற எப்பொழுதும் ஸாரிடான் சாப்பிடுங்கள்.

ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா

பெரியவர்களுக்கு : 1 வில்லை.
குழந்தைகளுக்கு : $\frac{1}{4}$ லிருந்து $\frac{1}{2}$ வில்லை வரை.

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
வால்டாஸ் லிமிடெட்

முதல் கேஸ்

பி.வி.ஆர்

கனகசபாபதிப் பிள்ளை அவ்வளவு செல்வத்தை எப்படிச் சேர்த்தார் என்பதை ஆராயாமல், அவர் செய்த தான தருமங்களை மட்டும் கணக்கிட்டால் மனக் கண் முன் சொர்க்கமும் அதில் அவருடைய எண்ணற்ற புண்ணிய மாலைகளும் தெரியும். அவர் கட்டின சத்திரங்கள் எத்தனை? வெட்டின பாதைகள் எவ்வளவு? அநாதைப் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மதிய உணவு மட்டுமா அளித்தார்? காலையில் காப்பி என்ன, சாப்பாடு என்ன? இரவில் பால் வரையிலும் அவருடைய தர்ம சிந்தனை நீண்டது!

ஏதோ சில 'பொறாமைக்காரர்கள்' அவரையும் அவருடைய செல்வத்தையும் நிந்தனை செய்தார்கள், கறுப்புப் பணம் என்றும் கொள்ளையடித்த சொத்துக்கள் என்றும். அழுக்கு நோட்டானால்தான் என்ன, மதிப்பு குறைகிறதா? இளம் வயதிலிருந்தே பொதுப் பணிகளில் ஈடுபட்ட அவர் ஜில்லா போர்டு அங்கத்தினர், டவுன் கவுன்சிலர் என்றெல்லாம் பார்த்து விட்டு சேர்மன் பதவியையும் வகித்து ஓய்ந்து இப்போது அறுபத்தெட்டு வயதில் தான தருமங்களில் ஈடுபட்டிருக்கிறார்.

இது நாள் வரை மக்களின் வாழ்க்கை சுபிட்சத்துக்காகத் தம் இளைய மனதை அர்ப்பணித்த அவருக்கு ஏனோ திருப்தி உண்டாகவில்லை. ஏழையின் கண்ணீரை அவருடைய செல்வக் கைக்குட்டை எவ்வளவு தான் துடைக்கும்? சர்க்கார் கஜானா காலியானாலும் தீராத தரித்திரம், ஏழையின் தரித்திரம். ஆனால் திருப்தி கிடைக்க என்ன தர்மம் செய்யலாம்? பல நாட்கள் யோசனை செய்தார். அந்தரங்க நண்பர்களைக் கலந்து விசாரித்தார். ஒருவர் இரத்த தானம் என்றார். அவரிடமே இரத்தம் அடி தட்டியதால் அதைப் புறக்கணிக்க வேண்டியதாயிற்று. மேலும் அவர் இரத்தத்தைச் சம்பாதிக்கவில்லையே? பணத்தைத் தானே சம்பாதித்திருக்கிறார்?

ஒரு நாள் திடீரென்று அவருடைய மனைவிக்குக் கடும் வயிற்று வலி தோன்றியது. நாட்டு வைத்தியரின் சூரணத்தில் வலியுடன் வயிறே போய் விடும் போல இருந்ததால் உள்ளூர் ஆஸ்பத்திரிக்குப் போனார். எல்லாச் சோதனைகளையும் செய்து, டாக்டர் 'அப்பெண்டிசைட்டிஸ்' என்று தேறுதல் சொல்லி விட்டு, "இங்கே ஆபரேஷன் வசதி இல்லை. உடனே பட்டணத்துக்கு அழைத்துப் போங்கள்" என்று கூறினார்.

மனைவியைக் காரில் போட்டுக் கொண்டு பட்டணம் பெரிய ஆசுபத்திரியை அடைந்த அவர் ஆபரேஷன் அறையைப் பார்த்துப் பிரமித்துப் போனார். (அவருடைய மனைவிக்கு ஆபரேஷன் நடந்ததும், அதில் அவள் வெற்றி பெற்று ஊருக்குத் திரும்பினதும் இப்போது தேவையில்லாத கதை.)

ஊருக்குத் திரும்பியதும் பிள்ளையவர்கள் நேரே உள்ளூர் ஆஸ்பத்திரி டாக்டரைத் தேடி ஓடினார். ஒரு ரண சிகிச்சை அறை கட்டி, அதற்குத் தேவையான கருவிகளையும் வசதிகளையும் மேஜையும் வாங்க என்ன செலவு ஆகும் என்ற விவரங்களைக் கேட்டார்.

'முப்பத்தி இரண்டாயிரம்' என்று கண்களை அரைகுறையாக மூடிக் கொண்டு டாக்டர் சொல்லவே, "பூ... இவ்வளவுதானா?" என்று உதறி விட்டுப் பிள்ளையவர்கள் வீடு திரும்பினார்.

கனகசபாபதிப் பிள்ளை ஆஸ்பத்திரியில் 'ஆபரேஷன் தியேட்டர்' கட்டப் போகிறார் என்பதை அறிந்த மக்கள், புது சினிமாத் தியேட்டரில் புதுப் படம் வெளியானது போல் ஆரவாரித்தார்கள்: அஸ்திவாரக்கல் நடுவதற்கு முன்னேயே, பல கட்டங்களைப் போட்டு (அதற்கு உண்டான செலவைப் பிள்ளை அவர்களிடமே வாங்கிக் கொண்ட கதை இங்கே தேவையில்லை) அவரை வாழ்த்தினார்கள். கொலைகளையும், கொள்ளைகளையும் பிரசுரிக்கும் பத்திரிகை ஒன்று, "பறி போகும் உயிரைக் காக்கப் பிள்ளை கொள்ளைப் பணம் கொடுக்கிறார்" என்று கொட்டை எழுத்துகளில் பிரசுரித்து விட்டு, ஒரு தலையங்கமும் எழுதியது.

ஒரு நல்ல நாள் அன்று ஒரு பெரிய தலைவர் முன்னிலையில் அஸ்திவாரக்கல் நடப் பெற்றது. அன்றையிலிருந்து பிள்ளையவர்கள் சரியாகத் தூங்கவில்லை. கண்முன் ரண சிகிச்சை அறை சுற்றிச் சுற்றி வந்தது. வழுவழுப்பாய் 'மொஸைக்' தரையும், வெள்ளை வெளேரென்ற சுவர்களும், உயர்ந்த ரக மின்சார விளக்குகளும், சிகிச்சை ஆயுதங்களும், கருவிகளும், அறையின் நட்டநடுவே விசாலமான மேஜையும் அவர் பெற்ற குழந்தைகளைப் போல் வளைய வளைய வந்தன.

அஸ்திவாரக்கல் நட்ட மறுதினமே பிள்ளையவர்கள் டாக்டரையும் அழைத்துக்கொண்டு பம்பாய் சென்றார். டாக்டர் கொடுத்த பட்டியலை ஒரு ஜெர்மன் கம்பெனியில் சமர்ப்பித்து விட்டுப் பத்தாயிரம் ரூபாய் அட்வான்ஸையும் கொடுத்தார். மூன்று மாதங்களுக்குள் எல்லாப் பொருள்களையும் அனுப்புவதாக அவர்கள் வாக்களித்தார்கள்.

நாட்கள் ஒன்று இரண்டு என்று நகர்ந்தன. ரண சிகிச்சைக் கட்டிடம் ஒவ்வோர் அங்குலமாக உயருவது போலப் பட்டது அவருக்கு. சீக்கிரம் முடிந்தால் தானே சீக்கிரம் ஏழைகளின் உயிர் சேதமாகாமல் இருக்கும்? அவர்களெல்லாம் என்ன, கனகசபாபதிப் பிள்ளையா, காரில் பட்டணம் வரை செல்லுவதற்கு?

தினம் தினம் ஆஸ்பத்திரிக்குச் சென்றார்; டாக்டரைப் பார்த்தார். எந்த நோயாளியின் உயிர் ஊசலாடும் நிலையில் இருக்கிறது. அதைக் காப்பாற்ற வேணும் என்று வராந்தாவெல்லாம் சுற்றினார். கட்டிட வேலை செய்யும் கண்டிராக்டரை முடுக்கினார். அவர் எடுத்துக் கொள்ளும் சிரமத்தில் அவருடைய மூளையே கலங்கி ஆபரேஷனுக்கு இலக்காகி விடுமோ என்று ஆகி விட்டது.

ஜெர்மன் கம்பெனிக்காரர்கள் சொன்ன தவணையில் எல்லாக் கருவிகளையும் ஆபரேஷன் மேஜையையும் அனுப்பி விட்டார்கள். பிள்ளை அவர்களுக்குப் பயந்து கண்டிராக்டரும் தம் வழக்கத்துக்கு எதிராகச் சொன்ன தேதிக்குள் வேலையை முடித்தார்.

பிள்ளை அவர்களுக்கு உடலும் உள்ளமும் பூரித்துப் போயிற்று. உடனேயே பட்டணம் ஓடி ஒரு மந்திரியைப் பேட்டி கண்டார். மந்திரி ஏகப்பட்ட இடங்களைத் திறந்து வைக்க வேண்டியிருந்தது. ஓர் ஓட்டல், ஒரு விறகுக் கடை, ஓர் உந்து வண்டி நிலையம் என்று எவ்வளவோ! இருந்தும் அவரால் கனகசபாபதிப் பிள்ளையின் வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை. ஒரு 'வாலண்டரி' திறப்பு விழாவை நிறுத்தி விட்டு வருவதாக வாக்களித்தார்.



அடுத்த நாள் திறப்பு விழா. ஆஸ்பத்திரி ஜகஜ்ஜோதியாகத் திகழ்ந்தது. டாக்டர், கட்டிட வேலைக்காக வாங்கியிருந்த சாமான்களில் மிஞ்சினதைக் கொண்டு, ஆஸ்பத்திரிக் கட்டிடத்தையும் பழுது பார்த்தார். வண்ணக் காகிதங்களில் தோரணங்களும், மரக்கிளைகளில் மின்சார பல்புகளும், ஆபரேஷன் அறை வாயிலில் வாழைமரமும் கமுகும் – அட்டா! என்ன ஏற்பாடுகள், என்ன ஏற்பாடுகள்! திறப்புவிழாவன்று ஏழைகளுக்கு அன்னதானமும் வஸ்திர தானமும் நடந்தன. நோயாளிகள் ஒவ்வொருவருக்கும் பிள்ளையவர்களின் கணக்கில் ஓர் ஆப்பிளும் ஓர் ஆரஞ்சும் வழங்கப்பட்டன.

பிள்ளையவர்கள் அன்று சாயந்திரம் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். எந்த நோயாளிக்கு ரண சிகிச்சை தேவை என்று அறிய மனம் துடித்தது. அதே சமயத்தில் முதல் முதலாக ரண சிகிச்சை பெறுபவன் அவர் கட்டின அறையில், வாங்கின மேஜையின் மேலேயே உயிர் துறக்கக் கூடாது என்றும் மனம் ஏங்கியது. கேஸை விசாரித்ததில், ஓர் இருதயக் கேஸும், ஒரு மூளைக் கேஸும், ஒரு சாதாரணக் கேஸும் இருப்பதாகத் தெரிந்தன.

அந்தச் 'சாதாரணக் கேஸை'ப் போய்ப் பார்த்தார். சாகக் கிடக்கும் தகப்பனருகே அமர்ந்திருக்கும் தனயனைப்போல உட்கார்ந்து விசாரித்தார்.

''முதுகிலே கட்டிங்க.... உங்க புண்ணியத்திலே ஆபரேஷன் வசதி வர்றதுன்னுதான் நான் ரெண்டு நாள் முன்னாலேயே இங்கே வந்தேனுங்க....'' என்று அவன் தன் முதுகுக் கட்டியைக் காட்ட ஆரம்பித்து விட்டான். அதைப் பார்க்க இடம் கொடுக்காத மனத்தோடு பிள்ளை அவர்கள் டாக்டரைப் பார்க்கச் சென்றார்.

''டாக்டர், நாளைக்குக் காலையிலே திறப்பு விழா. அது முடிஞ்சதும் அந்த முதுகுக் கட்டி கேஸை முடித்து விடுங்கள். ஏனென்றால் புதுசா கட்டியிருக்கிற தியேட்டரில் முதல் ஆபரேஷன் வெற்றியாக முடியணும்னு எனக்குத் தோணுகிறது. இல்லாவிட்டால் என் மனசுக்கு அச்சாணியமா இருக்கும்....''

''அதற்கென்ன? அப்படியே செய்து விட்டால் போகிறது.''

''முதுகுக் கட்டிக் கேஸ் சீரியஸா?''

''ஆமாம்.... இம்மாதிரி கட்டிகளை எடுக்கும்போது சில சமயங்களில் ரத்தக் குழாய் அறுந்து விடுகிறது. நரம்புகளையும் பாதிக்கும். அதனால் என்ன? நீங்கள் கவலைப்படாதீர்கள்....!''

''அப்போ வேறே எந்த நோயாளி....?''

''ஓர் இதயமும் ஒரு மூளையும்.. இரண்டும் பிழைக்காதவை....''

''என்ன டாக்டர் இப்படிக் கையை விரிக்கிறீர்கள்....?''

''இருக்கிறதைச் சொல்லுகிறேன். ஆனால் நீங்கள் போய் மற்றக் காரியங்களை யெல்லாம் பாருங்கள்....''

சோர்ந்த மனத்துடன் வீடு திரும்பிய பிள்ளையவர்கள், மனைவியுடன் முருகன் கோவிலுக்குச் சென்று பால் அபிஷேகம் செய்தார். வடிவேலரின் முகத்தில் தவழும் புன்னகையில் மயங்கி, மெய் மறந்து இறைஞ்சினார். 'முதல் கேஸ்' பிழைக்க வேண்டும்!

பிழைக்கா விட்டால்?

கேள்வியே அவரை உலுப்பியது.

ஊரில் எல்லோரும் ஏளனம் செய்வார்கள். மற்ற நோயாளிகள், வேறு ஆஸ்பத்திரிக்குப் போகிறோம் என்று போய் விடுவார்கள். இறந்து போனவன் ஆவி அவரிடம் வந்து, 'நீ எப்படியெல்லாம் சம்பாதித்து இப்படி ஒரு



ஆபரேஷன் அறை கட்டினாயோ? என் உயிரை ஆவியாக்கி விட்டதே!' என்று ஏசும்.

மூன்று மாத காலமாக ஒரே நோக்கத்தில் உடலையும் உள்ளத்தையும் வாட்டிக்கொண்ட அவர் மனத்தில் இப்போது பெரும் சுமை, இத்தனை நாட்கள் தோன்றாத சுமை பிறந்து விட்டது. மனைவி எவ்வளவோ ஆறுதல் சொன்னாள்.

இரவெல்லாம் ஆண்டவனை வேண்டினார். முதல் 'கேஸ்' பிழைக்க வேணும் என்று கெஞ்சினார். பட்டத்தை வாங்கிக்கொண்டு, முதன் முதலாக ரண சிகிச்சை செய்யப் புறப்படும் டாக்டருக்குக் கூட இவ்வளவு வேதனையும் பயமும் கலக்கமும் இருக்கிருக்குமோ என்னமோ!

முதல் கேஸ்'' ஜெயித்து விட்டால் போதும். அப்புறம் அவருக்குக் கவலையில்லை. அவர் இறைவனை வேண்டுவதெல்லாம் முதல் கேஸுக்குத்தான். ஏனென்றால் அவருடைய பெயர், மதிப்பு, மானம் எல்லாம் அந்த முதல் 'கேஸில்'தான் மாட்டிக் கொண்டிருக்கிறது. அவர் வியாபாரத்தில் எத்தனையோ தில்லுமுல்லுகள் செய்துதான் இத்தனை சம்பாதித்திருக்கிறார். ஆனால் அதில் அவர் கணிசமாகத் தானமும் செய்திருக்கிறார். அந்தத் தானம் அவரைப் பழி வாங்கி விடக் கூடாது.

சோர்ந்த உள்ளமும் களைத்த உடலுமாய்ப் படுத்த அவர் அன்றிரவு தூங்கவேயில்லை.

பொழுது விடிந்தது.

எட்டு மணிக்கு, ஊர் மக்கள் சார்பில் அவர் படத்தையும், ஆபரேஷன் அறையையும் மந்திரி திறந்து வைக்கப் போகிறார். அவருடைய உருவப் படத்தை ஆஸ்பத்திரியிலேயே மாட்டி வைக்கவும் போகிறார்கள்!

அவருடைய மனம் பதறியது. இத்தனை நாளா பக்கமும் அலைந்தது. திறப்பு விழாவைக் கூட அவர் மறந்து விட்டார். முதல் கேஸ் தான் கண் முன் நின்றது. முருகன் அருளில் முதல் 'கேஸ்' பிழைத்து விட்டால் பிறகு கவலையே இல்லை.

திரண்டு வந்த மக்கள் கூட்டத்தில் மந்திரி பிள்ளையவர்களுக்குப் புகழ்மாலைகள் சூடினார். பாரத மாதாவின் மணி வயிற்றில் உதித்த தவப் புதல்வர்களில் பிள்ளையும் ஒருவர் என்று நெகிழ்ந்தார். அவர் செய்திருந்த தான தருமப் பட்டியலைப் படித்தால் படித்து முடிக்க இரண்டு மணி நேரமாவது ஆகும் என்ற காரணத்தால் அது படிக்காமல் விடப்பட்டது.

மந்திரியை வழியனுப்பி விட்டுப் பிள்ளையவர்கள் திறந்த ஆபரேஷன் தியேட்டரையும், கனகசபாபதிப்



பிள்ளையின் உருவப்படத்தையும் பார்த்துக் கொண்டே நின்றார்.

அவருடைய உருவம் படத்தில் இருந்தது. அவருடைய உள்ளத்தில் உருவான ஆசை தியேட்டர் உருவத்தில் நின்றது. ஆனால் பூரண நிறைவு உண்டாகவில்லையோ?

டாக்டரைத் தேடிக் கொண்டு சென்றார். அவர் மந்திரியைத் தொடர்ந்த மேலதிகாரியைத் தொடர்ந்து சென்று விட்டார்.

பதினொரு மணிக்கு வீட்டை அடைந்த அவர் நேரே மாடிக்குச் சென்று படுத்துக் கொண்டார். களைப்பு அவரை மீறியது.

திடீரென்று பன்னிரண்டு மணிக்கு "ஆஸ்பத்திரியிலிருந்து போன் வந்திருக்கிறது!" என்று அவரை வேலையாள் எழுப்பினான்.

முதல் 'கேஸின்' முடிவா?

பதறிக் கொண்டே கட்டிலை விட்டு எழுந்த அவர், ஒரு கணம் நின்றார். அடி வயிற்றில் ஏதோ 'சுர்ர்' என்று குத்துவது போல் இருந்தது. அடுத்த கணம் அதைப் பொருட்படுத்தாமல் விரைந்து அவர் மாடிப்படிகளில் இறங்கக் கால் வைக்கையில் —

படிகளை மூடி அலங்கரிக்கும் கம்பளத்தின் விளிம்பில் கட்டை விரல் சிக்கிக் கொண்டது. முன்னால் விழப் போனவர் கையால் சுவரின் மேல் தாங்கிக் கொண்டு உடம்பின் பாரத்தையெல்லாம் இன்னொரு காலில் போட்டுச் சமாளிக்க முயன்றார். முழு வெற்றி கிடைக்காமல் இரண்டாம் படியில் விழுந்த அவர் மெதுவாக எழுந்திருக்கும் போது, அடிவயிற்றில் எட்டி குத்துவது போன்ற வலி.

இரண்டு பேர்கள் மெதுவாக அவரை இறக்கினார்கள்.

கார் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தது.

டாக்டர் சோதனை செய்தார்.

"பிள்ளைவாள்! கவலைப்படாதீர்கள். — சின்ன ஆபரேஷன்தான்!" என்றபோது பிள்ளை அவர்களுக்குக் கூட நம்பிக்கை வந்தது.

சுற்றிலும் பார்த்தார். நேற்று பார்த்த டாக்டரும் நர்ஸ்களும் பூத கணங்களாகத் தோன்றினர். காலையில்தான் மந்திரி திறப்பு விழா நடத்தியிருக்கிறார். அவருடைய படத்தைத் திறந்திருக்கிறார். அதற்குள் அவருக்கே உயர் ஆபரேஷனா?

'இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள் ஆபரேஷன் செய்யா விட்டால், கண்டிப்பாக உயிர் பிழைக்க முடியாத கேஸ்' என்று டாக்டர் சொல்ல, அவ் வார்த்தைகள் அவர் காதுகளில் எதிரொலியுடன் ஓலமிட்டன.

"பயமில்லையே டாக்டர்!"

"இல்லை."

"டாக்டர், கடைசியில் என் கேஸை முதல் கேஸாகி விட்டதே.... நான் அளித்த மேஜையின் மேல் நான்தான் முதல் நோயாளியாக இருக்க வேண்டுமோ?"

"யார் சொன்னார்கள்....? முதல் கேஸ் நேற்று ராத்திரியே நடந்து விட்டது!"

"என்ன? திறப்பு விழாவுக்கு முன்னமேயா ...?"

"என்ன செய்வது? ராத்திரி பன்னிரண்டு மணிக்கு ஒரு அவசர பிரசவ கேஸ் வந்தது. விழாவுக்காக அதைக் கொல்ல முடியுமா?"

"என்னாச்சு டாக்டர், என்னாச்சு?"

"தாயும் குழந்தையும் சௌக்கியம்!"

"அப்பாடா!" என்று பெருமூச்சுவிட்ட பிள்ளையவர்களின் மனம் நிறைவு கண்டது.

"இப்போ எனக்கும் பயமில்லை. டாக்டர் நான் தயார். மயக்க மருந்து கொடுங்கள்!" என்றார் பிள்ளையவர்கள். ஆனால் அதே கணத்தில் திடீரென்று பயமும் கலக்கமும் தோன்றின. இத்தனை நாட்களாக முருகனை எதற்காகப் பிரார்த்தித்தார்? முதல் 'கேஸ்' பிழைக்க வேண்டுமென்று! இரண்டாவது கேஸுக்குப் பிரார்த்தனை செய்யவில்லையே! செய்திருந்தால் முதல் பிரார்த்தனை நிறைவேறியது போல் நிறைவேறுமே!

சிந்தனையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் கொண்டு மயக்க மருந்து அவரை வீழ்த்தியது. எப்படிச் சம்பாதித்தால் என்ன? அவர் செய்த தானம் இப்போது அவருக்கே பயன்படுகிறது.

ஐந்து மணிக்கு டாக்டர் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தார். ஒரு மூலையில் ஆப்பிளும் ஆரஞ்சும் கிடந்தன. எஞ்சியிருந்த வண்ணக் காகிதங்கள் சுருள் சுருளாகக் காற்றில் அசைந்து கொண்டிருந்தன.

டாக்டர் முகம் வெளுத்து கண்கள் கலங்கின. நீர்த்திவலை பார்வையை மறைத்தது.

திடீரென்று எழுந்தார். விழாவுக்கு வரவிருந்த ஒரு பிரமுகர் வராமலிருந்ததால் அவருக்கான மாலை ஓர் ஆணியில் தொங்கி ஆடிக் கொண்டிருந்தது.

டாக்டர் அதை எடுத்தார்.

அறை வாயிலண்டை, காலையில் மந்திரி திறந்து வைத்த கனகசபாபதிப் பிள்ளையின் உருவப் படத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தார். தங்க பிரேம் மூக்குக் கண்ணாடியும், அடர்த்தியான மீசைக்கொத்தும், ஜரிகை அங்கவஸ்திரமும் அவரைக் கலக்கச் செய்தன.

ஒரு நிமிட நேரம் தலைகுனிந்த டாக்டர், மாலையைப் படத்துக்குப் போட்டு விட்டுத் தம் அறைக்குத் திரும்பினார்.











GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி

சில்லறையா? மொத்தமா?

கோமதி சுவாமிநாதன்

[நாகராஜன் வீட்டுக் கூடம். வாசலுக்கு நேராக அமர்ந்திருக்கும் நாகராஜன் கையிலிருக்கும் பத்திரிகையையும் வாசலையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் பையன் சுப்புராமன் சற்றுத் தள்ளி உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறான்.]

நாகராஜன்: ஏன்டா சுப்பு! தபால்காரர் இந்தத் தெருவுக்கு வந்துட்டுப் போயிட்டாரோல்லியோ?

சுப்புராமன்: ஏன் அப்பா! யாரிடமிருந்தாவது முக்கிய தபாலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா அப்பா? நான் வேண்டுமானால் திண்ணையில் உட்கார்ந்து தபால்காரர் வருகிறாரா என்று கவனிக்கட்டுமா?

நாகராஜன்: அட சீ! .... எனக்கு யாரிடமிருந்தும் கடுதாசி வர வேண்டாம்! தபால்காரர் வராமல் போனால் போதும்! அவர் ஒன்றும் கொடுக்காமல் போனால் நிம்மதி!

[நாகராஜனின் மனைவி சீதா வருகிறாள்.]

சீதா: குழந்தை பாமாகிட்டேயிருந்து கடுதாசியே இல்லே! தீபாவளிக்கு மாப்பிள்ளையை அழைத்துக் கொண்டு எப்போ வரப்போறாளோ?....

நாகராஜன்: (எரிச்சலுடன்) ஏய் வனவாசம்! வாயைத் திறந்தால் மென்னியைப் பிடிச்சுடுவேன்! ஒரு சனியனும் இங்கே வர வேண்டாம்!

சீதா: அழகாக இருக்கு நீங்க பேசறது! பட்டுவுக்கு இது இரண்டாவது தீபாவளி! நிச்சயமாய் மாப்பிள்ளை பட்டுவை அழைத்துக் கொண்டு வருவார்! என் தம்பி வேறு இந்த வருஷம் லீவு எடுத்துக் கொண்டு அம்பாயிலிருந்து வரப் போகிறான்!

நாகராஜன்: ஏய் மடக் கழுதை! இது என்ன தீபாவளிச் சத்திரம்னு நினைச்சுட்டியா? என் மாமனார் துணிக்கடை வச்சிருக்கானா? உன் மாமனார் துணிக்கடை வச்சிருக்கானா? எல்லாருக்கும் துணி தானம் பண்ண?

சீதா: அவர்களை யெல்லாம் இப்போது ஏன் கூப்பிடுகிறீர்கள்? எல்லாருக்கும் கடுதாசி எழுதியிருக்கிறீர்களோல்லியோ?

நாகராஜன்: கடனுக்காகக் கடுதாசி எழுதினேன்! அதற்காக அவர்களெல்லாம் வந்து நிற்கணும்னு அவசியமில்லே! புத்திசாலியாக இருந்தால் அவனவன் இருக்கிற இடத்திலே தீபாவளி கொண்டாடுவான். இங்கே வந்து என் கழுத்தை அறுக்க மாட்டான்.

சீதா: உங்க மாப்பிள்ளைகளையும் அவ்வளவு புத்திசாலிகளாகவே இருக்கணும்னு எதிர் பார்க்கிறீர்களா?

நாகராஜன்: உன்னுடைய புத்திரி ரத்தினங்கள் போய்ச் சேர்ந்த பிறகு நான் அவர்களிடம் புத்திசாலித்தனத்தை எதிர்பார்ப்பது தவறுதான். இருந்தாலும் கொஞ்சம் அசட்டு நம்பிக்கை இருக்கிறது.

சீதா: (உள்ளே போய்க் கொண்டே) வெயில்கூட அதிகம் இல்லே! ஆனாலும் உங்கள் மூளை இப்படிப் போக வேண்டாம்!

[சீதா உள்ளே போகிறாள். நாகராஜன் வெளியே போகிறார்.]

காட்சி 2

[ஐந்தாறு நாட்களுக்கப்புறம் ஒரு நாள்.]

நாகராஜன்: டேய் சுப்பு! ......

சுப்புசாமி: (திண்ணையிலிருந்து வந்து கொண்டே) அப்பா! தபால்காரர் நம்ப வீட்டைத் தாண்டிப் போய் விட்டார்! இன்றைக்கும் நமக்குத் தபால் ஒன்றும் கிடையாது.

நாகராஜன்: ரொம்ப நல்லது! இந்த உலகத்திலே என் மேல் அனுதாபமுள்ள ஆத்மா அவர் ஒருவர்தான். தீபாவளி இனாம் அவருக்குக் கொஞ்சம் நிறையவே கொடுக்கணும்! ஞாபகப்படுத்து.

சுப்புசாமி: ஆகட்டும் அப்பா!

நாகராஜன்: டேய்! ஒரு கடுதாசியிலே குறிச்சுக்கோடா! துணி வகையறா நானூறு, மளிகை இருநூறு, பட்டாஸ் ஐம்பது....


சுப்புசாமி: ரொம்ப நன்றி அப்பா! .... நம்ப வீட்டுக்கு இந்தத் தடவை யாரும் விருந்தாளிகள், அக்கா, அத்திம்பேர் வகையறாக்கள் வரவில்லே. எனக்கு ஒரு டெர்ரிலின் ஷர்ட்.....

நாகராஜன்: விளக்குமாறு ஷர்ட் ...... போடா! எத்தனை ரூபாய் கடன் வாங்காமல் இருக்கலாம் என்று கணக்கு பார்க்கிறேன். நாளைக்குத் தீபாவளி. எப்போ ஒருவரிடமிருந்தும் வருவதாகக் கடிதம் வரலியோ, இனி ஒருவரும் வரமாட்டார்கள்! நம்ப மாப்பிள்ளைகளும் கொஞ்சம் புத்திசாலிகள்தான்!

சுப்புசாமி: (மெதுவாக) உங்க அந்த புத்தி அவர்களுக்குத் தெரியாதா என்ன?

நாகராஜன்: என்னடா முணுமுணுக்கிறாய்?

சுப்புசாமி: இல்லேப்பா! காலம் கெடக்



இது நிலையிலே இந்த விலைவாசி ஏற்றத்தாலே வராமல் இருப்பது அறிவாளிகள் செய்கை என்று சொன்னேன்.

[வாசலில் இரண்டு குதிரை வண்டிகள் வந்து நிற்கின்றன. ஒரு வண்டியிலிருந்து பாமா குடும்பமும் மற்றொரு வண்டியிலிருந்து பட்டு குடும்பமும் இறங்குகின்றன.]

பட்டு: (உள்ளே வந்து கொண்டே) என்னப்பா? ஸ்டேஷனுக்கு வந்திருக்கப்படாதோ? மெனக்கெட்டு கடுதாசி எழுதியிருந்தேனே?

பாமா: (உள்ளே வந்து கொண்டே) ஏண்டா கப்புசாமி! நீயாவது ரயிலடிக்கு வந்திருக்கப்படாதோ! பாழும் போர்ட்டர் ஒன்னேகால் ரூபாய் வாங்கி விட்டான்.

பட்டுவின் கணவன்: என்ன மாமா! உடம்பெல்லாம் சௌக்கியமா?

பாமாவின் கணவன்: மாமா! அப்பா, அம்மா சாயங்கால வண்டியிலே வராளாம்! .....

[மூன்றாவது குதிரை வண்டி வந்து நிற்கிறது. நாகராஜனின் மைத்துனன் நரசிம்மனின் குடும்பம் இறங்குகிறது.]

நரசிம்மன்: (உள்ளே வந்து கொண்டே) அத்திம்பேர்! என் கடுதாசி வந்ததோல்லியோ? உங்களை ஸ்டேஷனிலேயே எதிர் பார்த்தேன்! பரவாயில்லை!

[உள்ளே போகிறார்கள். அதே தெருவாசியான சிவசைலம் கையில் நான்கைந்து கடிதங்களுடன் வருகிறார்.]

சிவசைலம்: மிஸ்டர் நாகராஜன்! பெரிய தவறு நடந்திருக்கையா!

நாகராஜன்: (மெதுவாக) ஏன்? இவர்களெல்லாம் உம்ம வீட்டுக்கு வர வேண்டியவர்களா? கூட்டிக் கொண்டு போம். எனக்கு ஆட்சேபனை இல்லை.

சிவசைலம்: (அதைக் கவனியாமல்) உம்ம வீட்டு நம்பர் அறுபத்தி ஏழுதானே?

நாகராஜன்: ஆமாம்! அதிலே என்ன சந்தேகம் வந்தது இப்போ?

சிவசைலம்: சந்தேகம் எனக்கில்லே. என் வீட்டு நம்பர் எண்பத்தி ஏழு. நான் பத்து நாட்களாய் ஊரில் இல்லே. திறந்திருந்த ஜன்னல் வழியாக உம்முடைய வீட்டுக்கான அத்தனை கடுதாசிகளையும் தபால்காரர் என் வீட்டுக்குள் போட்டிருக்கிறார்! இந்தாரும்!

நாகராஜன்: இந்தக் கடுதாசிகளை மாத்திரம் தானா போட்டிருந்தார். கூட ஏதாவது கரன்சி நோட்டுக்களையும் போட்டிருக்காரா பாருமே!....... தபால்காரர் புதிசோ இந்தத் தெருவுக்கு!

சிவசைலம்: (போய்க் கொண்டே) ஆசாமி பழையவர்தான்! அவர் போட்டிருக்கும் மூக்குக்கண்ணாடி புதிசு போலிருக்கு!.....

நாகராஜன்: (எரிச்சலுடன்) டேய் கப்பு...

கப்புசாமி: (உள்ளிருந்தே) தபால்காரர் தானே ... தெருவிலே வந்தால் நானே கூப்பிட்டு விசாரித்துக் கடுதாசியை வாங்கறேன், நம்பர் பிசகாமல்! உங்களுக்குச் சில்லறை சில்லறையாகக் கோபம் வர வேண்டாம். மொத்தமாக வந்தால் போதும் என்றுதான் நான் நின்னையிலிருந்தே அத்தனை கடுதாசிகளையும் வாங்கி, சிவசைலம் வீட்டுக்குள்ளே போட்டுவைத்தேன்! ஆனால் விஷயம் எல்லாம் எனக்குத் தெரியும்!

[நாகராஜன் தலைசுற்றி உட்காருகிறார்!]

சர்வாலங்கார பூஷிதையாய்ப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரஜனியை ஓரக்கண்ணால் ஒருமுறை பார்த்தான் 'கம்பன்' கனகசபை. அப்பப்ப .... என்ன அழகு! எங்கோ ஒரு ராஜ குடும்பத்தில் பிறந்து யாரோ ஓர் இளவரசனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள், தவறுதலாய்த் தன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாளோ என்று தான் அவனுக்கு நினைக்கத் தோன்றியது. அதே சமயம் ஓர் இன்பப் பூரிப்புக்கும் ஆளானான். பதினைந்து தினங்களுக்கு முன்பு தான் அவளை அவன் பார்த்தது. திருமணப் பேச்சு நடந்தது எல்லாம். அதற்கு முன்? வாழ்நாள் முழுதும் தனிக் கட்டையாகவே இருக்கப் போவதாகச் சவால் விட்டுக் கொண்டிருந்தவன் தான் கனகசபை. எவ்வளவோ பேர்கள் பெண் கொடுக்க வந்தார்கள். அவன் தாயும் ஒரு சில பெண்களை ரொம்பவும் சிபாரிசு செய்தாள். ''இந்த ஜென்மத்தில் நான் எவளையும் கைப்பிடிக்க மாட்டேன்'' என்று உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தான். கடைசியாக ரஜனியைக் காண்பித்து, ''என்னடா சொல்கிறாய்?'' என்றாள். அவன் தலை அசைந்து கொடுத்தது. உதடுகள் 'சரி' என்று முணுமுணுத்தன.

அன்னையின் நல்வாழ்விலே அவனுக்குத்தான் எவ்வளவு அக்கறை....?

கல்யாணக் கூடம் களை கட்டிக் கொண்டிருந்தது. இன்னும் அரை மணியில் ரஜனியின் கழுத்தில் கனகசபையின் திருமாங்கல்யம் மின்னப் போகிறது. ஆனால், அப்பொழுதே கனகசபையின் சிந்தையில் மின்னலும் இடியும் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. அது மட்டுமில்லை; ஓர் எக்காளச் சிரிப்புடன் ஒரு குரல் அவனைப் பரிகாசம் செய்து கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை மறந்தான். சூழ்நிலையை மறந்தான். ரஜனியை மறந்தான். வெறி பிடித்தவன் போல் எழுந்து நின்று கொண்டு ''எனக்குக் கல்யாணம் வேண்டாம். இதை உடனே நிறுத்துங்கள்!'' என்று இரைந்து கத்தி விட்டு 'விர்'ரென்று மாடிப் பக்கம் போய் விட்டான்.

ஒரு விநாடியில் அந்தக் கூடமே கலகலத்து விட்டது. மந்திரகோஷம் செய்து கொண்டிருந்த சாஸ்திரிகள் வாயடைத்துப் போனார். கூடியிருந்தவர்கள் ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இரண்டு கைகளாலும் கழுத்தில் தொங்கிய மாலையைப் பிடித்தவாறு மணப் பலகையில்

தேவகியின் சபதம்..

ஸ்ரீரங்கம் நரசிம்மன்



அட்டைப்படக் கதை

அவன் பார்த்த அதே சமயம் ரஜனியின் மையிட்ட மலர் விழிகளும் எதிர்கால இன்ப வாழ்வைப் பற்றி என்னென்னவோ பேசிக் கொண்டன.


''அண்ணா! மந்திரத்தைச் சொல்லு; அப்புறம் மன்னியைப் பார்க்கலாம்!'' என்று தேவகியின் குரல் கேட்டுத் திரும்பினான். தேவகி சிரித்துக் கொண்டே போய் விட்டாள். அவளுக்கு எவ்வளவோ ஜோலி! வருகிறவர்களைக் கவனிக்க வேண்டும்; வேண்டிய சாமான்களை எடுத்துக் கொடுக்க வேண்டும். இடையிடையே தமையனின் திருக் கல்யாண மகோத்ஸவக் காட்சியைக் கண்குளிரக் காண வேண்டும். அவளுக்குத் தான் எவ்வளவு மகிழ்ச்சி! அவள் முகத்தில், நடையில், பேச்சில் எல்லாம் ஒரு தனி ஆனந்தம் குடி கொண்டிருந்தது.

கனகசபையின் கவனம் தங்கை தேவகியிடம் திரும்பியது. யார் முகத்திலும் காணாத ஒரு பிரகாசம் அவள் முகத்தில் ஒளி வீசியது.

எழுந்து நின்று கொண்டு கனகசபை சென்ற திக்கை வெறித்துப் பார்த்தாள் ரஜனி. அந்தக் கல்யாணக் கூடமே சுழலத் தொடங்கியது. அங்கே உட்கார்ந்திருப்பவர்கள் அனைவரும் சுற்றிச் சுற்றி வந்தனர். அவள் விழிகளும் சுழலத் தொடங்கின. அவளே சுழன்று சுழன்று வந்தாள். ஆனால் விழவில்லை. தன்னைச் சமாளித்துக் கொண்டு மெல்ல நடந்தாள் – கனகசபை போன வழியில். அவளுக்குத் துணையாக அவளைத் தாங்கியது போல் தேவகியும் கூடச் சென்றாள்.

மாடிக்கு வந்த கனகசபை ஒதுக்குப் புறமாயிருந்த ஓர் அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிடாமல் வெறுமனே சாத்திவைத்துவிட்டு பிரம்பு நாற்காலி ஒன்றில் சுழந்து மாலையுடன் உட்கார்ந்தான். கதவை வேகமாகத் தள்ளிக் கொண்டு பின்னாலேயே வந்த அவன் தாயார் ''என்னடா இதெல்லாம்?'' என்று கேட்கும் பாவனையில் அவன் முன் நின்றாள்.

''அம்மா! நான் கல்யாணம் செய்து கொள்ள முடியாது!'' என்று குழந்தைகள் 'பள்ளிக்கூடம் போக முடியாது' என்று



அடம் பிடித்துச் சொல்லுமே, அதைப்போலக் கூறினான்.

''என்னசொன்னே? முடியாதா?''

''முடியாது!''

''ஏன் முடியாது?''

''எனக்கு வேண்டாம்!''

''உனக்குப் பைத்தியம் கித்தியம் ஏதாவது பிடித்திருக்கா என்ன? கல்யாணம் வேண்டாமென்றால் அதை எப்பொழுது சொல்லுவது?'' என்று அதட்டுவது போலக் கூறியவாறு அவன் தலையைப் பிடித்து நிமிர்த்தினாள் தாயார். அதற்குள் தேவகியும் உள்ளே வந்தாள். ரஜனி அறைக்கு வெளியே கதவில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தாள்.

''நான் கல்யாணம் வேண்டாமென்று தானேம்மா சொல்லிக் கொண்டிருந்தேன்? நீதானே என்னைத் தொந்தரவு செய்தாய்?''

''அதற்காக?''

''அம்மா! உன் காலில் விழுந்து கெஞ்சுகிறேன்; தயவு செய்து இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடேன்....''

''என்னடா உளறுகிறாய்? இவ்வளவுக்குப் பிறகு இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் அந்தப் பெண்ணின் கதி என்ன ஆவது? ஒருத்தி வாழ்வைப் பாழ் செய்தாய். அது போதாதா? இன்னொரு பெண்ணின் வாழ்வையுமா நாசமாக்குகிறாய்? நீ ஏன்டா என் வயிற்றில் வந்து பிறந்தே?''

என்று பெற்ற வயிற்றில் பளீரென்று அறைந்து கொண்டாள் தாயார்.

'ஒருத்தி வாழ்வைப் பாழ் செய்தாயே அது போதாதா?' என்ற தாயின் கேள்வி அவன் நெஞ்சிலே வேலாகப் பாய்ந்தது.

உண்மைதான். ஏற்கனவே ஒருத்தியின் வாழ்வைப் பாழ் செய்து விட்டான்.

ஆனால் வேண்டுமென்று செய்தான்?

அதுவும் சொந்தத் தங்கையின் வாழ்வை ஒருவன் வேண்டுமென்று பாழ் செய்வானா?

தேவகியிடம் அவனுக்குத் தான் எவ்வளவு பாசம்...!

கனகசபைக்குக் கொஞ்சம் நாடகப் பித்து உண்டு. மாதம் இரண்டு அமெச்சூர் நாடகங்களிலாவது பங்கெடுத்துக் கொள்வான். நல்ல நடிகன் என்றும் பெயர் வாங்கியிருந்தான். அவனுக்குக் கொடுக்கப்படும் பாத்திரத்தை நன்கு உணர்ந்து அந்தப் பாத்திரமாகவே அவன் மாறி விடுவான்.

ஒரு சமயம் கிருஷ்ண லீலா நாடகம் போட்டார்கள். அதில் அவனுக்கு அளிக்கப்பட்ட

வேஷம் கம்ஸன்— கம்ஸனின் சகோதரி தேவகியின் பாகத்துக்கு யாரைப் போடுவது என்ற பிரச்னை எழுந்தது.

'தன் தங்கை தேவகியையே நடிக்கச் செய்தாலென்ன?'' என்று நினைத்தான் கனகசபை. அவன் தாயார் மறுத்தாள்.

''கல்யாணத்துக்கு இருக்கும் பெண்ணை மேடையேற்றினால் நாளைக்கு எவன் அவளை மணந்து கொள்வான்? உன் நாடகப் பித்து உன்னுடனேயே இருக்கட்டும். அவளைக் கெடுக்காதே....'' என்று கடிந்தாள்.

''நாடகத்தில் நடிப்பதால் ஒன்றும் பெயர் கெட்டு விடாதம்மா .... அதுவும் யாரோடு நடிக்கப் போகிறாள்? எனக்குத் தங்கையாக வரப் போகிறாள்! வேண்டுமானால் நந்தகோபர் வேஷத்துக்கும் ஒரு பெண்ணையே ஏற்பாடு செய்து விடுகிறேன் ....'' இன்னும் என்னவெல்லாமோ சமாதானம் சொல்லி ஒருவழியாக அம்மாவைச் சம்மதிக்கச் செய்து விட்டான்.

நாடகம் நடந்தது. கம்ஸன் வேஷம் கனகச்சிதமாக அவனுக்குப் பொருந்தியிருந்தது. தேவகியின் திருமணத்தை முடித்து விட்டு அவளையும் அவள் கணவர் நந்தகோபரையும் ரதத்தில் வைத்து ஆனந்தமாகப் பவனி வந்து கொண்டிருந்தான் கம்ஸன்.

இடி இடித்தது. வானம் மின்னியது. கலகலவென்று ஒரு நகைப்பொலி கேட்டது. ''கம்ஸா!'' என்றது ஒரு குரல். கம்ஸன் நாலா திசையிலும் பார்வையைச் செலுத்தினான். குரலுக்குடையவர்கள் யாரையும் காணவில்லை. சரீரத்துடன் அவன் முன்பு அப்படி அவன் பெயரைச் சொல்லி யாராவது அழைக்க முடியுமா? ஆகவே, சரீரமில்லாத அசரீரி பேசிற்று: ''கம்ஸா! என்னே உன் ஆனந்தம்! என்னே உன் மகிழ்ச்சி! எவளை ரதத்தில் வைத்து உல்லாச பவனி வருகிறாயோ, அவளுடைய வயிற்றில் பிறக்கப் போகும் பிள்ளை தான் உனக்கு எமன்!! ஹஹ்ஹஹா......'' என்று எக்காளக் குரல் வானத்திலிருந்து வையமெல்லாம் ஒலி பரப்பாயிற்று.

கம்ஸன், கர்ஜித்தான், பதறினான், துடித்தான்.

உருவிய வாளுடன் தேவகியை நெருங்கினான். தேவகி நடுங்கினாள். நாடகம் பார்த்துக் கொண்டிருந்த அவ்வளவு பேரும் நடுநடுங்கினார்கள். நந்தகோபரின் வாக்குறுதிக்குப் பிறகு உருவிய வாள் உறைக்குள் சென்றது.

நாடகம் மேற்கொண்டு கதைப்படி தொடர்ந்து முடிந்தது. எல்லோரும் கனகசபையைப் பாராட்டினார்கள். 'கம்ஸன்' என்ற பட்டப்பெயரும் அவனுக்குக்கொடுத்தார்கள்.

ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு வாரம் காய்ச்சலாகப் படுத்தான் கம்ஸன் கனகசபை. உடலின் உஷ்ணம் நாளுக்குநாள் மிகவும் அதிகமாகிச் சதா பிதற்றிக் கொண்டிருந்தான்.

''கனகசபை!...கனகசபை!....'' என்று அவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நிமிஷத்துக்கொரு முறை அழைத்துக் கொண்டிருந்தாள் அவன் தாயார். அவன் காதுகளில் ''கம்ஸா!....கம்ஸா!....'' என்று தான் யாரோ கத்துவது போலிருந்தது. அதைத் தொடர்ந்து இடிமுழக்கம் கேட்டது. கலகலவென்று யாரோ நகைப்பது கேட்டது. ''கம்ஸா!....எந்தத் தங்கையை ரதத்தில் வைத்து ஆனந்தமாகப் பவனி வந்து மகிழ்ந்து போகிறாயோ அந்தத் தேவகியின் வயிற்றில் பிறக்கப் போகும் பிள்ளை தான் உனக்கு எமன்! ....ஹஹ்ஹஹா....'' என்ற அசரீரியின் குரல் சற்றைக்கொரு தரம் சுர வேகத்தில் உணர்வின்றிப் படுத்திருந்த கனகசபையின் செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருந்தது.

''தேவகி!'' என்று இரைந்து கத்தியவாறு வெறி பிடித்தவன் போல் எழுந்து உட்கார்ந்தான் கனகசபை.

''என்ன அண்ணா!....'' என்று கேட்டவாறு அவன் சமீபம் வந்தாள் தேவகி. எழுந்து உட்கார்ந்தவன் கீழே விழுந்து விடாவண்ணம் அவன் தாயார் தாங்கிக் கொண்டிருந்தாள்.

''தேவகி! எனக்கு எமன் உன் வயிற்றிலா பிறக்கப் போகிறான்? என்னைக் கொல்லவா பிள்ளை பெறப் போகிறாய்? உயிருக்கு உயிரான இந்த அண்ணனையா கொல்லப் போகிறாய்? தேவகி என்னைக் கொல்லாதே! என்னைக்கொல்லாதே தேவகி!'' என்று வாயில் வந்தபடி பிதற்றினான். அவன் குரலில் வேகம், பயம் வேதனை எல்லாமே கலந்திருந்தன.

''என்னடா கனகசபை இதெல்லாம்?...? அவள் ஏன்டா உன்னைக் கொல்லுகிறாள்?'' என்று துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னாள் அவன் அம்மா. தேவகியின் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. தன்னிடம் உயிரையே வைத்திருக்கும் தன் தமையனின் உள்ளத்தில் இப்படி ஒரு விஷம் கலந்து விட்டதே யென்று நொந்து போனாள். ஆறாக் குறையாக, ''ஏன் அண்ணா இப்படியெல்லாம் பேசுகிறாய்?'' என்றாள்

''தேவகி! துரோகி! என்னை ஏன் கொல்லப் பார்க்கிறாய்?'' என்று வெறி பிடித்தவன் போலக் கத்தினான்.

''இல்லை, அண்ணா, இல்லை....நீ என் தெய்வம் அண்ணா! உனக்கு என்னால் எள்ளளவு கஷ்டமும் ஏற்படாது. உனக்காக என் உயிரையே கொடுப்பேன் அண்ணா...!'' என்று அழுது கொண்டே கூறியவாறு தமையனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் தேவகி.

''பொய்! பொய்! நீ என்னைக் கொல்லத் தான் போகிறாய்!....''

''சத்தியமாய் இல்லை, அண்ணா !......உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் இப்படியெல்லாம் பேசாதே அண்ணா! உன் தங்கை நல்லவள் அண்ணா....''

''நீ நல்லவள்; ஆனால் உன் பிள்ளை?...உன் வயிற்றிலே பிறக்கப் போகிறவன் எமன்!... என்னைக் கொல்லப் போகிறவனுக்கு உன் வயிற்றில் இடம் கொடுக்கப் போகிறாயா தேவகி?'' என்று இரைந்தான்.

அண்ணனின் நிலைமையைக் கண்டு விக்கி விக்கி அழுதாள் தேவகி. பிறகு ஒரு நிர்மானத்துக்கு வந்தவளாய், ''அண்ணா! உனக்குத் துளிக்கூட பயம் வேண்டாம்...என் வயிற்றில் பிறக்கும் குழந்தை தானே உனக்கு எமன்? இந்த வயிற்றில் இந்த ஜென்மத்தில் ஒரு குழந்தையும் பிறக்காது! காலமெல்லாம் நான் கன்னியாகவே இருந்து விடுகிறேன்... இது சத்தியம்!....'' என்றாள். அவள் கூறிய விதம்

ஏதோ விளையாட்டுத்தனமாகச் சொன்னதாக இல்லை. புராண காலத்து ஸ்திரீ ஒருத்தி சபதம் எடுப்பது போலிருந்தது. ''தேவகி!'' என்று இரைந்து கத்தி விட்டாள் அவளைப் பெற்றவள். கனகசபைக்குத் தேவகியின் வார்த்தைகள் புரிந்ததோ என்னவோ, அவன் நினைவு தவறி விட்டது. அப்படியே துவண்டு படுக்கையில் விழுந்து விட்டான்.

பிறகு ஒரு வாரம் கழித்துத்தான் அவனுக்குப் பிரக்ஞை வந்தது. அது முதல் அவன் உடம்பும் தேறிக் கொண்டு வந்தது. பத்து தினங்களில் நன்றாக எழுந்து நடக்கத் தொடங்கி விட்டான்.

காய்ச்சலில் படுத்திருக்கையில் அவன் பிதற்றியது, தேவகி சபதம் செய்தது எல்லாவற்றையும் அவன் தாயார் கூறிய போது அதிசயமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது கனகசபைக்கு. இருந்தாலும் தேவகியின் சங்கல்பத்துக்குப் பிராதான்யம் கொடுக்காமல் அதை அலட்சியமாக விட்டு விட்டான்.

பின்னும் தேவகியின் திருமணப் பேச்சை எடுக்கையில் தேவகி பிடிவாதமாகத் தன் முடிவை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டாள்.

''தேவகி! உனக்குப் பைத்தியமா? நான் ஏதோ ஜுர வேகத்தில் பிதற்றினேன்....'' என்று சமாதானம் கூற முயன்றான்.

''இல்லே, அண்ணா! உன்னையுமறியாமல் உன் மனத்தில் அப்படி ஒரு பயம் தோன்றியிருக்கலாம். இப்பொழுது ஒரு வேளை நீ அதை மறந்திருக்கலாம். பின்னால் திரும்பவும் நீ அந்தப் பயத்துக்கு ஆளாகி, இந்தத் தங்கையை வெறுத்தாலும் வெறுக்கலாம். அந்தக் கொடுமையை என்னால் தாங்க முடியாது. அண்ணா....'' என்று கண்களில் நீர் மல்கச் சொன்னாள் தேவகி. கனகசபையின் விழிகளிலும் நீர் திரையிட்டது.

''அம்மா! நீயாவது சொல்லேம்மா....'' என்று அன்னையிடம் பொரிந்து வேண்டினான்.

ஆனால் யாருடைய போதிக்கும் யாருடைய வேண்டுதலுக்கும் இணங்குபவளாயில்லை தேவகி. கடைசியாகக் கனகசபையும் ஒரு முடிவுக்கு வந்தான் — தானும் கல்யாணம் செய்து கொள்வதில்லையென்று.

அவர்களுடைய தாயார் கனகசபை, தேவகி இருவருக்கும் எவ்வளவோ புத்திமதி சொல்லிப் பார்த்தாள். கனகசபைக்குப் பல பெண்களைக் காண்பித்துக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு வேண்டினாள். ஒரு வருஷ காலம் மசிந்து கொடுக்காதவன் ரஜனியைப் பார்த்ததும் ஒரு வழியாகச் சம்மதித்தான். தேவகியின் வாழ்வை மலர வைக்காமல் தான் மட்டும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்றிருந்தவன் திடீரென்று ஒப்புக் கொண்டதற்குக் காரணம் ரஜனியின் அபரிமிதமான அழகுதான்.

சீர்வரிசை வகைகளிலும் எந்தக் குறைவுமின்றித் திருப்தியாகவே செய்திருந்தார்கள்.

தாலி கட்டும் நேரம் வரை சந்தோஷமாக இருந்தவன் சற்றும் எதிர்பாராதவிதமாக எழுந்து போய் விட்டது எல்லோருக்குமே அதிர்ச்சியாயிருந்தது. கடைசி நிமிஷத்தில் கல்யாணம் நின்றுவிட்டதென்றால் எந்தப் பெண்ணுந்தான் அந்த அவமானத்தைத் தாங்க முடியும்? அறைக் கதவிலே சாய்ந்து கொண்டிருந்த ரஜனியின் மைவிழிகள் மடை திறந்தாற் போலக் கொட்டிக் கொண்டிருந்தன. உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை ஓர் உஷ்ணம் பரவி ஒவ்வொரு நரம்பிலும் ஒரு நடுக்கத்தை உண்டுபண்ணியது.

உள்ளேயிருந்து மாமியாராக வரவிருந்தவளின் கோபக் குரல் உரத்துக் கேட்டது.

''இப்ப என்னடா சொல்றே? ஒழுங்காத் தாலி கட்டப் போறயா, இல்லே, இன்னிக்கே எனக்குப் பாடை கட்டப் போறியா? இப்போ இந்தக் கல்யாணம் நின்னுல் அந்தப் பெண் உயிர் வாழ்வாள் என்று நினைக்கிறயா?'' இவ்வளவு கடுமையாக அவன் தாயார் அவனிடம் என்றுமே பேசியதில்லை.

''கல்யாணம் செய்து விட்டால் மட்டும் நாங்கள் சௌக்கியமாக வாழ்ந்து விட முடியுமாம்மா? .... பிரக்ஞையில்லாத போது ஏதோ பிதற்றியேனென்று அதைக் காரணம் காட்டி ஒருத்தி தன் வாழ்வைப் பாழ் செய்து கொண்டால், அது நியாயமாம்மா? எவள் வாழ்வை மலர வைத்துக் கண் குளிரக் காண வேண்டுமோ அவள் வாழ்வைப் பாழாக்கிய அண்ணன் என்ற பழிக்கு என்னை ஆளாகச் சொல்லுகிறயா? அவளுக்கு இல்லாத வாழ்வு எனக்கும் வேண்டாம்!'' என்று கூறியவாறு கழுத்திலிருந்த மாலையைக் கழற்ற முயன்றான் கனகசபை. சட்டென்று தேவகி பாய்ந்து வந்து அதைத் தடுத்தாள். அதே சமயம் வெளியில் கதவில் சாய்ந்து கொண்டிருந்த ரஜனி விடுவிடுவென்று உள்ளே வந்து தேவகியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ''மனமிரங்கி எனக்கு வாழ்வு அளிக்க மாட்டீர்களா?'' என்று கெஞ்சினாள். அவளைத் தூக்கி நிமிர்த்தியவாறு ''நான் என்ன செய்ய முடியும் மன்னி?'' என்று கேட்டாள் தேவகி.

''நீங்களும் ஒருவரை மணந்து உங்கள் அண்ணனை மகிழ்விப்பதாகச் சொல்லுங்கள்....''

''கன்னியாக இருப்பதாகச் சத்தியம் செய்திருக்கிறேனே!....''

''ஒருத்தி வாழ்வுக்காகச் சத்தியத்தை மீறினால் ஒன்றும் தோஷமில்லை. அதுவே ஒரு பெரிய தியாகமாகக் கடவுள் நினைப்பார். தயவுசெய்து சொல்லுங்கள். இல்லாவிட்டால் உங்கள் காலடியிலேயே இந்தப் பிராணனை விட்டு விடுவேன்....'' என்று தேவகியின் முகத்தைப் பிடித்துக் கொண்டு பிரார்த்தித்தாள் ரஜனி. ''தேவகி, உனக்கு இரக்கமில்லையா?'' என்றான் கனகசபை. ''சரியென்று சொல்லும்மா........'' என்றாள் பெற்றவள்.

''ஒரு வேளை அண்ணனின் பயம் நிஜமாகத்தான் மெய்யாகி விட்டால்?....''

''பயப்படாதே தேவகி. நான் நூறு ஆயுசு இருப்பேன்....'' என்றான் கனகசபை.


''என் மாங்கல்ய பலம் அவரைக் காப்பாற்றும். யோசிக்காமல் சொல்லுங்கள்'' என்று வேண்டினாள் ரஜனி.


ஒரு வினாடி யோசனைக்குப் பிறகு தேவகியின் தலை அசைந்தது.



எங்கும் கலப்படம்

குண்டுமணி







காட்சி 1

[சென்னை பனகல் பூங்காவில் இரு வாலிபர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ரேடியோ அதுபாட்டில் அலறிக் கொண்டிருக்கிறது.]

ராமு: எனக்கு உலகமே வெறுத்துப் போச்சுடா!

நாராயணன்: ஏன்டா! நீ காதலித்த பெண் உன்னைக் கைவிட்டு விட்டாளா?

ராமு: ஆமான்டா! அவளுக்கு வேறு இடத்தில் கலியாணமாகப் போகிறது. அவ ளில்லாமல் என்ன வாழ்க்கை? உயிரையே விட்டுவிடலாம்னு தோணுது!

நாராயணன்: அட, போடா! அதை விட்டுத் தள்ளு! போனதை நினைத்து வருத்தப் படாதே. 'கன்னராவிக் கபே'யில் காப்பி, டிபன் சாப்பிடலாம், வா! உன் வருத்தத்துக்கு நிருவேண கதி மோட்சம் கிடைக்கும்!

ராமு: ஐயய்யோ! நான் வரலே! எனக்குப் பயமா யிருக்கு! என்னை ஆஸ்பத்திரியிலே படுக்கப் போடணும்னு எத்தனை நாளா வேண்டிக் கிட்டிருக்கே?

நாராயணன்: சித்தே முந்தி உயிரை விடணும்னு சொன்னியே. உன் வைராக்கியம் இவ்வளவுதானா?

ராமு: நான் இன்னிக்கே ரயிலேறி ஊருக்குப் போய், மாமா பெண்ணையே கலியாணம் முடிச்சுண்டு கையோடு அழைச்சிண்டு வந்துடறேன்..... இந்தக் கன்னராவிக் கபேயிலே போய்ச் சாப்பிட்டா ஆள் குளோஸ்தான்!

நாராயணன்: குடியிருக்க வீடு எங்கே பார்த்திருக்கே! எனக்கும் ஒண்டிக்க ஒரு சின்ன ரூம் கொடுத்துடு. கலியாணமாகியும் பிரம்மச்சாரியா யிருக்கும் நானும் ஊருக்குப் போய் அவளைக் கையோடு அழைச்சிண்டு வந்துடறேன்.

காட்சி 2

[சின்னஞ்சிறு கிராமம். வாசல் திண்ணை யில் அமர்ந்து இரு முதியவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

சங்கரய்யர்: என்ன சாம்பசிவய்யர்வாள்! உம்ம பிள்ளை ராமு பட்டணத்திலிருந்து வந்திருக்கிறானாமே?

சாம்பசிவய்யர்: அது மட்டுமா? இன்னும் இரண்டு நாட்களில் முகூர்த்தம் வைத்துக் கலியாணத்தை முடித்து அவளுடன் உடனே பட்டணத்துக்குப் போகவேண்டுமாம்!

சங்கரய்யர்: பெண்....?

சாம்பசிவய்யர்: இத்தனை நாளும் வேண்டாம்னு சொன்ன மாமா பெண்ணையே கலியாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லிட்டான்.

சங்கரய்யர்: சாம்பசிவய்யர்வாள்! காலம் வந்தால் எல்லாம் தானே நடக்கும்னு சொன்னேனே, பார்த்தீரா?

சாம்பசிவய்யர்: கலப்படக் காலம் வந்தாச்சுன்னு சொல்லுங்கோ! பட்டணத்திலே ஹோட்டல்லே பையன் சாப்பிட்டுண்டிருந்தானோல்லியோ? இப்ப உணவுக் கலப்படத்தினாலே உணவே விஷமாகிப் பல பேர்கள் ஆஸ்பத்திரியிலே கிடக்கிறார்கள்! பையன் நாலுநாள் பட்டினி கிடந்து விட்டு ஊரைப் பார்க்க ஓடிவந்திருக்கான்!

சங்கரய்யர்: ஓஹோ! அதுதான் காரணமா? பயந்து போய்க் கலியாணத்தைப் பண்ணிக்க வந்துட்டானா? அதுதானே பார்த்தேன்....! [இருவரும் சிரிக்கிறார்கள்.]

காட்சி 3

[கிராமத்தில் இரு பெண்மணிகள் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

சேஷி: ஏன்டி, மீனு! கடைசியிலே உன் பெண்ணுக்கு விடிவு காலம் வந்துட்டுதே!

மீனு: ஆமாண்டியம்மா! போன ரவிவிலே மாப்பிள்ளை நாராயணன் திடீரென்று வந்தான், இப்பவே பெண்ணை அழைச்சின்டு பட்டணம் போகணும்னு ஒரே பிடிவாதம் செய்கிறான்....!

சேஷி: பட்டணத்திலே நாலைந்து வருஷமாக வீடு கிடைக்கலேன்னு சாஸ்திரப்பு சொல்லிக் கொண்டிருந்தானே. இப்போது கிடைச்சுடுத்தாமா? இல்லே ஹோட்டலிலே சாப்பிட்டுண்டு....

மீனு: வீடு கிடைச்சுதோ, என்னவோ, அம்மா? எனக்குத் தெரியாது. ஹோட்டலிலே சாப்பிடறதுக்கும் பயந்துண்டுதானே மாப்பிள்ளை இவளை அழைச்சின்டு போக வந்திருக்கான்....?

சேஷி: பேப்பர்லே என்னவோ போட்டிருக்கான்னு சொன்னுளே, அதனுல் விளைந்த விளைவா? சரி, சரி!

காட்சி 4

[சென்னை ஹோட்டல் முதலாளி ஒருவர் வீட்டில் அவரும் அவர் மனைவியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

ஹோட்டல் முதலாளியின் மனைவி: ஏன்னு! ஹோட்டல்லே நீங்க சாப்பிட்டுட்டு எனக்கும் கொண்டு வருவீங்கன்னு பார்த்தா வெறும் கையுடன் வர்றீங்களே ?

ஹோட்டல் முதலாளி: நீ சமைத்துச் சாப்பிடணும்கிற ஆசையிலுலே இன்னிக்கு வந்திருக்கேன்....

மனைவி: இத்தனை நாட்களில்லாமல் இன்னிக்கு மட்டும் என்ன இத்தனை கரிசனம்?

ஹோ. மு. : ஹோட்டலிலே தயாராகிய சாப்பாடு இட்டிலியிலே பல்லி, கரப்பான் பூச்சி கலந்து கிடக்கிறதுன்னு பத்திரிகையிலே போட்டிருக்கு. எனக்கும் பயமாயிருக்கு....!

ஹோ. மு. மனைவி: (கண் கலங்க) அப்படியா? என்மேலே பிரியப்பட்டுத்தான், என் சமையலுக்கு ஆசைப்பட்டுத்தான் வந்தேன்னு சொன்னேளே, அது அவ்வளவுதானு?

ஹோ. மு. : ஹோட்டல்லே போனுத் தலையை உருட்டுறாங்க.... இங்கே வந்தா நீ தலையை உருட்டறே. நம்ம பிழைப்பு தர்மசங்கடமாப் போச்சு. எனக்குச் சாப்பாடு போடப் போறயா, இல்லையா ?


ஹோ. மு. மனைவி: வீட்டிலே சமையல் பண்ணினு மட்டும் என்ன குறைச்சல்? வீட்டுச் சாமான்களிலே கலப்படமில்லையா? வாங்குகிற உணவுப் பொருள்களிலேயும் பூச்சி மருந்துகளை அடித்து விஷப் பொருள்கள் கலந்திருக்கும்னு எல்லாரும் சொல்ரு.


ஹோ. மு. : மருந்துகளிலேதான் கலப்படம்னு, உணவுப் பொருள்களிலேயும் கலப்படம். கடையிலே குற்றம் எங்க தலைமேலே விடியறது..... என்ன செய்யறது? வீட்டிலே சாப்பிடறதும் ஆபத்துத்தானு?

மனைவி: என்றைக்கு எல்லார் மனசும் கலப்படமில்லாம தங்கமா மாறுதோ, அப்பத்தான் கதிமோட்சம்!

ஹோ. முதலாளி: இது கலப்பட யுகமாச்சே? அது நடக்குமா? அடி தங்கமே! இப்ப பட்டினி கிடப்பதே நல்லதுன்னு சொல்லு.

மனைவி: இன்னிக்கு ஏகாதசிதான். நமக்குப் புண்ணியம் உண்டு!




அட கடவுளே! படிப்பிலே தான் ஸைபர்! என் நிறையிலேயுமா ஸைபர்!
யமலோகம்
"சார்! சார்! அந்த ஹோட்டலில் போய்ச் சாப்பிடாதீங்க! உணவில் விஷம் கலந்திருக்கு."
"அட! நான் சாப்பிடவில்லை ஐயா! எலிப் பொறிக்கு வடை வாங்கப் போகிறேன்!"
யமகிங்கரன்: எமலோகத்திற்கு வந்து இவ்வளவு சந்தோஷமாகவும் ஜாலியாகவும் புதிதாக வந்தவர் இருக்கிறாயே எப்படி? இவர் பூலோகத்துக்கே ஐயோ பாவம்! போனதில்லை போல இருக்கு!
"குதிரைப் பந்தயத்தில் வைத்து பத்தாயிரம் ரூபாய் வந்ததாக முந்து சொன்னானய்யா."
"என்னிடம் இருபதாயிரம் என்று சொன்னானே!"
"என்னை விட நீங்க இரண்டு பங்கு மடையன் என்று நினைச்சிருக்கான்!"
"ஏய்! பந்தைத் தடுத்து நிறுத்துவதற்கென்ன?"
"அப்ப அந்த வலை பின்னே எதுக்கய்யா இருக்கு?"
சாமா



ஏழு வைட்டமின்கள்
சேர்ந்தது, ஏற்றமிகு அமுல் பாலுணவு
Amul
புரதச்சத்து நிறைந்த அமுல் பாலுணவு வைட்டமின் ஏ, பி$_1$, பி$_2$, பி$_6$, சி, டி ஆகிய சத்துக்களும், நியசினமைடும் கொண்டது. இந்த வைட்டமின் சத்துக்கள் சீரிய, ஆரோக்கியமிக்க வளர்ச்சிக்கு உதவுவதோடு உங்கள் மழலைச் செல்வத்தை நோயிலேயிருந்து காத்திடுகின்றன.
தயாரிப்பாளர்கள்:
கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாப்பரேடிவ் மில்க் ப்ரொட்யூசர்ஸ் யூனியன் லிட்.
அகில இந்திய விநியோகஸ்தர்கள்: VOLTAS வோல்டாஸ் லிமிடெட்.
ASP/ABF-24 TAM

தெளிவு

ஏ.கே. பட்டுசாமி

சிறை வாசலில் ஒரு போலீஸ் லாரி நிறுத்தப்பட்டிருந்தது. கைவிலங்குகளோடு அவனைக் காவலர்கள் வெளியே அழைத்துவந்தனர்.

உள்ளே வியாபித்திருந்த இருளுக்கும் வெளியே பரவியுள்ள ஒளிக்கும் எத்தனை வேறுபாடு! உள்ளம் ஒளி பெறாத வரையில் புற வெளிச்சம் பெரிதாகத் தோன்றுவது இயற்கைதானே !

''ஏறுங்க, சாமி! கோர்ட்டுக்கு நேரமாவுது!'' என்று துரிதப்படுத்தினான் காவலன். அவன் வண்டியில் ஏறிக் கொண்டான். போலீஸ்காரர்களும் அருகே அமர்ந்ததும் லாரி புறப்பட்டது.

''சிவ சிவ சிவா!....''

யார் அவனைக் கூப்பிட்டது?

எதிரே விசாலமான குளம். நீர்த்துறையில்..நெற்றியில் நீற்றுப்பூச்சும் கையிலே ஜபமாலையுமாக ஒரு வயோதிக ஸ்திரீ! அவனது அன்னையா? அல்ல, அவளைப் போன்ற வேறு யாரோ! ஆண்டவனை அழைக்கின்றாள்!

குளக்கரையிலே சிறு பிள்ளைகளின் ஆரவாரம். இரண்டு சிறுவர்கள் ஒருவரையொருவர் ஆவேசமாகத் திட்டி அடித்துக் கொண்டனர். ஏழெட்டுப் பேர்கள் கூச்சலிட்டு அவர்கள் இருவரையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர்.

எத்தனை மிருகத்தனம்! மிருகத்தனமா? அவனை விடவா இவர்கள் பொல்லாதவர்கள்! சிறுவனாக வீதியில் துள்ளித் திரிந்த காலத்தில்.... தெருப்பிள்ளைகளுக்கு அவனைக் கண்டாலே நடுக்கம்! 'முரடன்! உதவாக்கரை!' என்று ஊர் முழுதும் அவனைத் தூற்றியது. ஒரு நாளாவது ஊர்ச் சண்டையை விலைக்கு வாங்காமல் இருக்க மாட்டான். பெற்றவளுக்குத் தினமும் தலைவலிதான். என்றாலும் அவள் மனம் கேட்குமா ?

''என் குழந்தை நல்லவன்! அவனைக் கண்ணில் காணவொட்டாமல் கரிக்கிறீர்கள் ! தகப்பனை இழந்தவன் என்பதால் கேட்பாரில்லை என்று எண்ணி விட்டீர்களா?'' என்று அவர்களோடு வழக்காடி அனுப்பி விட்டு மூலையில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழுவாள். அவன் மெதுவாக அவள் அருகே சென்று ஒன்றுமே அறியாதவன் போல அவளது தலையைப் பிடித்து நிமிர்த்தி, 'அம்மா!' என்று அழைப்பான். அந்த ஒரு சொல் போதும் அவளுக்கு! கண்களில் நீர் பொங்க அப்படியே அவனை அணைத்துக் கொண்டு, ''நீ! நீ!....'' என்று மேலே பேசமாட்டாது திணறுவாள்.

'இனிமேல் ஒழுங்காக இருப்பேனம்மா!' என்பான் அவன். ஆனால் அதன்படி நடந்தானா? அடுத்த ஒரு மணி நேரத்தில் தெருவே அமளிப்படும்; தோப்புக்கள் அழியும். அதைத் தொடர்ந்து வீட்டு வாசலில் சீறிப் பாயும் ஜனத் திரள்! மீண்டும் அந்தத் தாயுள்ளத்தின் புலம்பல்!....

அன்று நடந்த அந்தப் பயங்கரச் சம்பவம் இவற்றையெல்லாம் தூக்கியடித்துவிட்டது. மாந்தோப்பில் சில சிறுவர்கள் பம்பரம் விளையாடிக் கொண்டிருந்தனர். அவனைச் சேர்த்துக் கொள்ள மறுத்தனர். அவனுக்கு வந்த கோபத்தில் அவர்களது பம்பரத்தின் மேல் தனது பெரிய பம்பரத்தால் ஓங்கிக் குத்தினான். கோடி வீட்டுப் படையாச்சியின் மகன் தங்கவேலு ஆத்திரத்தோடு அவனது பம்பரத்தைத் தூக்கி அருகிலிருந்த கிணற்றில் வீசினான். அவ்வளவுதான் ! அவனுக்கு வெறியே பிடித்து விட்டது. அந்தச் சிறுவன் புலி போலப் பாய்ந்தான். மற்றவர்கள் ஓடி விட்டனர். கண்ணிமைக்கும் நேரத்தில் தங்கவேலுவை அப்படியே அலாக்காகத் தூக்கி அந்தக் கிணற்றில் எறிந்துவிட்டான் !

நல்ல காலம்! தோட்டக்காரன் மட்டும் கிணற்றில் இறங்கிக் காப்பாற்றியிராவிட்டால் தங்கவேலு பிணமாகியிருப்பான் !... அன்று அவனது வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பம் !

ஆம், இந்தச் சம்பவம்தான் அவனை அத்வைத ஆசிரமத்தில் சேர்ப்பித்தது.

''இனி இந்த முரட்டுப் பிள்ளையை வைத்துக் கொண்டு ஊரில் இருக்கவே கூடாது!'' என்று பிடிவாதமாக உறுமியது ஜனக் கூட்டம்! தாய் எவ்வளவோ மன்றாடினாள். காலில் விழுந்து கெஞ்சினாள். அவர்கள் கேட்கவில்லை. கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து அவனை ஊரோரத்திலிருந்த அந்த ஆசிரமத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டனர்.

பரமானந்த சுவாமியார் மிக்க நல்லவர். 'சிவம், சிவம்!' என்று அவன் மீது அன்பைப் பொழிந்தார். வேளை தவறாமல் உணவு! ஆசிரமத்து மற்ற மாணவர்களைப் போல் தியானம் தத்துவ விசாரணை என்ற நிர்ப்பந்தங்களெல்லாம் அவனுக்கு இல்லை. காலையிலும் மாலையிலும் மட்டும் தமிழிலும் வடமொழியிலும் சிறிது பயிற்சி. மற்ற நேரங்களிலெல்லாம் பத்து ஏக்கரா பரப்புள்ள அந்த ஆசிரமத்துத் தோட்டத்தைச் சுற்றி வருவான். விளையாட்டுத் தோழர்கள் இல்லை என்ற குறைதான்! எப்பொழுதாவது ஆகாய வீதியில் நூலறுந்த பட்டங்கள் பறந்து வரும்போது அவனது மனம் ஏங்கும்; வாரம் ஒரு முறைதான் தாயார் அவனைப் பார்க்க வருவாள். நாளடைவில் அவளது வருகையும் குறைந்தது. வர வர அவனுக்கு இதுவும் சகஜமாகியது. கால வேகத்தில் உடல் வளர்ச்சியோடு உள்ளமும் வளர்ந்

தது. ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தன. அப்போது அவனுக்குப் பதினெட்டு வயது!

லாரி ஊர் எல்லையைக் கடந்து அந்த நெடுஞ்சாலையில் விரைவாக ஓடியது. அதோ தூரத்தில்! அத்வைத ஆசிரமம்! தோட்டத்தின் வடகோடியில் ஓங்கி வளர்ந்திருந்த பேரால விருட்சத்தின் நீண்ட கிளைகள் 'வருகிறாயா? வா, வா!' என்று தலையை ஆட்டின. அதன் உச்சாணிக் கிளையில் அமர்ந்திருந்த பருந்தொன்று 'கீங்...' என்று குரலெழுப்பி 'எத்தனை முறை என் கூட்டைக் கலைத்துக் குஞ்சுகளைத் துன்புறுத்தியிருப்பாய்! இப்போது நீயே கூட்டில் அடைபட்டு விட்டாய்!' என்பது போலக் கூவியது.

ஆலமரத்து மேடையின் அருகிலிருந்து வேத மந்திரத்தின் ஒலி தெளிவாகக் கேட்டது. சுவாமியார் மறைந்து விட்டார்; எனினும் அவர் ஆற்றிய பணியைச் சீடர்கள் தொடர்ந்து நடத்துகின்றனர் போலும்!

'அஹம்....ப்ரஹ்....மாஸ்மி....'


அவனது உடல் சிலிர்த்தது. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எதிரொலி கிளம்பியது. வாய் முணுமுணுத்தது.

''அஹம்....ப்ரஹ் மாஸ்மி!''

ஆஹா. இதல்லவா குருதேவரிடம் அவன் கேட்ட முதல் மந்திரம்!

அன்று காலை நேரம். அவன் தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். இடையிடையே ஆலமரத்து மேடை மீது கண்களை மூடி நிஷ்டையில் ஆழ்ந்திருந்த பரமானந்தரை அவன்





வியப்போடு பார்த்தான். மரக்கிளைகளுக் கிடையே பாய்ந்து வந்த பரிதியின் தங்க ரேகைகள் அவரது கள்ளமற்ற முகத்தில் விளையாடிக் கொண்டிருந்தன. நன்றாக முண்டனம் செய்த சிரம். குங்குமப்பூ போன்ற காவியுடை. புத்த பகவானைப் போல் அமர்ந்திருந்தார். தியானம் கலைந்து கண்கள் மலர்ந்தபோது அவரது இதழ்கள் அசைந்தன: ''அஹம்......பிரம்மாஸ்மி!''

அவனது உள்ளத்திலே ஒரு கேள்விக் குறி: புருவங்கள் உயர்ந்தன. சுவாமியாரின் சாந்தமான பார்வை அவன் பக்கம் திரும்பியது.

''சிவம், இங்கே வா!''

அவன் தயங்கிக் கொண்டே வினயமாக அருகே சென்றான்:

''எதற்கப்பா அத்தனை வியப்பு?''

''மன்னிக்க வேண்டும் சுவாமி; பிரம்மம் பிரம்மம் என்கிறீர்களே, எது அந்தப் பிரம்மம் என்று....''

குருதேவர் முறுவலித்தார்.

''நீயாக இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்றுதான் இத்தனை நாட்களும் எதிர்பார்த்திருந்தேன். உன் பெயரென்ன?''

''சிவம் என்பதுதான் சுவாமி!''

''ஆம் சிவம், 'சிவம்' என்றால் என்னவென்று தெரியுமா? 'உயர்வு' என்று அதற்குப் பொருள். அகில புவனத்திலும் சிறந்ததானதும் அறியாததுமான பொருள் ஒன்றே ஒன்றுதான். அதுதான் பிரம்மம் அல்லது பரம்பொருள்! இப்பரம் பொருள் ஞானமயமானது, ஞானத்தை அருள்வது, ஞானத்தினால் உணரப்படுவது. இவ்வுண்மையைத்தான் 'ப்ரக்ஞானம் ப்ரஹ்மம்' என்று சுட்டிக் காட்டுகிறது ரிக் வேதம்!''

''ஞானமென்னும் சிறிய உணர்வு மனிதனிடத்தில் காணப்படுவதல்லவா சுவாமி?''

''ஆம், சிவம்! மனிதனுக்குள்ளே ஞானத்துக்கு ஆதாரமாகத் திகழ்வது ஆன்மா. ஞானத்தை அருள்வதும் ஞானத்தினால் அறியப்படுவதுமான ஆன்மாவே ப்ரஹ்மம்.... ஞானம் சித்தித்தபின் 'நான்' வேறு, ப்ரஹ்மம் வேறு என்ற பாவம் அற்றுப் போகிறது. 'நான் உடலல்ல, மனமல்ல, புத்தியுமல்ல, எல்லாவற்றையும் இயக்கும் ஆன்மாவாகிய பிரஹ்மமே நான்' என்பது விளங்கும். இதையே வேறுவிதமாகக் கூறினால் 'நான் என்பது அந்தப் பிரஹ்மமேதான்' என்று ஆகுமல்லவா? 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்னும் யஜுர் வேதத்தின் மஹா வாக்கியம் இதைத்தான் உணர்த்துகிறது!''

வேதாந்தத்தின் முதற் பாடம் ஆரம்பமாகி விட்டது.

திடீரென்று லாரிச் சக்கரங்கள் கிரீச்சிட்டன. 'பூம் பூம், பூம்!' என்று ஹாரன் பதறி அலறியது. சாலையில் ''ஐயோ!'' என்று ஓர் அலறல். அதிவிரைவாக ஓடிய வண்டி ஒரு பயங்கரக் குலுக்கலுடன் நின்றது.

''என்ன? என்ன?'' என்று கேட்டான் அருகே அமர்ந்திருந்த காவலன். அவனும் வலைக் கம்பிகளினூடே எட்டிப் பார்த்தான். ஆட்டிடையனொருவன் சாலையைக் குறுக்கே கடந்து ஓடிக் கொண்டிருந்தான்.

''நல்ல காலம், கடவுள்தான் காப்பாற்றினார்!'' என்றான் டிரைவர். வண்டி எரிச்சலோடு உறுமிவிட்டு மீண்டும் நகர்ந்தது.

கடவுள்! ஆம், இதைப் பற்றிக்கூடப் பரமானந்தரிடம் அவன் விவாதித்திருக்கிறான்.

''ஆமாம் சிவம், மானிடக் கூட்டினுள்ளே ஆன்ம ஸ்வரூபமாக விளங்கும் பரம்பொருளுக்கு மண்ணிலே கோவில் கட்டிச் சிலை எழுப்பி வணங்குகிறார்களே என்று கேட்கிறாய்! இதில் தவறொன்றும் இல்லை. சகுண பக்தி மார்க்கம் ஞான மார்க்கத்தின் முதல் படி. இதில் உபாஸனாமூர்த்திக்குச் செய்யப்படும் பூஜை ஆன்மார்ப்பணமாக அமைய வேண்டும் என்பது கவனிக்கத் தக்கது'' என்று அவர் கூறியது நன்றாக நினைவிருக்கிறது.

வேதாந்த ஆராய்ச்சி தீவிரமாக முன்னேறியது. இரவு பகலாக அரிய கிரந்தங்களை முறைப்படி மனனம் செய்தான். குருதேவரின் உபதேசங்களைக் கேட்டு ஐயம் தெளிந்தான். உபநிஷத்துக்களும் சாத்திரங்களும் அலசப்பட்டன. கபிலர், ஜைமினி, பதஞ்சலி ஆகிய மகான்கள் கனவிலும் அவனோடு உறவாடினர். அவனது முன்னேற்ற வேகத்தைக் கண்டு ஆசிரமத்திலிருந்தோர் அதிசயித்தனர். தர்க்கரீதியில் அவன் போடும் விதர்க்கங்களையும், தரும் விளக்கங்களையும் கண்டு பரமானந்தரே பாராட்டினார்.

''இதோ எனது பிரதம சிடன்!'' என்று அவர் வாய் விட்டுக் கூறியபோது அவனது உள்ளத்தில் மகிழ்ச்சிக் கடல் ஆரவாரித்தது.

ஆனால் அந்தச் சோமநாதன்? கள்ளமற்ற முயல்களின் கூட்டத்திலே குள்ளநரியைப் போல் ஆசிரமத்தில் அவனும் ஒரு மாணவன். கட்டையான உருவம், கபட்டுப் பார்வை, காரணமற்ற சிரிப்பு, கள்ளக் கும்பிடு! சேச்சே! ஆரம்ப முதலே அக்கயவனை அவனுக்குப் பிடிக்கவில்லை. நள்ளிரவில் பூனை போல் எழுந்து, பதுங்கிப் பதுங்கிச் சாமியாரின் விடுதியைச் சுற்றி வருவது, மெல்ல நழுவி ஆசிரம வேலியைத் தாண்டி மறைவது - இவற்றை அவன் எத்தனை நாட்கள் கவனித்திருக்கிறான்?

அவனது மனத்தில் சங்கை தோன்றியது. எதற்காக இந்த நரித்தனம்? நெஞ்சத்திலே வஞ்சகமிருக்குமோ? குருதேவர் இவனிடமுமல்லவா அன்பைக் காட்டுகிறார்! சலனமற்ற நீர் நிலை சகதியாகி விட்டது. எத்தனை நாட்களுக்குத்தான் உள்ளத்தைச் செருக்கிக் கொண்டு வாளாவிருக்க முடியும்? கடைசியில் ஒரு தினம் தயங்கிக் கொண்டே குருதேவரின் செவிகளில் போட்டு விட்டான்.

பரமானந்தர் சிரித்தார்.

''கயிற்றிலே பாம்பைக் காண்கிறாய் சிவம்! உன் அறிவு விரிந்திருக்கிறது. ஆனால் அகத்திலே தெளிவில்லை. தூய அன்பினால்தான் தெளிவைப் பெற முடியும். அன்புதான் ஆண்டவன், அதுதான் ஆனந்தம். அதுவே மாயையை வளர்க்கிறது.''

கனிவாகச் சொல்லி விட்டார்! அவர் ஆத்ம ஞானி! புலன்களை வென்றவர்! பகைவனுக்கும் அருள் காட்ட அவரால் முடியும். பாய்ந்து வரும் புலியிலும் பரம்பொருளைக் காண்கிற பண்பு அவரிடம் இருந்தது. ஆனால் அவன்? அவன் இன்னும் வெறும் மனிதனாகத்தான் இருந்தான். அவர் கூறியது போல விருப்பு வெறுப்புக்களுக்கு அவனது இதயத்தில் இடமிருந்து கொண்டுதான் இருந்தது. 'தத்வமஸி' என்பதற்குப் பொருள் தெரிந்து விட்டால் போதுமா? உள்ளத்தில் அதன் எதிரொலி கேட்க வேண்டாமா? என்றுதான் அந்தப் பக்குவ நிலை அவனுக்குக் கிட்டுமோ?.....

என்ன முயன்றும் மனம் தெளியவில்லை. சோமநாதனை நினைக்க நினைக்க அது இன்னும் அதிகமாகக் குழம்பியது. கோபம் அதிகரித்தது. வேதாந்த பாடம் ஓடவில்லை. இவ்விஷயத்துக்கு முடிவு கட்டிய பிறகே நிம்மதி ஏற்படும் எனத் தோன்றியது.

''டிரைவரண்ணே, என்ன இன்னுமின்னே புகை கிளம்புது?'' என்று வியப்போடு கேட்டான் போலீஸ்காரன்.

''ரேடியேட்டர் ரொம்பச் சூடாயிடுச்சு; இதோ இந்தக் குப்பத்துக்கிட்டே நிறுத்தித் தண்ணி ஊத்தப் போறேன்'' என்று பதிலிறுத்தான் டிரைவர்.

அவன் ஜன்னல் வழியாகப் பார்த்தான். சாலையை ஒட்டினாற்போல் நாற்பது, ஐம்பது குடிசைகள். ஓர் ஐயனார் சிலை. அதையடுத்து ஒரு சிறிய மளிகைக் கடையும் தேநீர் விடுதி

யும் இவற்றின் பகைப்புலனில் மிகப் பெரிய மாளிகையும் வாழைத் தோப்பும். இதுதான் பனையூர்க் குப்பம்!

சிறு வயதில் எத்தனை முறை இந்தக் குப்பத்தில் கொட்டமடித்திருக்கிறான்? ஆனால் பிற்காலத்தில் இந்தச் சிற்றூர் அவனது வாழ்க்கையில் பெரியதொரு மாறுதலை ஏற்படுத்தப் போகிறது என்று என்றாவது எண்ணியதுண்டா?

நாளுக்கு நாள் சோமநாதனின் அட்டகாசம் கட்டறுத்துக் கொண்டே வந்தது. தோட்டத்திலும் தண்ணீர்த் துறையிலும் காரணமின்றி அவனை வம்புக்கு இழுத்தான். உலர்த்தி வைக்கும் துணிகளைக் கிணற்றில் தூக்கி எறிந்து விடுவான். தொழுவத்திலிருந்த பசுக்களை அவிழ்த்துத் தோட்டத்தில் துரத்துவான். கொஞ்சம் கொஞ்சமாகக் குருதேவருக்கு அவன் செய்து வந்த பணி விடைகளிலும் தலையிட்டு அவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டான். அருமைத் தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட சேயைப் போல் அவன் மனம் ஏங்கியது. கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டு அவரை அந்தத் தூர்த்தன் சுற்றி வரும்போதெல்லாம் அவன் மனம் கொதிக்கும். பொங்கி வரும் ஆத்திரத்தை அப்படியே விழுங்கியவண்ணம் அவன் வெளியே சொல்லமாட்டாமல் தவிப்பதைக் கண்டு சிரித்தான் அந்தக் கயவன்.

"மனத்தில் தெளிவு வேண்டும், அப்பனே! கயிற்றிலே பாம்பைக் காணாதே!"


சந்தேகமில்லை, ஒட்டுக் கேட்டிருக்கிறான்!

அன்று பிற்பகல் வெயில் தணிந்த நேரம். தோட்டத்தின் வட மூலையில் அவன் கீரைக் குப் பாத்தி கொத்திக் கொண்டிருந்தான். வேலிக்கும் அவன் இருந்த இடத்துக்குமிடையே ஆள் உயரத்துக்கு ஆடாதோடைச் செடிகள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. செடிகளுக்கு மறுபுறம் மெல்லிய பேச்சுக் குரல் கேட்டது. பூமியை நோக்கிப் பாய்ந்த மண்வெட்டி அந்தரத்தில் நின்றது.

"மிட்டாதார்.... இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் இரண்டில் ஒன்று முடித்து விட வேண்டும்" என்ற சொற்கள் மட்டுமே அவன் காதில் விழுந்தன.

அவன் மெதுவாகத் தலையை உயர்த்திப் பார்த்தான். வேலிக்கு அப்பால் ஒரு கற்றை மீசைக்காரனின் உருவம் தெரிந்தது. பனையூர்க் குப்பத்தைச் சேர்ந்தவன்! சோமநாதன் திரும்பினான். அவன் சடக்கென்று குனிந்து கொண்டான்.

அவனது உள்ளம் துணுக்குற்றது. அந்த வட்டத்திலேயே மிட்டாதார் என்ற பட்டம் பனையூர்க் குப்பத்து நாகலிங்கத்துக்குத்தான். அதோ வாழைக் கொல்லைக்கு அப்பாலுள்ள மாடி வீடு அவருடையது. கொலை கொள்ளைகளுக்கு அஞ்சாதவர்களும் கொடூரமான வழிப்பறிக்காரர்களும் நிறைந்த வட்டத்துக்கு அவர் முடிசூடா மன்னர். கறை படிந்த நடத்தையுள்ளவர்களுக்கெல்லாம் அக்குப்பம் ஒரு சரணாலயம் என்று கேள்விப்பட்டிருக்கிறான். வந்தவன் நாகலிங்கத்தின் ஆளாகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால் சோமநாதன்! அவனும் அவரது கையாளா? எத்தனை பயங்கரம்!



உபாத்தியாயர்: ஏன்டா அழறே?

பையன்: எனக்குப் பதினைந்து வயதுவரையிலும் நான் இந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்க வேண்டுமாமே சார்!

உபாத்தியாயர்: அட அசடு. அதுக்குப் போய் அழுவானோ?.... நான் என் வயசு முழுவதும் இந்தப் பள்ளிக்கூடத்தில்தானே இருந்தாக வேண்டும். நான் எவ்வளவு அழணும் யோசித்துப் பார்!

அப்போதுதான் நினைவுக்கு வந்தது. சென்ற மாதத்திலொருநாள் திடீரென்று நாகலிங்கம் சுவாமியாரைத் தரிசிக்க வந்தார். ஆச்சரியம்தான், ஒருகால் மனம் திருந்தி விட்டதோ என்றுகூட எண்ணினான். ஆனால் விஷயமே வேறு.

சர்க்கரை ஆலை ஒன்று நிறுவப் போவதாகவும் அதற்காக ஆசிரமத்தின் நிலத்தைத் தமக்கு விற்று விடும்படியும் சுவாமியாரைக் கேட்க வந்தார். நாகலிங்கம் எவ்வளவோ கேட்டுப் பார்த்தார். லட்சம் ரூபாய் வரை தருவதாகவும் கூறினார். பரமானந்தர் இரங்கவில்லை.

"நீங்கள் துறவி! உலகம் புரியவில்லை, உங்களுக்கு! பதினைந்து நாட்கள் அவகாசம் தருகிறேன். பேசாமல் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லையென்றால்...." என்று பேச்சை முடிக்காமலேயே புறப்பட்டு விட்டார் மிட்டாதார்.

இவ்வளவும் அவனாக மறைந்திருந்து கவனித்தவை. சுவாமியார் எவரிடமும் எதுமே கூறவில்லை.


அதற்குப் பிறகு நாகலிங்கம் வரவில்லை. அன்று? இரண்டில் ஒன்று முடிந்துவிட வேண்டுமென்ற அந்தச் சொற்கள்! சந்தேகமின்றி நாகலிங்கம் ஏதோ சதி செய்கிறார்; அதற்குச் சோமநாதன் உடந்தை! பெரியதோர் ஆபத்துக்கான சூழ்நிலை உருவாவதாக அவன் உள்ளம் சங்கையுற்றது. மூளை குழம்பி விட்டது.

மாலையில் கீதை வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அவனுக்கு இருப்புக் கொள்ள

வில்லை. சுவாமியாரிடம் போய்க் காரணம் கூறி எழுந்து செல்லவும் மனமில்லை. அலை பாயும் மனத்தோடு அவன் சஞ்சலத்தில் உழன்று கொண்டிருக்கையில், சுவாமியார் அவனது முகத்தைப் பார்த்தார்.

"பதின்மூன்றும் அத்தியாயம், முக்கியமானது. கவனமாகக் கேள் சிவம்!.... நீ உடலல்ல, ஆன்மா! 'நான் உடல்தான்' என்ற தவறான எண்ணம் நம்மை விட்டுப் போகாத வரையில் துஷ்டர்களின் கொடுமைகள் நம்மைப் பாதிக்கத்தான் செய்யும்!...."

அவன் திடுக்கிட்டான். குருதேவர் எதைக் குறிப்பிடுகிறார்?...



பையன்: நேற்று நான் மூன்று கால்கள் உள்ள கழுதை ஒன்றைப் பார்த்தேன்!

தாத்தா: பார்த்துப் பரிதாபப் பட்டாயா?

பையன்: நான் ஏன் பரிதாபப் படணும்? என்னை விட அதற்கு ஒரு கால் கூடத்தானே இருக்கு?

"உடலை அழிக்கலாம், ஆன்மாவை அழிக்க முடியாது. அதை அழிக்கும் சக்தி உலகில் எந்தப் பொருளுக்கும் இல்லை! மீண்டும் கூறுகிறேன். நீ ஆன்மா! உன்னை யாராலும் அழிக்க முடியாது!"

அவன் வியப்போடு கேட்டான்.

"மரணம் என்பது, ஆன்மா ஓர் உடலை விட்டு இன்னொன்றில் வியாபிப்பதற்கான ஓர் அறிகுறி. அதைக் கண்டு கலங்குவது அறியாமை."

அவனது உள்ளத்தில் அறியாமைதான் நிறைவிட்டிருந்தது. இருள் நீங்கவில்லை. இரவு நெருங்கியது. கலக்கம் இருமடங்காகி உடல் முழுதும் பதற்றம் ஏற்பட்டது. சுவாமியாரை எச்சரித்து வைக்கலாமா? ஏதுமே நிகழாவிடில்? மூளை கொதிப்பேறியது.

கிருஷ்ணபட்சத்து இருள் இயற்கையைக் கவிந்து கொண்டிருந்தது. குருநாதர் உறங்கி விட்டார் போலும். ஆசிரமம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. சுவாமியாரின் குடிலுக்கும் மாணவர் விடுதிக்கும் சுமார் அரை பர்லாங் தூரம் இருக்கும். இடையே இருந்த மாமரத்துக்குப் பின்னால் ஒளிந்திருந்தான் அவன். வெகு தூரத்தில் நகரத்து மாதா கோவில் மணி பன்னிரண்டு முறை ஒலித்து ஓய்ந்தது. இடுப்பில் செருகியிருந்த தோட்டக் கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

காத்திருந்த ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகத் தோன்றியது. மாணவர் விடுதிப் பக்கம் மெல்லிய ஓசை! சோமநாதன் மெல்ல வெளியே வந்தான். ஆசிரமத்தின் வெளி வாசலருகே வண்டிச் சக்கரங்களின் ஒலி கேட்டது. அடுத்து, விளக்கொளியும் தெரிந்தது. அவனது உடல் குப்பென்று வியர்த்தது.

சோமநாதன் சரசரவென்று முன்னேறி வாசலை நோக்கிக் கையை அசைத்தான். கையில் விளக்கோடு ஓர் ஆள் வாயிலைக் கடந்து உள்ளே வந்தான். பிற்பகல் கண்ட அதே மீசைக்காரன்!

இருவருமாகச் சுவாமியாரின் விடுதியை நோக்கி நடந்தனர். அவனது நெஞ்சம் 'திக் திக்'கென்று அடித்துக்கொண்டது. அவர்கள் கவனித்து விடாதபடி சந்தடியின்றி நழுவி அவ் விடுதியின் இடப்புறச் சுவரோரமாகப் பதுங்கினான்.

விடுதிக் கதவு இலேசாகத் தட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து தாழ்ப்பாள் திறக்கப்படும் ஓசை. அவன் எட்டிப் பார்த்தான். வெளியே நின்றவர்களது முதுகுப்புறம்தான் தெரிந்தது. வந்தவன் ஏதேனும் ஆயுதம் வைத்திருப்பானோ! அசம்பாவிதம் ஏதேனும் நிகழுமெனத் தோன்றினால் ஒரே பாய்ச்சலில் அவன் அவர்கள் இருந்த இடத்தை அடைந்துவிட முடியும்.

கற்றை மீசைக்காரன் அழுகைக் குரலை வரவழைத்துக்கொண்டு அவசரமாகப் பேசினான்.

"கும்பிடறேனுங்க சாமி, எம் மவனைப் பாம்பு கடிச்சுச் சாகக் கிடக்கிறாங்க! நீங்க தான் உயிர்ப் பிச்சை கொடுக்கணும்!"

அவனுக்குப் பளிச்சென்று புரிந்து விட்டது. சுவாமியார் பிரசித்தி பெற்ற விஷ வைத்தியரும்கூட. பாம்புக்கடி என்ற பொய்யைச் சொல்லி அவரைக் கடத்திக் கொண்டு போகத் திட்டமிட்டிருக்கிறார்கள்!

"அடடா, அழாமல் சொல்லப்பா, அவனைக் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று சாந்தமாகக் கேட்டது சாமியாரின் கபடமற்ற குரல்.

"இல்லீங்களே, சாமி! பலனே உடம்புங்க, மாரை வேறே அடைச்சு வாயிலே நொரை தள்ளுது. வண்டி கொண்டாந்திருக்கேன் எசமான்! கொஞ்சம் தயவு பண்ணுங்க!"

இனி தாமதிக்கக் கூடாது! இந்த அகாலத்தில் பனையூர்க் குப்பத்துக்குப் போவதானால் ஆபத்து மாத்திரமல்ல; எத்தனை மோசமான இடம் அது! உயிர் தப்பி வந்தால் அபவாதத்தைக்கூடக் கட்டி விடுவார்கள்! எதற்கும் துணிந்தவர்களாயிற்றே!

"வீடு எங்கே இருக்கிறது?"

இதற்குச் சோமநாதன் பதில் கூறினான்.

"அருகேதான் பனையூர்க் குப்பத்தின் சுவாமி. பாவம், எனக்குக் கூடத் தெரிந்தவர். நல்ல மனிதர்."

''அப்படியா? ஒரே நிமிஷம். இதோ வந்து விட்டேன்.''

பரமானந்தர் மருந்துப் பெட்டியோடு வெளியே வருவதற்கும் அவன் சரேலென்று பாய்ந்து வராந்தாவை அடைவதற்கும் சரியாக இருந்தது.

''போகாதீர்கள் குருதேவா! அத்தனையும் பொய்! சோமநாதனின் கட்டுக் கதை....!''

சுவாமியார் திகைத்தார். மற்ற இருவரும் திடுக்கிட்டனர்.

''என்ன சொல்லுகிறாய் சிவம்?....''

சோமநாதன் சமாளித்துக் கொண்டான்.

''பைத்தியக்காரத்தனமாக உளறாதே, சிவானந்தம்! என் மேல் உள்ள கோபத்தை இந்த நேரத்திலா காண்பிப்பது? ஓர் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! முதலில் எனக்கு வழியை விடு!''

''உன் அயோக்கியத்தனம் தெரியும், சோமநாதா! குருதேவரைப் போகவிட மாட்டேன்!'' அவன் குறுக்கே நின்று கொண்டான். சுவாமியாரின் குரலில் கவலையும் கண்டிப்பும் தொனித்தன.

''இன்னுமா இந்தக் குறுகிய புத்தி சிவம்? என்றுதான் உனக்குத் தெளிவு ஏற்படப் போகிறதோ? வழியை மறிக்காதே!''

''முடியாது! குருதேவா, முடியாது கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் இங்கேயிருந்து போகமாட்டேன்! தங்களை நகர விடவும் மாட்டேன்!''

''சிவம்!''

''இல்லை, குருதேவா! தங்களுக்கு அபவாதமும் ஆபத்தும் நேரிடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது!''

அவரது பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான் அவன். காட்டு விலங்கைப் போல உறுமினான் கத்தை மீசைக்காரன்.

மின்னல் மின்னி மறையும் நேரத்திலே சம்பவங்கள் தொடர்ந்தன. சோமநாதன் முகத்திலே கோரம் தாண்டவமாட அவனை நோக்கிக் கைத்தடியை ஓங்கிச் சுழற்றினான். அவன் தன்னையே மறந்தான். குருதேவரின் கால்களை விட்டு விட்டுக் குபீரென்றெழுந்து அவ்வஞ்சகனை நோக்கிப் பாய்ந்த அவனது கையிலே கூர்மையான தோட்டக் கத்தியிருந்தது. மோதப் போகும் நேரத்திலே, ''சிவம், சிவம்!'' என்று கூவிக்கொண்டே குறுக்கே புகுந்து விட்டார் குருநாதர்.

''ஈசுவரா!'' என்று இதயத்தை உலுக்கும் கூக்குரல்! அடுத்த கணம் அந்த உத்தமரின் புனித உடல் அவன் மீது சரிந்தது. கத்தி ஆழப் பாய்ந்து விட்டிருந்தது. குருதி கொப்புளித்து வழிந்து அவனது உடை முழுவதையும் நனைத்தது. அவரை மடியில் கிடத்திய வண்ணம் பித்துப் பிடித்தவனைப் போல் விழித்தான். அடிவயிற்றிலிருந்து ஒரு கதறல்!

''குருதேவா! உங்களைக் கொன்றுவிட்டேனே, பாவி!''

சோமநாதன் நடுநடுங்கிப் போனான்.

''கொலை, கொலை!'' என்று அலறினான் அவன். மாணவர் விடுதியிலிருந்த சீடர்கள் உறக்கம் கலைந்து விளக்குகளோடு ஓடோடி வந்தனர். குழப்பமும் கூச்சலும் கூக்குரலும் மலிந்தன. நாகலிங்கத்தின் ஆள் கூறினான்:

''நான் வண்டியை ஓட்டிக்கிட்டு வழியோரமா திரும்பிக்கிட்டிருந்தேன். இவருன்னு 'ஐயோ, ஐயோ! கொல்லாதே!'ன்னு கூச்சல் கேட்டு வண்டியை நிறுத்திட்டு ஓடியாந்தேன். சாமியாரு பயந்துக்கிட்டுக் கெஞ்சக் கெஞ்ச இவரு கத்தியை ஓங்கிக் கிட்டு இருந்தாரு. இந்தச் சோமு ஐயா, வேறே அங்கேயிருந்து. ''நம்ம சாமியாரு! கொல்லாதே, கொல்லாதேன்னு அடிச்சுக் கிட்டே ஓடியாந்தாரு. நாங்க தடுக்கிறதுக் குள்ளாற இவரு குத்திப்புட்டாரு!''

அவன் மறுத்துக் கூறவில்லை.

குருதேவர் மெல்ல இமைகளைத் திறந்தார். அவரது இதழ்க்கடையில் ஒரு மென்மையான முறுவல் தவழ்ந்தது.

''சிவம்!''

''குருதேவா!.....''

இடைநிறுத்திடையே ஒவ்வொரு சொல்லாகப் பிறந்தது: ''தமஸோ......மா.... ஜோதிர்க....கமய!....''

''ஐயோ, குருதேவா! 'இருளிலிருந்தும் என்னை மீட்டு ஒளியை நோக்கி நடத்து!' என்றல்லவா இதற்குப் பொருள் கூறியிருக் கிறீர்கள்!''

அவரது சிரம் துவண்டு விட்டது. அந்தத் தூய ஆன்மா ஒளியை நோக்கிப் பறந்தது.

அதோ ஆகாய வீதியில் பளீரென்று ஒரு மின்னல் மின்னி மறைந்தது. அதன் பிரதிபலிப்பு அவனது உள்ளத்திலும் வெட்டியது. எங்கோ ஒரு இரை விலகியது!

''இறங்கு!'' என்று பணித்துக்கொண்டே போலீஸ்காரர் வண்டிக் கதவைத் திறந்த போதுதான் அவனுக்கு ஸ்மரணை வந்தது. எதிரே நீதி மன்றக் கட்டடம் காட்சியளித்தது. பனையூர்க் குப்பத்திலிருந்து வண்டி எப்போது கிளம்பிற்று என்றே அவனுக்குத் தெரியாது!

வண்டியை விட்டு இறங்கிய போது அவனது மனத்தில் குழப்பமில்லை. குறுகிய எண்ணமுமில்லை. அத்தனை காலமும் குருதேவர் இடைவிடாது வற்புறுத்தி வந்த அந்தத் தெளிவு அவனது உள்ளத்திலே சுடர்விட்டது! இன்று அவனால் பகைவனிடமும் அன்பு செலுத்த முடியும்!

அவனது குருதேவரை அவன் கொன்று விட்டான். இல்லை, அவரது உடலை அவன் அழித்து விட்டான். எந்த நிலையில் அவன் அந்தப் பாதகத்தைச் செய்ய முடிந்தது என்று எதற்காக வாதாட வேண்டும்? மற்றவர்களையும் இதில் இணைப்பதால் ஏற்படக் கூடிய பயன்? தண்டனையே கிடைத்தால் தான் என்ன? குருநாதரின் உபதேசமொழிகள் தான் அழிக்க முடியாதபடி அவனுள்ளே பதிந்து கிடந்தனவே!

அவன் உடலல்ல, ஆன்மா! ஆன்மாவை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது! அவன் அமரன்! இருண்ட மாயையை விட்டு அகன்று ஜோதிர்மயமான சத்தியப் பாதையின் அவன் யாத்திரை செய்வான்!

'' தமஸோ மா – ஜோதிர்க் கமய!''

வாய் முணுமுணுத்தது. கைவிலங்குகள் கருதி கூட்டின. அடங்கிய பாவத்தோடு காவலர்களைத் தொடர்ந்தான் அவன்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



LIFEBUOY
SOAP
புத்துணர்வு, சுறுசுறுப்பு, உடல்நலன்.. ஆஹாஹா,
எல்லாம் லைப்பாய் ஸ்நானத்தின் பலன்! கிருமிகள்
தோற்றுவதைத் தடுக்க யாரால் இயலும்; ஆனால்
அழுக்குடன் கிருமிகளைக் களைந்து அகற்றுவது லைப்பாய்.
நம் குடும்ப முழுமைக்கும் நல்வாழ்வு நல்குவது லைப்பாய்
நல்லுறவு...எல்லாம் இன்பமயம்!
லைப்பாய் இருக்குமிடம் அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
L.29-X32 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

